[illegible]

ஜூன் 1956 சென்னை விலை 6 அணா



உங்களின் நெடுநாள் விருப்பத்தை நிறைவேற்ற

பரீதா

ஜாவா பத்தை கைலிகள்

கண்கவர் வர்ண கலர்களில்
இப்பொழுது கிடைக்கிறது

பரீதா ஜாவாபத்தை பேப்ரிக்,
சாங்கரம்பந்தல் (தஞ்சை ஜில்லா)

அன்பும் இன்பமும் அறிவும் ஆற்றலும்
பண்பும் புகழும் இனிது விளங்க முரசு முழங்கவே!

மலர் 8	சென்னை, ஜூன்-1956 ஹிஜ்ரீ 1375, ஷவ்வால்—துல்கஃதா	இதழ் 12

ஏகாதிபத்திய வெறியர்களின் பேயாட்டம்		தலையங்கம்	... 3
முரசொலி		,,	... 6
காந்தியும் கடவுளும்			... 11
அன்புள்ள ஆசிரியருக்கு			... 12
கீமியா-யெ ஸஆதத்		அ. அப்துர் ரஹீம்	... 18
புது வாழ்வு	(தொடர் கதை)	'எஸ்கேஜி'	... 24
ஆனந்தக் கண்ணீர்	(சிறு கதை)	புகழேந்தி	... 33
இக்பால் கவிதையின்பம்		ஜே. எம். ஹுஸைன்	... 41
முஸ்லிம்களின் பொற்காலம்		நூர் அஹ்மது	... 46
நான் அறிந்த இஸ்லாம்		எஸ். சுந்தரமூர்த்தி	... 48
இளம் பிறையும் இஸ்லாமிய உலகமும்		'அஷ்ரஃப்'	... 53
இஸ்லாமிய காதைகள்			... 60
கேள்வி—பதில்		"கமால்"	... 62

முஸ்லிம் முரசில் வரும் கதைகளும் அவைகளிலுள்ள பெயர்களும் யாரையும் குறிப்பிடுவனவல்ல; எல்லாம் கற்பனை!

சந்தாவுக்கு எழுதும் பாரம்

இந்த பாரத்தைப் பூர்த்தி செய்து, கத்தரித்து, இதன் வலது பக்கத்திலுள்ள விலாசத்துக்கு அனுப்பிவைத்தால் உங்களுக்குத் தவறாமல் முஸ்லிம் முரசு கிடைக்கும்.

மானேஜர்,
முஸ்லிம் முரசு
18, ராமசாமி தெரு,
சென்னை-1.

நான் இன்று ஒரு வருட சந்தா ரூ. 4—8—0 (அயல் நாடு ஒரு வருடம் ரூ. 6. இரண்டு வருடம் ரூ. 11) மணி ஆர்டரில், அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியிருக்கின்றேன்.

பெயர்...

விலாசம்...

இறைவனின் இல்லத்துக்கு

ஹஜ் செல்ல

★ இன்னும் போதிய காலம் இருக்கிறது. ஆகாய மார்க்கமாக அதிசீக்கிரம் செல்லுங்கள்.

★ தொழில் அல்லது உல்லாசத்துக்காக வெளிநாட்டுப் பிரயாணத்துக்கு ஏற்பாடுசெய்யுங்கள்.

★ பாஸ் போர்ட், விஸா, விமானம் அல்லது கப்பல் டிக்கட்டுகள் இவைகளுக்கான வேலையை எங்களிடம் விட்டுவிடுங்கள்.

SUBEDAR & SONS

Travel Agents

Head Office: BOMBAY.

Madras Agent:

Abdur Rashid M. Khan,

7, Francis Joseph Street, (Near Y. M. C. A—G. T.)

MADRAS-1.

Telephone: Avl. 4694. Telegram: FAIRTRADE.

சுவையும், மணமும், உற்சாகமும் தந்து

சுகாதாரத்தைப் பாதுகாப்பது

"மக்தூம் டீ"

எமது ராமனாதபுரம் ஜில்லா ஏஜெண்டுகள்:

ஸ்ரீ. எஸ். கே. சுப்ரமணியம் செட்டியார்.
பெரிய கடை வீதி.
இராமனாதபுரம்.

ஜனாப் பி. எம். ஏ. சித்தீக்,
2-40, மெயின்ரோடு,
இளையாங்குடி. பரமக்குடி.

ஜனாப் சி. எம். முஹம்மது காஸிம்.
185, 186. மெயின் ரோடு,
முதுகுளத்தூர்.

எமது திருநெல்வேலி ஜில்லா ஏஜெண்டுகள்:

S. S. & V. M. G. & Co.,
ரயில்வே ரோடு, தென்காசி.
கடையநல்லூர் முதலியன.

S. S. & V. M. G. & Co.,
1-ஏ, பெருமாள் கீழரத வீதி,
திருநெல்வேலி ஜங்ஷன்.
கோவில்பட்டி முதலியன.

முஸ்லிம் முரசு

ஏகாதிபத்திய வெறியர்களின் பேயாட்டம்

சுதந்தரம் என்பது விலை மதிப்பற்றது. அதற்காக எவ்வளவு பெரிய தியாகம் செய்தாலும் தகும் என்பதை அல்ஜீரியா மக்கள் இன்று அகில உலகத்துக்கும் அறிவித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் வெறும் வாய்ப் பேச்சினால் அல்ல. அல்லது பேனா முனையால் அல்ல! போர் முனையில் வீர முழக்கம் செய்கின்றனர்! துப்பாக்கியின் துணை கொண்டு தங்கள் உரிமைக்காகப் போராடுகின்றனர். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான அரபுகளின் உயிர்கள் பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியர்களின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகிக் கொண்டிருக்கின்றன.

பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியர்களின் மூன்று லட்சம் போர் வீரர்களை 15 ஆயிரம் அல்ஜீரிய வீரர்களே எதிர்த்து நின்று உயிர் மரணப் போராட்டம் நடத்தி வருகின்றனர். "எங்கள் உரிமையைக் கொடு! அல்லது எங்களுக்கு வீர மரணத்தைக் கொடு!" என்பதுதான் இன்று அல்ஜீரியா வீரர்களின் அறைகூவலாக இருந்து வருகிறது. இதற்கும் பிரஞ்சு அரசாங்கம் அளிக்கின்ற பதில் என்ன?

உரிமையல்ல / மரணம்!

"சுதந்தரம் எங்கள் பிறப்புரிமை. அதை அடைந்தே ருவோம்" என்று சங்கநாதம் செய்யும் அல்ஜீரிய மக்கள் ற்றுக்கணக்கில் ஒவ்வொரு நாளும் வீர மரணம் எய்தி வருகின்றனர். ரெஞ்சுக்காரர்களின் படை பலம் கண்டு அல்ஜீரிய மக் ள் அஞ்சவில்லை; தாக்குதலுக்கு எதிர்த் தாக்குதல் நடத்துவதற்கும் வர்கள் தயங்கவில்லை. அரபு வீரர்களின் கொரில்லாப் போர் றையை பிரெஞ்சுக்காரர்கள் சமாளிக்க முடியாமல், செங்குத்

தீர்க்கச் செல்லும் ஹெலிகாப்டர் விமானங்களை ஏராளமாக இறக்குமதி செய்திருக்கின்றனர். இவைகளின் உதவியால் அல்ஜீரியாவின் சுதந்தரப் போரை அடக்கிவிடலாம் என்று பிரெஞ்சு ஏகாதிபத்தியம் கனவு காண்கின்றது.

''மரணம் முந்தி, வாழ்வு பிந்தி'' என்று முடிவு செய்துவிட்ட அல்ஜீரிய வீரர்களை ஆயிரம் ஹெலிகாப்டர்கள் தான் என்ன செய்யும்?

மூன்று இலட்சம் பிரெஞ்சுப் பட்டாளங்கள் 15 ஆயிரம் அல்ஜீரிய வீரர்களை முறியடிக்க முடியவில்லை என்றால், இன்னும் இருநூறு ஹெலிகாப்டர்கள் வந்தால்தான் என்ன பயன் விளையப் போகிறது?

இன்று அல்ஜீரியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்திய மிருக பலத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருப்பது வெறும் மனித பலம் மட்டுமல்ல; அதற்குத் துணையாக ஆன்மீக பலமும் அங்கே நின்று போராடுகிறது. இந்த உண்மையைப் பிரெஞ்சுக்காரர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

உரிமை வேட்கையை அடைந்துவிட்ட எந்த நாடும் அதிக காலம் அடிமையாக அமைதியுடன் வாழ்ந்ததென்று வரலாற்றிலே காணோம். எனவே பிரெஞ்சு அரசாங்கம் வீண் பிடிவாதம் செய்வதில் பயனில்லை. இந்தியப் பிரதமரின் ஐந்தம்ச 'சமாதான திட்டத்தை' ஏற்றுக்கொண்டு அல்ஜீரியாவுக்குச் சுதந்தரம் வழங்குவதுதான் அறிவுடைமையாகும்.

''அல்ஜீரிய அரபுகளின் சுதந்தரப் போர் வெற்றி பெறுக!'' என்று உலகம் வாழ்த்தட்டும்! ''பிரெஞ்சு ஏகாதிபத்திய வெறியர்கள் வீழ்க'' என்று சுதந்தர உலகம் தனது வன்மையான கண்டனக் குரலை வான் முட்டக் கிளப்பட்டும்.

வாழ்க, சுதந்தரம்! வீழ்க, ஏகாதிபத்திய வெறியர்களின் ஆதிக்கம்!

இலங்கையில் தமிழர் போராட்டம்

இலங்கையில் 1960லிருந்து சிங்கள மொழி மட்டுமே அரசாங்க மொழியாக இருக்குமென்று அரசினர் செய்த முடிவை எதிர்த்து இலங்கையில் வாழும் தமிழர்கள் துவக்கிய சத்தியாக்கிரகம் அங்குள்ள சிங்கள மொழியினருக்குச் சீற்றத்தையுண்டாக்கியிருக்கிறது. இதன் விளைவாக இலங்கையில்வாழும் தமிழர்களின் கடைகளும், பிற உடைமைகளும் காலிகளால் சூறையாடப்பட்டிருக்கின்றன. கொழும்பிலும் இன்னும் பல தமிழர் வாழும் ஊர்களிலும் கொலைகளும் கொள்ளைகளும் நடந்திருக்கின்றன. சிங்கள சமூகத் தலைவர்களின் பொறுப்பற்ற பேச்சும் செயலுந்தான் இந்த விபரீத விளைவுகளுக்குக் காரணம் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைத் தமிழர்கள் புதிய உரிமை எதையும் கோரவில்லை. இலங்கையில் நீண்ட காலமாகத் தமிழுக்கு இருந்துவரும் உரிமையும் பெருமையும் இன்று ஒழிக்கப்படக் கூடாது என்றுதான் போராடுகின்றனர். அவர்களின் நியாயமான விருப்பத்துக்கு நேர்மையுள்ள மனிதர் எவரும் இணங்கவே செய்வார். ஆனால் இலங்கை அரசாங்க அதிபர்களான சிங்களத் தலைவர்களிடம் நேர்மையும் நியாய புத்தியும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழர்களை இலங்கையிலிருந்து அடியோடு வெளியேற்றுவதற்கே அவர்கள் திட்டம் தீட்டுகின்றனர்.

தமிழர்களின் உயிருக்கு நிகரான உரிமைகளை இலங்கை அரசாங்கம் பறித்துக்கொள்வதைவிட ''சிறுபான்மையினருக்கு இலங்கைத் தீவில் இடமில்லை'' என்று தெளிவாகச் சொல்லிவிடலாம்! அப்படிச் சொல்லும் வரையில் தமிழர்களின் உரிமைகளும் உடைமைகளும் பாதுகாக்கப்படவேண்டுவது இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பும் கடமையும் அல்லவா? என்று திரு பண்டாரநாயகாவின் அரசாங்கத்தைக் கேட்கின்றோம்.

புதியதும் பழையதும்

எல்லாம் தெரிந்தவர்களுமில்லை; ஏதுந் தெரியாதவர்களுமில்லை. ஆனால் மறதி இருக்கிறதே அது எல்லாருக்கும் உண்டு. அது மனிதனுக்கு ஒரு சாபக்கேடு. பழையதும் புதியதுமான பல செய்திகள் மனத்தில் நிலைத்திருப்பதில்லை. உங்கள் நினைவுத் திறனுக்கு இதோ ஒரு சிறிய அறைகூவல். பதில் கூறுங்கள், பார்க்கலாம்!

1. "உலகத்தின் நிலமனைத்தும் உலகநாதன் உடைமையாம்"-இப்படியொருவர் இக்காலத்தில் பிரசாரம் செய்து வருகிறார். இவர் யார்?

2. தத்துவ ஞானத்தில் முற்றிப்போன ஒரு அறிஞர் "நானே அல்ஹக்" ('அனல் ஹக்') என்று சொன்னதற்காக சிரச்சேதம் செய்யப்பட்டார். இவர் பெயர் இஸ்லாமிய உலகில் பிரசித்தமானது. இவர் யார்?

3. உலகத்திலேயே மிக அதிகமாக மழை பெய்யும் இடம் எது?

4. மனிதர்களின் சாதாரண உஷ்ண நிலை எத்தனை டிகிரி?

5. நடுத்தர வயதுக்குப் பிறகு அதிக உணவும், தேகப்பயிற்சி இல்லாமையும் சேர்ந்தால் மனிதர்களுக்கு திடீர் மரணத்தை விளைவிக்கும் வியாதியொன்று வருகிறதென்பது டாக்டர்களின் ஒருமுகமான முடிவு. இந்த வியாதியின் பெயர் என்ன?

6. "மகான் முஹம்மது நபிக்கு முன்பு உலகில் ஒரு இலட்சத்து இருபத்தினாலாயிரம் நபிமார்கள் உதயமாகியிருந்தனர்" என்பது குர்ஆன் கூற்றா? அல்லது நபிகள் நாயக வாக்கா?

7. "இந்தியாவின் இராணுவ பலத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்" என்று இரண்டு பெரியார்கள் இப்போது யோசனை கூறுகின்றனர். இவர்கள் யார்?

8. கன்பியூஷியஸ்—இவர் ஒரு மதபோதகர், இவருடைய மதம் எந்த நாட்டில் பின்பற்றப்படுகிறது?

9. இஸ்லாத்தின் நம்பிக்கைகள் (ஈமான்) எத்தனை வகைப்படும்?

10. இலங்கைத் தீவில் தமிழ்ப் பேசும் முஸ்லிம்கள் எத்தனைப் பேர் இருக்கின்றனர்?

11. மதுரை நான்காவது தமிழ்ச் சங்கத்தை நிறுவியவரின் பெயர் என்ன?

12. ஸினிமா ஃபிலிம் நிமிஷத்துக்கு எத்தனை அடிகள் ஓடும்?

விடைகளுக்கு 9-ம் பக்கம் பார்க்க!

முரசொலி

நல்ல தீர்மானம்

சில ஆண்டுகளுக்கு முன் திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து தனியாக இயங்கி வரும் திராவிட முன்னேற்றக் கழகம் தனது பெயருக்குப் பொருத்தமாக சில முற்போக்கான கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் அமைத்துக் கொள்ள முன்வந்திருப்பதை நாட்டு மக்கள் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற மாத மத்தியில் திருச்சியில் நடைபெற்ற தி. மு. க. இரண்டாவது மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர் என்று தெரிய வருகிறது.

இவ்வளவு அதிகமான மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்ட அரசியல் மாநாடு ஒன்று. இந்தியா முழுதுமே வேறு எங்கும் சமீப காலத்தில் நடைபெற்றதில்லையென்று சொல்லப்படுகிறது. இத்துணைப் பெரிய மாநாட்டிலே அகில இந்திய அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த அநேக தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றிருக்கின்றன.

முன்னேற்றக் கழக மாநாடுகளில் வெறும் மேடைப் பிரசங்கமும் நாடகமுந்தான் நன்றாயிருக்கும் என்று ஏளனமாகப் பேசிவந்த எதிர்க்கட்சியினருக்குத் திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள் திகைப்பையே தந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அணு ஆயுதப் பரிசோதனைகளைக் கைவிடவேண்டும் என்ற அகில உலகப் பிரச்னையிலிருந்து தமிழே ஆட்சி மொழி ஆகவேண்டும் என்ற உள்நாட்டுப் பிரச்னை வரையில் 33 முக்கியப் பிரச்னைகளைப் பற்றிய தீர்மானங்களை மாநில மாநாடு நிறைவேற்றியுள்ளது. இவைகளில் இந்நாட்டு மக்களின் கவனத்தைஅதிகமாய்க் கவர்ந்தது அடுத்துவரும் பொதுத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகம் நேரடியாகப் போட்டியிட வேண்டும் என்ற தீர்மானந்தான்! தி. மு. க. வரலாற்றிலேயே ஒரு பெரிய திருப்பத்தைக் குறிக்கின்ற இத்தீர்மானத்துக்கு ஆதரவாக சுமார் 56000 பேர்களும். இதனை எதிர்த்து ஏறத்தாழ 4000 பேர்களும் வாக்களித்திருக்கின்றனர்.

பொதுத் தேர்தல்களில் போட்டியிடுவதென்ற தி. மு. க தீர்மானம் எதைக் குறிக்கின்றது?

தி. மு. க வெறும் பிரசார மேடையல்ல, நாடக அரங்குமல்ல; அசல் அரசியல் கட்சி என்பதைத்தான் குறிக்கின்றது.

காலத்துக்கு ஏற்றவண்ணம் கடமையாற்றவேண்டும் என்ற கருத்துள்ளவர்கள் வேறு விதமாக முடிவு செய்திருக்க இயலாது.

இந்தியா சுதந்தரம் அடைந்த பின்னரும் இங்கே காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் மக்களின் ஏகப் பிரதிநிதி ஸ்தாபனம் என்ற இழிநிலை ஒழிந்திருக்கவேண்டும். மாற்றுக் கட்சியொன்று மக்களின் கட்சியாக மலர்ந்திருக்கவேண்டும். ஒரு ஜனநாயக நாட்டிலே வன்மையுள்ள மாற்றுக்கட்சியொன்று இல்லையானால் அங்கே உண்மையான மக்களாட்சி நடைபெற முடியாது.

இந்தியா சுதந்தரம் பெற்ற பின் இரண்டாவது பொதுத் தேர்தலும் இதோ வந்து கொண்டிருக்கிறது! ஆனால் அகில இந்தியாவிலும் பொதுத் தேர்தல்களில் காங்கிரஸை எதிர்த்து நிற்கத்தகுந்த இன்னொரு கட்சி இன்னமும் உருவாகவில்லை,

ஆளுங்கட்சியின் அதிபர்கள் என்னதான் அப்பழுக்குஇல்லாதவர்களாயிருந்தாலும். அவர்கள்தவறு செய்யமாட்டார்களென்று திட்டமாகச் சொல்ல முடியாது அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தானே! எனவே எதிர்க்கட்சி, "ஜனநாயகத்தின் பாதுகாவலன்" என்று கருதப்படுகிறது.

தென்னாட்டைப் பொருத்தமட்டிலுமாவது திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மதிப்புயர்ந்த, பொறுப்பு வாய்ந்த பதவியை ஏற்றுக் கொள்ள முன்வந்திருப்பதை நாம் வரவேற்கின்றோம்.

தி. மு. கழகத் தலைவர்கள் சமூக வாழ்வில் தலைகீழ்ப் புரட்சியை விரும்புகின்றனர்.

அரசியலில் திராவிடத் தனி நாடே அவர்களின் குறிக்கோள். இந்த இரண்டாவது குறிக்கோளை எய்துவது காலத்தையும் சூழ்நிலையையும் பொறுத்திருக்கிறது. மத்திய ஆட்சியின் தொடர்புள்ள தமிழ்த் திருநாடோ அல்லது தனித்திராவிடமோ இந்நாட்டு மக்களின் ஆதரவால் தான் கிடைக்க முடியும், எனவே முதற் குறிக்கோளில் மாற்றம் தேவை மக்களின் மத நம்பிக்கைகளைப் பற்றியும், வேதம், கடவுள் பற்றியும் கழகத் தலைவர்கள் தலைக்கொரு விதமாகப் பேசினால் காரியம் கெட்டுவிடும். சமூக விஷயங்களில்தலைகீழ்ப் புரட்சியை விரும்பிய ஆப்கானிய மன்னர் அமானுல்லாகான், காலத்தையும் மக்களின் மனப்போக்கையும் கருத்திற்கொள்ளாமல் கடுமையான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டதால், நாட்டை விட்டே ஓட்டம் பிடிக்க நேர்ந்தது. தி. மு. க. தலைவர்களுக்கு உலக வரலாறு நம்மைவிட நன்றாகத் தெரியும். ஆதலால் அவர்களுக்கு ஆலோசனை கூற நாம் யார்?

கேள்வி-பதில்

இந்த இதழில் அன்பளிப்புப் பெற்றவர்கள்:

1. ஏ. அமானுல்லாகான், பெங்களூர் ரூ. 3
2. எஸ். எம். பாஷா, மதுரை ரூ. 3
3. அ. முஹம்மது இபுனூஹு, பலிங் மலாயா ரூ. 2

நன்றி!

சென்ற மாதம் வெளிவந்த முஸ்லிம் முரசு ஈத் மலரை இதயபூர்வமாகப் பாராட்டி ஏராளமான நேயர்கள் கடிதம் வரைந்துள்ளனர். இக்கடிதங்களைப் படிக்கும்பொழுது எழுத்தாளர்கள் ஊக்கமும் உற்சாகமும் பெறுவார்கள் என்று நம்புகிறோம். வெறும் பொழுது போக்கிற்காக இல்லாமல் நல்லறிவையும் பண்பாட்டையும் புகட்டக் கூடிய கதைகளையே நம் வாசக நேயர்கள் விரும்புகின்றனர் என்பதை இந்த இதழில் பிரசுரமாகியுள்ள சில கடிதங்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம். கதைகளிலும் கட்டுரைகளிலும் மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிட்டுப் பத்திரிகைகளைப் பிரபலப் படுத்தும் சிறுமைக் குணம் சிலரை ஆட்கொண்டிருக்கும் இக்காலத்திலும், அறிவு, ஒழுக்கம், பண்பாடு ஆகியவைகளை வலியுறுத்தும் அழகிய சிறுகதைகளையே நேயர்கள் விரும்புகின்றனர் என்பதை இக்கடிதங்கள் உணர்த்துகின்றன. இந்த உண்மையை நம் இளம் எழுத்தாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

நல்ல கதைகளையும் கட்டுரைகளையும் புகழ்ந்து எழுதியதுடன் மட்டும் நம் வாசக நேயர்கள் நின்று விடவில்லை. அவைகளை வெளியிடும் பேறு பெற்ற முஸ்லிம் முரசுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் குறைவில்லாமல் பாராட்டுதைகளை வழங்கியுள்ளனர். இவர்களுக்கெல்லாம் நம் இதய பூர்வமான நன்றியை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அட்டைப் படம்

"அரசியல் வாழ்வில் எனக்கு ஆசையில்லை. ஆனால் அரசாங்கத்தைத் திறமையுள்ளதாகச் செய்யவும், ஊழல்களை ஒழிக்கவும் கருதியே ஆட்சிப் பொறுப்பை நான் ஏற்றுக்கொண்டேன். காயிதெ ஆஸம் ஜின்னாவுக்கு விரோதமாக நான் வேலை செய்தேன் என்றும், காயிதெ ஆஸம் ஜிந்தாபாத் என்ற கோஷத்தை நான் ஆதரிக்கவில்லை என்றும் என்மீது லீகர்கள் குற்றம் சாட்டுகின்றனர். ஆனால் நான் சிறையிலிருந்தபோது காயிதெ ஆஸம் காலமானார் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் திடுக்கிட்டுப் போனேன். ஏனென்றால் அவரைப் பின்பற்றியவர்களில் ஒருவர்கூட அவர் கடைப்பிடித்த உன்னத நெறியில் ஒழுக முடியாது. ஆனால் நான் சிறையிலிருந்து வெளிவந்தவுடன் கலந்துகொண்ட முதற் பொதுக் கூட்டத்தில், 'காயிதெ ஆஸம் ஜிந்தாபாத்' என்று முதன் முதலாகக் கோஷமெழுப்பியவன் நான்தான்" என்று மேற்குப் பாக்கிஸ்தான் முதலமைச்சர் டாக்டர் கான்சாஹிப் சென்றமாத இறுதியில் கூறினார். மேற்குப்பாக்கிஸ்தான் சட்ட சபையில் டாக்டர் கான் சாஹிபின் குடியரசுக் கட்சிக்கும் முஸ்லிம் லீக்குக்குமிடையே நடைபெற்ற பலப்பரீட்சையின் போட்டா போட்டியில் மின்னலும் இடியுமாக இருந்தபோதுதான் டாக்டர் கான் சாஹிப் மேலே கண்டவாறு கூறி எதிரிகளின் வாயை அடக்கினார். இறுதியில் முஸ்லிம் லீக் தோல்வியடைந்தது. டாக்டர் கான் சாஹிபின் குடியரசுக் கட்சி வெற்றிபெற்றது. 303 உறுப்பினர்களையுடைய மேற்குப் பாக்கிஸ்தான் சட்டசபையில் டாக்டர் சாஹிபின் புதிய கட்சிக்கு 186 பேர்கள் இருக்கின்றனர். எனவே, டாக்டர் சாஹிப் நல்லவராக மட்டுமில்லை, வல்லவராகவும் விளங்குகிறார்.

காயிதெ ஆஸம் ஜின்னா, லியாகத் அலிகான் இவர்களுக்குப் பிரகு பாக்கிஸ்தானில் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் இருக்கின்ற தலைவர்களைக் காண்பது அரிதாகிவிட்டது. அதிகார மோகமும் பதவிப் போட்டியும்தான் பாக்கிஸ்தான் அரசியல்வாதிகளிடையே இன்று தலைவிரித்தாடுகின்றன. இந்நிலையில் டாக்டர் கான் சாஹிப் போன்ற நல்ல மனிதர்கள் அங்கே அதிகாரப் பதவியில் இருப்பதைக் காண நமக்கு மகிழ்ச்சியுண்டாகிறது. அந்த மகிழ்ச்சிக்கு அடையாளமாகவே டாக்டர் கான் சாஹிபின் உருவப்படத்தை இந்த இதழின் அட்டையில் வெளியிடுகின்றோம்.

அடுத்த இதழ்

ஹஜ்ஜுப் பெருநாள் பற்றிய விசேஷ செய்திகளுடன் வருகிறது

★ இரண்டு அருமையான சிறு கதைகள்

★ அல்ஜீரியா,

★ அவிஸினா வரலாறு

★ தமிழில் பிறமொழிச் சொற்கள், மற்றும் பல வருகின்றன.

ஜூலை இதழ் முதல் தேதியன்றே வெளிவரும்.

கடவுள் நம்பிக்கை அவசியமில்லையா?

மகான் புத்தரின் 2500-ஆம் ஆண்டு விழாவை சென்ற மாதம் இந்திய அரசாங்கம் ஆடம்பரமாகக் கொண்டாடியது. புத்தர் இந்தியாவில் பிறந்திருந்தும் இங்கு அவருக்கு இவ்வளவு காலமாய் உரிய மரியாதை செலுத்தப்படவில்லை என்பது பெருங் குறையாகத்தான் இருந்துவந்தது. அந்தக் குறை இப்போது நீங்கிவிட்டது.

புத்தரின் பரிநிர்வாணப் பெரு விழா அண்மையில் இந்நாட்டிலே கொண்டாடப் பெற்றபோது விவாதத்துக்குரிய ஒரு முக்கியமான விஷயம் அடிபட்டது. புத்தர் கடவுள் நம்பிக்கை யில்லாதவர் என்று சிலர் கருதினர். நம்மைப் போல் கடவுள் உண்டா இல்லையா என்ற சர்ச்சையில் புத்தர் இறங்கவில்லை என்பது உண்மைதான்!

அதற்குக் காரணம் என்ன?

கடவுள், வேதம் ஆகியவற்றின் பெயரால் கற்பனைகள் மலிந்து, அறியாமை வளர்ந்து, ஆஷாடபூதிகளின் ஆதிக்கம் ஓங்கியிருந்த காலத்திலே புத்தர் வாழ்ந்தார். அத்தனை அக்கிரமங்களுக்கும் அறியாமைக்கும் அடிப்படைக் காரணமாயிருந்த கடவுள் நம்பிக்கையைப் புத்தர் வலியுறுத்தாமற் போனதில் ஆச்சரியமில்லை.

ஆனால் சமயத் தலைவர்கள், சன்மார்க்க சீலர்கள் சொல்லாத எதையும் புத்தர் சொல்லவில்லை. துயரங்களுக்கெல்லாம் காரணம் ஆசையே என்றார். நல்ல பேச்சு, நல்ல செயல், நல்ல குணம், நல வாழ்க்கை, நன் முயற்சி இவைகளே சன்மார்க்கம் என்று அவர் போதித்தார். மூட நம்பிக்கைகளையும், சாதி வேற்றுமைகளையும் ஒழிக்க வேண்டுமென்றார். கற்பு நிலையை வலியுறுத்தினார். கடுந் துறவைக் கண்டித்தார். மதுவருந்த வேண்டாமென்றார். மக்கள் யாவரும் சமம் என்றார். புரோகிதத்தைக் கண்டித்தார். பொய்யும் வஞ்சமும் ஒழிக்கப்படவேண்டுமென்றார்.

இவையனைத்தும் மகான் முஹம்மது நபியின் போதனைகளுள் அடங்கியுள்ளன. ஆனால் ஒரு முக்கிய வேற்றுமையுண்டு. புத்தர் கடவுள் நம்பிக்கையை மக்களுக்கு வலியுறுத்தவில்லை. ஆனால் மனிதர்களின் நற்செயல்களுக்கெல்லாம் கடவுள் நம்பிக்கையே அடிப்படை என்பது மகான் முஹம்மது நபியின் கருத்து. அந்த நம்பிக்கையே இஸ்லாத்தின் மாபெரும் வெற்றிக்குக் காரணம் என்பதை உலக வரலாறு உணர்த்துகின்றது. ●

புதியதும் பழையதும்

★

1. வினோபா பாவே
2. மன்ஸூர் ஹல்லாஜ்
3. சிரபுஞ்சி (அஸ்ஸாம்)
4. 98.4
5. இருதய நோய்
6. நபிகள் நாயக வாக்கு
7. ராஜாஜி, வினோபாஜி
8. சீனா
9. இஸ்லாத்தில் 'ஈமான்' அல்லது நம்பிக்கை ஏழு வகைப்படும் (1) அல்லாஹ் (2) வானவர்கள் (3) இறைவன் அருளிய வேதங்கள் (4) இறைவன் அனுப்பிய திருத்தூதர்கள் (5) மறுமை (6) நன்மை தீமைகளின் பலன் (7) மரணத்துக்குப் பின் உயிர்த்தெழுதல். இந்த ஏழு உண்மைகளையும் முஸ்லிம்கள் உள்ளத்தால் உறுதி கொள்ளுதல் வேண்டும்.
10. ஆறு இலட்சம்
11. பாண்டித்துரைத் தேவர்
12. 90 அடி.

புத்தர் பரிநிர்வாண விழாவை யொட்டி, "கடவுள் நம்பிக்கை அவசியமா? இல்லையா?" என்ற புதிய பிரச்னையொன்று இத்தமிழகத்தில் எழுந்துள்ளது.

"கடவுளை நம்பாமலே நாம் நல்லவர்களாக இருக்கமுடியும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க முடியும். எனவே கடவுள் "நம்பிக்கை அவசியமில்லை" என்று சிலர் எழுதுகின்றனர். "கடவுளை நம்புவதாகச் சொல்பவர்களுள் அயோக்கியர் உண்டு. கடவுளை நம்பவில்லை என்று சொல்பவர்களுள் யோக்கியர்கள் உண்டு. செய்கை முக்கியமா? கொள்கை முக்கியமா?" என்று கேட்கப்படுகின்றது. செயல்தான் முக்கியம்! சந்தேகமில்லை. ஆனால் நம்பிக்கையில்லாமல் செயல் எப்படி உருவாகும்? குறிக்கோள் இல்லாமல் கோரிய பொருளை எய்துவது எங்ஙனம்?

கடவுளை நம்புவதால் எவ்வித பயனுமில்லை என்று நினைப்பவர்கள் காந்திஜியின் வாழ்க்கையில் நிகழ்ந்த ஒரு சம்பவம் பற்றிப் படித்துப் பார்க்க வேண்டும். புலனிச்சைகளை அடக்கியாளப்பழகியிருந்த காந்திஜியேஒரு சமயம் ஒழுக்கத்தில்வழுக்கி விழவேண்டிய நேரம் வந்ததென்றால் மற்றவர்களைப் பற்றி என்ன கூறுவது? 'அபாயகரமான அந்தச் சோதனையிலிருந்து என்னைக் காப்பாற்றியது கடவுள் நம்பிக்கைதான்'' என்று காந்திஜி கூறுகின்றார். ஐம்புல இச்சைகளையும் அடக்கியாளக் கற்றிருந்த மகாத்மா காந்தியின் கதையே இப்படி இருக்கிறதென்றால், நிமிஷத்துக்கு நிமிஷம் ஐம்புல இச்சைகளுக்கும் இலக்காகும் ஏனைய மனிதர்களின் கதி என்ன? கடவுளை நினையாமலே ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க முடியும் என்று நம்புகின்றவர்கள் காந்திஜி சொல்லும் கதையைப் படித்துத் தெளிவு பெறட்டும். கடவுள் நம்பிக்கையில்லாதவர்களில் நூற்றுக்கு எத்தனை பேர் ஒழுக்கத்தில் உயர்ந்து விளங்க முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கட்டும்.

அல்லா(ஹ்)வின் இல்லம் நோக்கி

முஸ்லிம் முரசின் பேராதரவாளர்களில் ஒருவரும், நமது நண்பருமான முதுகுளத்தூர் ஜனாப் ஏ. என். எச். அப்துல் கனீ அவர்கள், இவ்வருடம ஹஜ்ஜு செய்யும் பொருட்டு நாளது 16—6—56ந் தேதியன்று ரங்கூனிலிருந்து ஆகாய விமானத்தில் மக்காவுக்குப் பயணமாகின்றார்கள். நண்பர் தமது ஐந்தாவது கடமையை நல்ல முறையில் நிறைவேற்றிக் கொண்டு நலமுடன் தாயகம் திரும்ப இறைவன் அருள் புரியுமாறு வேண்டுகின்றோம்.

ஜனாப் ஏ. என். எச். அப்துல்கனி

காந்தியும் கடவுளும்



"கடவுள் நம்பிக்கை முக்கியமல்ல; செயல் தான் முக்கியம். கடவுளை நினையாமலே நல்லவர் களாக இருக்க முடியும், துக்கத் தைத் தாங்கிக்கொள்ள முடியும். ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க முடி யும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் "கடவுள் நம்பிக்கை தான் என்னை நல்லவனாக நடக்கச் செய் கிறது" என்று காந்திஜி கூறுகிறார். காந்திஜி தமக்கும் டாக்டர் மாட் என்னும் கிறிஸ்துவ மதப்பிரசாரக ருக்குமிடையே நிகழ்ந்த உரையாட லைப்பற்றி 'ஹரிஜன்' பத்திரிகையில் 1937-ல் பின்வருமாறு எழுதியுள் ளார்:

டாக்டர் மாட்: உங்களுக்கு மிக அதிகமான திருப்தியும் நம்பிக் கையும் அளிப்பதென்ன?

காந்திஜி: கடவுளின் மீது எனக்குள்ள நம்பிக்கையும், அதன் பயனாக என் மீதே எனக்குள்ள நம்பிக்கையுந்தான்.

டாக்டர் மாட்: உங்களுக்கு அதைரியம் உண்டாகும்போதெல் லாம் கடவுள் நம்பிக்கையில் தானே ஆறுதலடைகிறீர்கள்?

காந்திஜி: ஆம், அதனால்தான் எல்லாம் நலமாகவே முடியும் என்று நம்புகிறவன் நான் என்று எப்பொழுதும் என்னைப் பற்றிக் கூறி வந்திருக்கிறேன்.

டாக்டர் மாட்: நானும் அப்படி நம்புகிறவன்தான். நம் கஷ்டங்கள் தான் நமது விமோசனம். அவை களே நம்மை உயிருள்ள ஆண்ட வனிடம்முறையிடச் செய்கின்றன.

காந்திஜி: ஆம்; என் கஷ்டங் களே என்னுடைய நம்பிக்கை யைப் பலப்படுத்தியிருக்கின்றன, ஒவ்வொரு கஷ்டத்திலும் எனது நம்பிக்கை உயர்ந்தே வந்திருக்கிறது. அது குறையாமலே இருக்கி றது. சிலமாதங்களுக்கு முன்புநான் பம்பாயில்இருந்தேன். அப்போதுதான் எனக்கு ஒரு பெரிய சோதனையுண்டாயிற்று. என் உடலிச்சைக்கு அது ஒருமக த்தான சோதனைநேரம். நான் தூங் கிக் கொண்டிருந்தபோது திடீ ரென ஒரு உணர்ச்சியுண்டாயிற்று. ஒரு பெண்ணைப் பார்க்க வேண்டு மென்ற விருப்பம் என்னுள் எழுந் தது. சுமார் நாற்பது வருடகால மாக, உடல் சம்பந்தமான இச்சை யிலிருந்து விடுதலை பெற முயன்று வரும் ஒரு மனிதனுக்கு இத்த கைய பயங்கர அனுபவம் உண்டா னதை நினைக்க வேதனையாகத் தான் இருக்கும். இறுதியில் அந்த உணர்ச்சியை அடக்கி அதன்மீது வெற்றி கொண்டு விட்டேன். ஆனால் அன்று நான் என் வாழ்க் கையிலேயே மிகப் பெரிய சோத னையை எதிர்நோக்கி நின்றேன் என்பதில் சந்தேகமில்லை. அன்று என் ஆசைக்கு நான் இரையாகி யிருந்தால் அடியோடு ஒழிந்தேன் என்றுதான் அர்த்தம். நான் பெரி தும் கலக்கமடைந்து விட்டேன். ஏனெனில், தன்னையே அடக்கியா ளும் வாழ்க்கையிலிருந்துதான் பலமும் சமாதானமும உண்டாகின் றன. என்னிடமுள்ள சாந்தியைக் கண்டு அநேக கிறிஸ்துவ நண்பர் கள் பொறாமைப் படுகின்றனர். அந்தச் சாந்தியானது, இச்சையை எதிர்த்துப்போராடுவதற்குரியவலி மையை எனக்கருளிய கடவுளிட மிருந்துதான் வருகிறது.

டாக்டர் மாட். நானும் இதை ஒப்புக்கொள்ளுகிறேன். தூய்மை யான இருதயமுடையவர்கள் ஆசீர் வதிக்கப் பெற்றவர்களாயிருக்கின் றனர். ஏனெனில், அவர்கள் கடவு ளைக் காண முடியும்.

அன்புள்ள ஆசிரியருக்கு அஸ்ஸலாமு அலைக்கும்!

......இவ்வருட ஈத் மலர் ஒரு கலை மலர். எல்லையில்லா மகிழ்ச்சியில் என்னை ஆழ்த்திவிட்டது.

எஸ். முஹம்மது ஹனீபா,
கிட்டா, மலாயா.

இவ்வருட ஈத் மலர் என் இதயங் குளிரச் செய்தது.

குளச்சல் பி. அப்துர் ரஹ்மான்

ஈத் மலரிலுள்ள எல்லாக் கதைகளுமே நன்றாயிருக்கின்றன.

காரை எம். ஓ. அப்துல் ஜப்பார்

என் விழிகளிலிருந்து இரு சொட்டு நீரை வெளிவரச் செய்தது தாஹிர் "தந்த பிரார்த்தனையின் பயன்" மல்லாரியின் இரத்தின மாலையில் நவரசம் ததும்புகிறது. மலர் முழுதும் அறிவு மணம் கமழ்கிறது இடைவிடாது எட்டாண்டுகளாக இனிய இஸ்லாமியப் பணி புரிந்துவரும் தாங்கள் வாழ்க!

கம்பம் சி மு. அலீ ஜின்னா

"ஜேயெம்' எழுதிய 'எரிமலை' யையும் மற்றும் பல கட்டுரைகளையும் நண்பர்களுடன் சேர்ந்து படித்து அளவு கடந்த மகிழ்ச்சியுடன் ஈத் பெருநாளைக் கழித்தேன்.

நுவெரெலியா-ம. ள மு. ஹனீபா

'எரிமலை' விரு விருப்பாக இருந்தது ஆனால் முடிவுதான் நன்றாயில்லை. மகனீயின் "நேர்மையின் பரிசு" போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தது. ரத்தின மாலையை எழுதிய தோழருக்கு ரத்தின மாலை தான் சூட்டவேண்டும்! 'பிறை தந்த செய்தி' யும் ஜிப்ரால்டர் வீரர் தாரிக்கின் வரலாறும் உறங்கிக் கிடக்கும் முஸ்லிம் சமூகத்தைத் தட்டியெழுப்பிப் புத்துணர்ச்சி யூட்டும்.

தா. அப்துல் ஹமீது.
வெ. மீ. அ. முஹம்மது அலீ

'எஸ்கேஜி' எழுதிய 'புதுவாழ்வு' (தொடர் கதை) அறிவூட்டக் கூடியதாக இருக்கிறது. சம்பந்தம் எழுதிய 'நூர்ஜஹான் சபதம்' பொருத்தமாகவும் வீரத்துடனும் முற்றுப் பெற்றது பற்றி மகிழ்ச்சி யடைகிறேன்.

தோப்புத்துறை இ. ஹமீது சுல்தான்

'புது வாழ்வு' ஆரம்பம் தவழ்ந்து செல்லும் தென்றல்போல் இருக்கிறது.

அபிராமம் எஸ். எம். கனி

பொன்மொழிகள் பல மலரை அணி செய்கின்றன. 'பிர்தவ்ஸியின் மகள்' மிகப் பிரமாதம்! தலைப் பெருநாள் சிறப்பாக உள்ளது.

அபிராமம், கே. எம். அப்துல் ஹமீது

துவக்கத்திலிருந்தே முஸ்லிம் முரசை தொடர்ந்து படித்து வருபவர்களில் நானும் ஒருவன். மலரில் சிறந்த பல அம்சங்கள் இருக்கின்றன. 'எரிமலை' தமிழ் நாட்டு முஸ்லிம்களின் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

எஸ். எஸ். தாஜுத்தீன்
பரங்கிப்பேட்டை

இந்த வருட ஈத் மலர் மற்ற மலர்களைவிட நன்றாக அமைந்திருக்கிறது! முரசின் அபிவிருத்திக்காக ஆண்டவனிடம் பிரார்த்திக்கிறேன்.

மதுரை சா. முஹம்மது யூசுப்

விறு விறுப்பான தெளிவான எளிய நடையில் எழுதப்பட்ட சிறு கதைகள் கட்டுரைகள் எனும் மலர்களால் தொடுக்கப்பட்ட அழகிய மாலை அது. தொடர் கதையை வெளியிட்டுள்ள முறை பாராட்டத் தக்கது. மாத இதழாக இருப்பதால் தொடர் கதைக்குப் பத்துப்பக்கங்களாவது ஒதுக்கவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

எம். ஐ. ஹாஜா அமீர்
கேகாலை (இலங்கை)

மஹதி எழுதிய 'பிர்தவ்ஸியின் மகள்' எங்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. முரசில் விஞ்ஞானப் பகுதி யொன்று ஆரம்பித்தால் எங்களைப் போன்ற மாணவர்களுக்கு மிகப் பயனுள்ளதாக இருக்கும்.

அதிராம்பட்டினம் எல். எஸ். எம். அப்துல் காதர். அப்துல் கபூர்

சிறு கதைகளும் சித்திரங்களும் என்னை இன்ப போதையில் ஆழ்த்தின.

ஏ. ஆர். எல். ஏ. சலாம்
நாவலப்பிட்டியா (இலங்கை)

மலரைப்பற்றி என்னுள்ளத்தில் ஒரு கவிதையே உருவாகி விட்டது!

அட்டைப் படமோ
அழகின் சிகரம்
கவிஞர் இக்பாலின்
கருத்துள்ள கட்டுரை
அள்ளுது நெஞ்சை
அவிஸீனு வரலாறு
தெள்ளிய தமிழில்
தித்திக்கும் நடையில்
இலங்குது நாடகம்
இரத்தின மாலை
ஈதுப் பெருநாளை
இடையிலே பிணைத்து
எழுதிய கதைகளின்
இனிமையை யென் சொல்வேன்?

சிட்டகாங் ஏ. காதிர்

'இலட்சியப் பெருநாள்' என்ற தலையங்கம் மலரின் மணி மகுடமாக விளங்குகிறது. அங்குமிங்குமாக மிளிரும் ஏழு கதைகளும் ஏழு மாணிக்கங்கள்! மகனியின் 'நேர்மையின் பரிசு' சிறு கதை யுலகத்திற்கு ஆசிரியர் அளித்த விருந்தாகும்.

மஸ்ஹருத்தீன், சென்னை

மலரில் ஆங்காங்கு காணப்படும் மணி மொழிகள் மலருக்கு இரட்டைப் பங்கு வெற்றியைத்தருகிறது. எரிமலை, தலைப் பெருநாள் முதலியவை கருத்துள்ள கதைகள்.

தாஜுத்தீன், கொரடாச்சேரி

போன வருட மலரை விட இவ்வாண்டு மலர் போற்றக்கூடியதாக இருக்கிறது.

தஞ்சை ஸி. எம். சுலைமான்

'பிரார்த்தனையின் பயன்' 'நேர்மையின் பரிசு' 'தலைப் பெருநாள்' அட்டைப்பட விளக்கம் (கவிதை) இவைகள் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

எச் முஹம்மது சித்தீக்
கோலாலம்பூர்

சிந்தனைக்கு வேலை தரும் கட்டுரைகளையும், சீர்திருத்தக் கருத்துக்களையும், குர்ஆனின் நீதிகளையும் அறிவுரைகளையும் போதிக்கும் சிறு கதைகளையும் கொண்ட இமமலரை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

கே. ஏ. காதர் மொய்தீன்.
சென்னை—13

ஆயிரமாயிரம் குடும்பங்களில் நடைபெறும நிகழ்ச்சிகளை வைத்துப் பின்னப்பட்ட கதைகள் சிந்தனையைத் தூண்டுகின்றன.

எம். எஸ் காஜா முஈனுத்தீன். நீடூர்

முதன் முதலில் என்னைக் கவர்ந்தது அட்டைச் சித்திரந்தான்.

எம். ஏ. அப்துல் வஹாப், சிங்கப்பூர்

நேர்மையின் பரிசு. பிரார்த்தனையின் பயன், ஆகிய கதைகள் நன்றாயிருக்கின்றன.

கே. எஸ். கே. முஹம்மது மதார்,
வண்டிப்பெரியார்

அலீ(ரலி)யின் அமுத மொழிகள் அறிவுக்கு விருந்தாக அமைந்துள்ளன. உங்கள் சேவைக்கு என் நன்றி.

என். எஸ். ரஹ்மத்துல்லா, கம்பம்

எழில் ஒழுகும் வண்ண அட்டைப் படம் கண்ணைக் கவருகிறது. அதற்கேற்ற மீண்டுவரும் பேரின்பம் கருத்தை யள்ளுகிறது!

ஜி. அமானுல்லா, கம்பம்

'பர்தாவும் பலதார மணமும்' என்ற டாக்டர் இக்பால் சொல்லோவியம் என் எண்ணத்தில் சிறப்பிடம் பெற்றுவிட்டது.

எம். ஏ. பத்தாஹ், பாக்கம்-
கோட்டூர்

இவ்வருட ஈத் மலர் ஒரு அற்புத சிருஷ்டி.

ஏ. எம். அப்துல் அல்லாம்

நமது முஸ்லிம் சகோதரிகளும் ஷரீபாவைப் பின்பற்றினால், அவர்களின் கணவர்களையும் ஆண்டவன் பாதையில் கொண்டு செல்ல முடியும்.

எஸ். எம். அப்துல் சலாம் ஷா,
மஹ்பூப் நகர், ஹைதராபாத்-
டெக்கான்

முஸ்லிம் முரசு முஸ்லிம் உலகத்துக்குச் செய்துவரும் அரிய தொண்டுக்கும், வாசகர்கள் முரசுக்கு அளித்துவரும் பேராதரவுக்கும் இம்மலர் ஒரு சிறந்த எடுத்துக் காட்டு.

இ. அப்துல் ரஜாக்
மரைக்காயர், நாகூர்

ஈத் மலர் என்னைப் பரவசப் படுத்தியது.

என். பி. முஹம்மது ஷரீப், அரியகுடி

மலரின் தலையங்கம் ஒன்றுக்குமட்டும் 12 அணா கொடுக்கலாம்.

கே. கை. அப்துல் அஜீஸ், டெக்கலி

பொதுவாக சிறு கதைகள் அனைத்தும் நன்கு அமைந்திருந்தன. எனினும் பிரார்த்தனையின் பயன், நேர்மையின் பரிசு இரண்டும் எனக்குப் பிடித்திருந்தன. நாத்திகம் நடனமிடும் நம் நாட்டிலே இத்தகைய சிறு கதைகள் தேவை.

நா. செ. அப்துல் லத்தீப், சிங்கப்பூர்

.........இதைப்போல் என்றென்றும் முரசு முழங்க இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஏ. நயினாமுஹம்மது, ராதானூர்

கருத்து நிறைந்த கதைகள். கட்டுரைகள் எல்லாம் எவ்வருட மலரையும்விட இவ்வருட மலரை அதிக நறுமணமுள்ளதாகச் செய்துவிட்டன.

ஆலூர், எம். எம். ஜக்கரியா,
சிங்கப்பூர்

கதைகளும் கட்டுரைகளும் இஸ்லாமிய இளைஞர்களின் இதயத்தைத் தட்டியெழுப்பும்படி அமைந்துள்ளன.

எஸ். ஏ. தாஹிர், கொழும்பு

ஈத் மலர் கண்ணுக்கு அழகுமட்டுமல்ல; அறிவுக் கருவூலமாகவும் அமைந்துள்ளது. ஒரே மலரில் ஓராயிரம் மணம்!

எம். ஏ. அப்துல் ஹாதி. பாலிங்-
கிட்டா

'எஸ்கேஜி எழுதும் "புதுவாழ்வு" என்னும் சமூகத் தொடர் கதையில் அறிவுக்கு விருந்தளிக்கும் எண்ணற்ற கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

பி. ஜி. ஏ. ஸமத், ரவூப், மலாயா

மலர் மட்டற்ற மகிழ்ச்சியூட்டுகிறது.

எம். எஸ். எம். நாஸீம் பாச்சா.
வேர்வாலை, சிலோன்

இவ்வருட ஈத் மலர் எல்லா அம்சங்களிலும்போற்றத்தக்கது. மகனி எழுதிய நேர்மையின் பரிசு 'பலே ஜோர்'

ஏ. எஸ். அப்துல் ஹமீது, வடகரை

'இஸ்லாமிய காதைகள்' தொடர்

ந்து வெளி வரவேண்டும்.

எம். ஏ. எம். ரூஹுல்லா,
சம்மாந்துறை, சிலோன்

தொடர்ந்துவரும் 'கீமியா வெ ஸஆதத்' பன்முறை படித்து ஞாப கப்படுத்த வேண்டிய அறிவுக் களஞ்சியம்,

எம். எம். அன்ஸாரி, கண்டி

அட்டைப் படம் மலருக்குப் பொருத்தமாக இருப்பதுடன் அருமையான கட்டுரைகளும் கதை களும் படிக்கப்படிக்கத்தெவிட்டாத தேன் அமுதமாக இருக்கின்றன.

எஸ். பி. அப்துல் ரஹீம்
சுங்கை சிப்புட் (மலாயா)

ஈத் மலர் மிகவும் பாராட்டத் தக்க முறையில் அமைந்துள்ளது.

கே. ஆர். ஏ. சலீம், சென்னை

...கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. எஸ், சையிது அஹ்மது எழுதிய 'பிறை தந்த செய்தி' பாராட்டத்தக்கது.

டி. ஏ. ரஜாக், வனபர்த்தி

ஈத் மலர் பிற சமூக நண்பர்களி டம் பெருமையோடு கொடுத்துப் படிக்கச் சொல்லத்தக்க கருத்துக் களஞ்சியம்,

பி. கே. இ. அப்துல்லா,
வலங்கைமான்

"புது வாழ்வு"—சமூகத் தொடர் கதை படிப்பதற்கு இனிமையாக வும். விறு விறுப்பாகவும் இருக் கிறது.

எப். எச், ரஹ்மான், வடகால்

முஸ்லிம் முரசின் ஈத் மலர் இவ் வருடம் மிகவும் உயர்ந்த முறையில் அமைந்திருப்பது கண்டு மகிழ் வெய்தினேன். மார்க்கத் துறையில் அரிய விஷயங்களையும், அரசியல் துறையில் தெளிவான அபிப்ராயத் தையும் தாங்கள் வெளியிட்டு வரு வதைப் பாராட்டுகிறேன். இவ் வருட ஈத் மலரில் கட்டுரைகளை விட கதைகளுக்கு அதிக இடம் கொடுத்திருப்பதன் மூலம் வாசகர் களின் நீண்டகால ஆசையைப் பூர்த்தி செய்து விட்டீர்கள் என்று நினைக்கிறேன். பொதுவாக, மாத வார இதழ்களைப்படிக்கின்றவர்கள் கட்டுரைகளை விட கதைகளையே பெரிதும் விரும்புகிறார்கள். இத னால் கட்டுரைகள் தேவையில்லை என்று அர்த்தமல்ல. இரண்டும் அவசியந்தான். ஆனால் கதைக ளுக்கு முதலிடம் கொடுத்து, கட்டு ரைகளையும் பிரசுரிப்பதை நான் விரும்புகிறேன். முஸ்லிம் முரசு செய்துவரும் சிறந்த சேவையை அனைவரும் நன்கு அறிவார்கள், அதன் பணி மேலும் சிறந்துவிளங்க இறைவன் அருள் புரியுமாறு பிரார் த்திக்கின்றேன்.

பி. எம். பி. முஹம்மது தாவூத்.
சென்னை—1.

ஏப்ரல் இதழில்—"வெற்றி"

ஏப்ரல் இதழில் வெளிவந்த 'ஜேயெம்' எழுதிய 'வெற்றி' என் னும் கதை பேராசைக்காரர்களுக் குப் பெரிய படிப்பினை!

எம். ஏ. எம். நூஹ், சம்மாந்துறை
(சிலோன்)

இது போன்ற சீர்திருத்தச் சிறு கதைகளை 'ஜேயெம்' ஏராளமாக எழுதட்டும்!

கொள்ளிடம் எஸ். அஹ்மது தம்பி,

இதைப்போல் இன்னும் பல கதைகள் எழுதி எங்களைப்போன்ற இளைஞர்களுக்கு ஊக்கமளிப்பீர் கள் என்று நம்புகிறோம்.

என். எம். ஹுஸைன்,
சு. அ. ஜப்பார், சைகோன்

இதே மாதிரி கதைகளை முரசில் அதிகமாக வெளியிடுவீர்கள் என்று நம்புகிறேன்.

ஏ. ஔரங்கஜீப். பினாங்கு

'ஜேயெம்' எழுதிய 'வெற்றி' இக் கால இளைஞர்களின் மனமாற்றத் துக்கு ஒரு எடுத்துக் காட்டாக அமையும்.

எம். சதுருத்தீன், நக்காவத்த
சிலோன்

ஏப்ரல் இதழில் "மாவீரர் உமர். இஸ்லாத்தில் சேர்ந்தது எப் படி?" "நான் அறிந்த இஸ்லாம்" இரண்டும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

தஞ்சமாலிம் எஸ். எம். அலாவுத்தீன்

சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் கௌதம புத்தரும், 1400 ஆண்டுகளுக்கு முன் அரேபியாவில் முஹம்மது நபியும் வாழ்ந்தனர். இருவரும் மகான்கள்; மாபெரும் மதங்களைக் கண்ட பெரியார்கள். ஒருவர் 'ஆசியாவின் ஜோதி'யாக விளங்கினார். மற்றொருவர் மாநிலத்தின் மணிவிளக்காய்த் திகழ்ந்தார். இருவரும் இன்று நம்மிடை வாழவில்லை. ஆனால் அவர்களின் பொன்மொழிகள் பொன்றாத புகழ் பெற்றுப் புவி வாழும் மாந்தருக்கெல்லாம் வழிகாட்டும் ஒளி விளக்காய் விளங்குகின்றன.

கௌதம புத்தர்

சிந்தனையை ஒழித்தல், பிறரை வருத்தாமலிருத்தல், அறத்துக்கு அடங்கியிருத்தல், நிதான உணவு, ஏகாந்தமாயிருந்து உயர்ந்த சிந்தனைகளில் ஒருமைப்பட்டிருத்தல் இவைகளே புத்தருடைய உபதேசங்கள்.

ஒருவன் தன்னுடைய நாவைக் காத்து, மனத்தை அடக்கி, உடலால் தீமை எதுவும் செய்யாதிருப்பானாக! செயல் புரிவதற்கு ஏற்பட்ட இந்த மூன்று வழிகளையும், பரிசுத்தமாக வைத்திருப்பவன் பெரியோர் அருளிய நன்னெறியை அடைவான்.

மற்றவர்களை வெல்வதைவிட ஒருவன் தன்னைப் பண்படுத்திக்கொண்டு புலனடக்கப் பயிற்சி செய்து தன்னைத் தானே வெல்வது மேலானதாகும்.

ஒவ்வொரு மனிதனும் தான் முதலில் நன்னெறியில் நிலை பெறவேண்டும். பிறகுதான் மற்றவர்களுக்குப் போதிக்க வேண்டும்.

மற்றவர்களுக்குப் போதிக்கின்ற வண்ணம் ஒருவன் தன்னைப் பண்படுத்திக் கொள்வானாக! தன்னை நன்கு அடக்கியாண்ட பிறகுதான் பிறரை அடக்கியாள முடியும்.

கோபத்தை விட்டுவிடு! செருக்கை ஒழி! உலகப்பற்றுக்கள் அனைத்தையும் ஒழித்துவிடு! எதையும் 'எனது' என்று கொள்ளாதவனுக்குத் துக்கமில்லை,

கொலை செய்கின்றவனும் பொய் பேசுகின்றவனும், பிறர் பொருளைப் பறித்துக் கொள்கின்றவனும், பிறர் மனை விழைகின்றவனும், வெறி கொடுக்கும் மது வகைகளைப் பருகுவோனும் இவ்வுலகிலேயே தங்களை வேருடன் அழித்துக் கொள்ளுகின்றனர்.

"மகான்கள் ஒரே விதமாய் நினைக்கின்றனர்" என்று ஒரு பழமொழியுண்டு. உண்மையும் அதுதான் என்பதை இவ்விரு மகான்களின் பொன் மொழிகளிற் கண்டு தெளியலாம். ஒரே விஷயத்தைப்பற்றி இருவரும் பேசி யிருக்கிறார்கள்-வெவ்வேறு காலத்தில், வெவ்வேறு நாடுகளில். ஆனால் இருவரும் அநேக விஷயங்களில் ஒரே கருத்தைத் தெரிவிக்கின்றனர் என்பது ஒரு புதுமை!

முஹம்மது நபி [ஸல்]

அளவுக்கு மீறி உண்பதாலும், குடிப்பதாலும் உங்கள் இருதயங்களை அழித்து விடாதீர்கள்,

நல்ல மன நிலையும், செயல்களில் ஆழ்ந்த யோசனையும், எல்லாக் காரியங்களிலும் நேரான வழியைப் பின்பற்றுதலும் இறைத் தூதர்களின் உயர் பண்புகளாம்.

இறைவனின் படைப்புக்களைப் பற்றி ஒரு மணி நேரம் சிந்தித்து ஆராய்ச்சி செய்தல் ஓராண்டு இறை வணக்கம் செய்தலை விட உயர்ந்தது!

இறைவனும் வானவர்களும், சுவர்க்கவாசிகளும், எறும்புகளும், மீன்களுங்கூட சன்மார்க்க போதகர்களுக்கு வாழ்த்துக் கூறுகின்றன.

தன்னை வெல்ல தன்னுடைய இச்சைகளுடன் செய்யும் போராட்டமே உன்னதமான புனிதப்போர் (ஜிஹாத்)

தன்னுடைய புலன் இச்சைகளை அடக்கி, அதற்கான பரிசை எதிர்பார்த்திருப்பவன் அறிவுடையவனாவான். காம இச்சைகளைப் பின்பற்றி நடந்துகொண்டு இறைவனின் மன்னிப்பையும் வேண்டுகின்றவன் மூடன் ஆவான்,

மனிதனின் குற்றங்கள் பல அவனது நாவிலிருந்து பிறக்கின்றன.

உங்களிடமுள்ள குறைகளை நீங்களே அறிந்தும், பிறரிடமுள்ள அதே குறைகளைக் கூறித் திரியாதீர்கள்.

செருக்குடையவர்கள் சுவர்க்கத்தை அடைய முடியாது

செருக்கு மிக்க துறவி சபிக்கப்பட்டவன்.

மதுவை உண்டவனும், விபசாரம் செய்பவனும், தளவாடுகின்றவனும் தமக்குத் தாமே கடுந்தண்டனையை வரவழைத்துக் கொள்ளுகின்றனர்.

கீமியாயெஸஆதத்
அல்-கஸ்ஸாலி

4. இறை வணக்கம்

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளுள் ஐங்காலத் தொழுகையே இறை நம்பிக்கையின் அடையாளமாகும். தொழுகையால் ஏற்படும் நன்மைகள் எண்ணிறந்தவை. எனவே, தொழுகையைப் பற்றித் திருநபியவர்கள் மிகைபடக் கூறியிருக்கிறார்கள். தொழுகையை விட்டவன் காபிராவான் என்னுமளவுக்கு நாயகமவர்கள் தொழுகையையுயர்த்திக் கூறியிருப்பதிலிருந்து அதன் அவசியத்தை ஒருவாறு உணர்ந்து கொள்ளலாம். ஒரு வேளைத் தொழுகையை விட்டவன் உடனே காபிராகி விட்டான் என்று அர்த்தமல்ல. 'குபுரை' நெருங்கி விட்டான் என்றே பொருள். நீரில்லா நீண்டவழியில் தண்ணீர் கொண்டு செல்பவன், அதைக் கொட்டிவிட்டால் அவன் செத்தான் என்கிறோம். இங்கே அவன் மரணத்துக்கு நெருங்கியிருக்கிறான் என்று தானே பொருள்?

தெளிந்த நீரில் குளித்து முழுகினால் எவ்விதம் உடற் சுத்தம் ஏற்படுகிறதோ அவ்விதமே தொழுவதால் உள்ளத் தூய்மை ஏற்படுகிறது என்றும், தொழுபவனது பாவங்கள் மன்னிக்கப்படுவதுடன் அவனுடைய உள்ளமும் திருந்தி தீயவனும் நல்லவனாகிறான் என்றும் நாயகம் நவின்றுள்ளார்கள்.

ஆனால் வேளை தவறாமல் தொழுது கொண்டு, பாவச் செயல்களையும் விடாமல் பின்பற்றி வருவோரையும் பார்க்கிறோம். இவர்கள் விஷயத்தில் பெருமானார் பொன்மொழி பொய்த்து விட்டதா? இல்லை. இவர்களின் தொழுகையே குறையுடையது. இவர்கள் இறைவனுக்காகத் தொழுவதில்லை. இத்தகையோர் தொழுகையில் உயிரில்லை.

இறைவனே வணக்கத்துக்குரியவன். இறைவனைத் தவிர வேறு யாருக்காகத் தொழுதாலும் இணைவைத்த பெருங் குற்றத்துக்கு ஆளாகவேண்டும். தொழுகைக்காகத் தக்பீர் கட்டும்போது 'இறைவனுக்காகத் தொழுகிறேன்' என்று கூறி கைகட்டி நிற்கின்றனர். ஆனால் அவர்கள் உள்ளமோ அவர்கள் தொழுவதைப் பார்த்துப் பிறர் புகழவேண்டும் என்று ஆசைப்படுகிறது! தங்கள் மதிப்புக்குரியவர் யாராவது வந்தால், அவர்களிடம் நற்பெயர் வாங்க வேண்டுமென்று தொழுகையின் வெளி யுருவத்தை நல்ல

முறையில் நிறைவேற்றுவார்கள். திருமறை வசனங்களை நீண்ட நேரம் ஓதுவார்கள். ருகூவு ஸஜ்தா முதலிய வணக்க நிலைகளில் அதிக நேரம் இருப்பர். எனவே இவர்கள் உண்மையில் இறைவனுக்காகத் தொழவில்லை; பிறரைச் சந்தோஷப்படுத்துவதற்காகத் தொழுவதும், பிற மனிதன் தன்னைப் பார்ப்பதால் தன் தொழுகையில் மாற்றம் செய்வதும் இறைவனுக்கு இணைவைத்தலுக்கு இணையானவை! பார்ப்பவர்கள் இறைவனுக்காகவே தொழுவதாக நினைத்துக் கொண்டிருக்க, அந்தரங்கத்தில் பிறருக்காகத் தொழும் இக்கொடிய குற்றத்தை 'ரியா' என்பர். இது இணை வைத்தலில் ஒருவகை.

தொழுகையில் மட்டுமல்லாமல், எல்லா நற்செயல்களிலும் 'ரியா' என்னும் பெருங்குற்றம் ஏற்பட வழியுண்டு; ஆனால் நோன்பில் மட்டும் 'ரியா' நிகழ வழியில்லை. ஏனெனில், நோன்பு மறைவானது. பிறர் போற்ற வேண்டும் என்பதற்காக நோன்பு வைக்க வேண்டியதில்லை. ஏனெ

பழம் பெரும் பாரசீக இலக்கியத்தில் மனித ஒழுக்கம் பற்றிய மகத்தான புகழ் வாய்ந்த நூல் கீமியா-யெ ஸஆதத். உலகப் புகழ் வாய்ந்த தத்துவ மேதையான அல் கஸ்ஸாலியவர்கள் எழுதிய இந்நூலில, மனிதனை மிகத் தாழ்வான நிலையிலிருந்து உன்னத நிலைக்கு உயர்த்தக்கூடிய ஆயிரமாயிரம் அறிவுரைகள் நிறைந்துள்ளன.

இஸ்லாமிய முறையிலுள்ள இறைவணக்கத்தின் (தொழுகையின்) ஒவ்வொரு விதமான நிலைக்கும் கஸ்ஸாலியவர்கள் அறிவின் அடிப்படையில் கரும் விளக்கங்கள் அற்புதமாயிருக்கின்றன!

மனிதனின் மரணம், மரணத்துக்குப் பிந்திய வாழ்க்கை' நரகம் சுவர்க்கம் இவைகளைப்பற்றி யெல்லாம் கஸ்ஸாலியவர்கள் தரும் ஆத்மஞான விளக்கங்கள் புரட்சிகரமாகவும் புதுமையாகவுமிருக்கின்றன.

மனிதனின் மறு உலக வாழ்க்கையைப் பற்றி மட்டுமின்றி இவ்வுலக வாழ்க்கையின ஒவ்வொரு துறையைப் பறறியும கஸ்ஸாலியவர்கள் தமது ஆழ்ந்த கருததுக்களை அழகான உவமைகளுடன் விளக்குகின்றார்கள்.

வியாபாரம், திருமணச் சட்டங்கள், குழந்தைகளை வளர்த்தல், பிரயாணம், நாடடை ஆட்சி புரிதல் மனித வாழ்வு சங்கீதம் இவையனைத்தும் பற்றி அல்-கஸ்ஸாலி யவர்களூ தமது அரிய கருத்துக்களை குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களுடன் கூறுகிறார்கள்.

னில் ஒருவருக்கும் தெரியாமல உண்டு குடித்துவிட்டு நோன்பு வைததிருப்பதாகப் பிறர் முன் கூறிக் கொள்ளலாம். ஒருவன் நோன்பு வைத்திருப்பதும் வைத்திராததும் அவனுக்கும் இறைவனுக்கும் தான் தெரியும். எனவே தான் நாம் எல்லா நற்செய்கைகளையும் இறைவனுக்காகவே செய்யினும் நோன்பை மாத்திரம் 'என்னுடையது' என்கிறான் இறைவன் 'அதன் கூலியை நானே கொடுப்பேன்' என்பதாகவும் கூறுகிறான்.

உயிரில்லாத் தொழுகை என்பது மனம் ஈடுபடாத தொழுகையாகும். உடலைவிட உள்ளமே முக்கியமாயிருக்கும்போது, இதயம் இறைவனை நினையாமல் உடலமட்டும் குனிந்தும் நிமிர்ந்தும் தேகப் பயிற்சி செய்வது போன்று தொழுது என்ன பயன்? தொழுகையில் உள்ளம், உடல், வாக்கு மூன்றும் உடன்பட்டு வேலை செய்யவேண்டும். ஆனால் தொழுபவர்களில் பெரும்பாலோர் உடலை மட்டும் கட்டுப்படுத்தி, பக்கங்களிலே திரும்பிப் பாராமல், மக்காவின் திசை நோக்கி முகத்தைத்திருப்பி விடுகின்றனர். வாயும் முணு முணுக்கிறது. உள்ளமோ உலகையே சுற்றி வருகிறது! இறைவனைத் தியானிப்பதில்லை. 'என்னைத் தியானம் செய்வதற்காகத் தொழு' என ஆண்டவன் ஆணையிடுகிறான்.

தொழுகையின் வெளிச் சடங்குகள் உடலாகும். இறைவனை தியானித்தல் உயிராகும். எனவே, உள்ளம் ஒன்றாத் தொழுகை உயிரற்றது; பயனற்றது. 'தொழுகையின் எந்தப் பகுதியில் உள்ளமும் சேர்ந்து தொழுததோ அப்பகுதியே இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படும்' என நாயகம் கூறியுள்ளார்கள்.

இத்தகைய குறையுள்ள தொழுகை, தொழாமலிருப்பதை விட மோசமானது. ஏனெனில் ஒரு வேலையைச் செய்யாதவன், அவ்வேலையைச் செய்து அதைப் பாழாக்கியவனை விடச் சிறந்தவனன்றோ? குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொண்டு வந்தது போல, பெயருக்காகத் தொழுவதால் நன்மையைவிடத் தீமையே அதிகமாக விளைகிறது. ''என்னுடைய தொழுகை அவனைத் தீய காரியங்களை விட்டும் தடுக்கவில்லையோ, அத்தொழுகை பயனற்

தொழுகையின் இரண்டாவது நிலை (ருகூ)

றது" என நாயகம் கூறியுள்ளார்கள். பெயருக்காகத் தொழுபவனுக்குக் கேடுதான் என இறைவனும் கூறியுள்ளான் (அல் குர்ஆன்: 107·4. 5, 6.)

இக்குறைகளை நீக்கிப் பூரணமாய்த் தொழுது பயனடைவதற்கு வழியில்லாமலில்லை. தொழுகையில் 'ரியா' ஏற்படுவதற்கு முக்கிய காரணம் உயிரற்ற உணர்ச்சியற்ற தொழுகையைக் கடைப்பிடிப்பதாகும். இறைவனை நினையாமல் சுற்றுப்புறங்களில் மனத்தைச்செலுத்துவது கூடாது மனிதர்கள் மத்தியில 'ரியா' ஏற்படுமென்ற அச்சமிருந்தால், தனித்து வணங்குவது நல்லது. அருகிலுள்ள பொருட்கள் கவனத்தைக் கலக்கும் என நினைத்தால் கண்களை மூடிக்கொள்ள வேண்டும். இருட்டிலும் தொழுது கொள்ளலாம். பசியோடிருந்தால் உணவை முடித்துக்கொண்ட பின்னரே:தொழுகையில் ஈடுபடவேண்டுமென நாயகம் கூறியுள்ளார்கள்.

பிறர் தன்னைப் பார்க்கும்போது ஒழுங்காய்த் தொழுபவன், பிறர் நன்மதிப்பை நாடியே அவ்வாறு செய்கிறான். தன்னை எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கும் இறைவனைத் திருப்தி செய்வதன்றோ அதைவிட முக்கியம்? நாம் இறைவனைப் பார்க்காவிடினும். அவன் நம்மைப் பார்த்துக் கொண்டிருப்பதால் உள்ளச்சத்துடன் இறைவனையே நினைந்துருகிக் கொண்டு தொழ வேண்டும்.

[...]வே[...]றெங்[...]ம் கவனம் செல்லாமல் இறைவனையே நினையாமனத்தில் நிறுத்த வழியுண்டு. தொழுகையின் ஒவ்வொரு நிலையிலும் உள்ளத்தில் நிகழவேண்டிய சில அந்தரங்கமான உணர்ச்சிகள் உள்ளன. அதற்காகத் தொழுகையில் ஓதப்படும் திரு வசனங்களின் பொருள் விளங்கி அதனுடன் உள்ளமும் ஒன்றிவிடவேண்டும். அப்பொழுதுதான் அங்குமிங்கும் ஓடாமல் மனத்தை நிலைநிறுத்த முடியும், இதற்கான வழிகளை இனி விளக்குவோம்.

தொழுகைக்காக 'பாங்கு' சொல்லப்பட்டவுடனேயே, கை வேலைகளை விட்டுவிட்டுத் திடீரென தொழுகைக்குப் புறப்பட்டு விட வேண்டும். இதுபோன்றே இறுதி நாளில் இறைவனின் அழைப்பு வந்ததும், சந்தோஷத்துடன் அதை ஏற்று இறைவனிடம் சென்று இன்புமடைய நம்மைத் தயார் செய்து கொள்கிறோம்.

தொழுகைக்காக 'ஒலூ' செய்து வெளிச்சுத்தம் அடைவது போல, செய்த பாவங்களை நினைத்துப் பச்சாதாபப்படுவதன் மூலமும்: இறைவனைத்தியானிப்பதன் மூலமும் இதயத்தைத் தூய தாக்கவேண்டும். புறச்சுத்தத்துடன் அகப்பரிசுத்தமும் அவசியமாகும். ஏனெனில் இறைவனால் வெறுக்கப்பட்ட தீய உணர்ச்சிகளையும், செயல்களையும் இதயத்தில் தாங்கிக் கொண்டு இறைவனைத் தியானித்தல் இறைவனைப் பரிகசிப்பது போலாகும். அகத்தூய்மையின்றி புறத்தூய்மை

தொழுகையின் மூன்றாவது நிலை (ஸஜ்தா)

மட்டுமே கொண்டு இறைவனைத் துதித்தலானது, ஒரு அரசனைத் தான் வீட்டுக்கு விருந்துக்கழைத்து, வீட்டின் வெளிப்புறத்தை அலங்கரித்து சுத்தப்படுத்தி அரசன் வந்தமரும் உட்புறப் பகுதியை அசுத்தங்களால் நிறப்பி வைத்து அவனை அவமானப்படுத்தியதுபோலாகும்!

உடல் கிப்லாவை நோக்கி நிற்பதுபோல் உள்ளம் இறைவனையே நோக்கிநிற்கவேண்டும். ஏனெனில் உள்ளத்தின் கிப்லா இறைவனாகும். தொழும்போது முகத்தைப் பக்கங்களில் திருப்பினால் தொழுகையின் ஒழுங்கும் உருவமும் குலைந்து விடுவதுபோல்; இதயத்தின் கிப்லாவாகிய இறைவனை விட்டும் மனம் திரும்பினால் தொழுகை உயிரற்றதாகின்றது.

தக்பீர் கட்டி முதல் நிலையிலிருக்கும்போது இறைவன் முன் ஒரு அடிமையைப் போன்று தாழ்ந்த உள்ளத்துடன் நிற்கவேண்டும். உடல் மறைக்க உடை யுடுத்தி நிற்பதுபோல, நாணமென்னும் நல்லாடை போர்த்தி, இறைவன் முன் அச்சத்துடன் அடக்க வொடுக்கமாய் நிற்கவேண்டும்.

'ருகூ'வில் இருக்கும்போது தலை வணங்கி, உடல் வளைந்து இறைவனுக்கு மரியாதைச் செய்வதாய் எண்ணிக் கொள்ள வேண்டும். உடல் தாழ்வதுபோல் உள்ளமும் தாழ வேண்டும்.

ஸஜ்தாவில் இருக்கும்போது தான் இறைவன் முன் நம் அற்பத்தனத்தை அதிகமாகக் காட்ட முடியும் 'இறைவனே நீ என் உடலை மண்ணால் படைத்தாய்! நான் மண்ணுக்கே மீளுவேன். நான்மண்ணை விட உயர்ந்தவனல்ல. என் உயர்ந்த நெற்றியை உனக்காக மண்மீது வைக்கிறேன்' என்று மனத்திற் சொல்லி, தன் தாழ்ந்த நிலையை ஞாபகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு தொழுகையின் ஒவ்வொரு நிலையிலும் இறைவனைத் துதிப்பதுபோல், திரு வசனங்களை ஓதும்போதும் அவைகளின் பொருளுணர்ந்து அதற்கேற்றாற்போல் இறைவனைத் துதித்துப் போற்ற வேண்டும். 'அல்லாஹு அக்பர்' 'இறைவனே பெரியவன்' என்று கூறி, தக்பீர் கட்டும்போதே நானே பெரியவன் என்னும் அகம்பாவத்தைக் களைந்து, இறைவன் சமூகத்தில் தன் சிறுமையை நினைந்து உருகி நிற்கவேண்டும்.

'அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்' என்றுஓதும்போது 'அகில மனைத்தையும் படைத்துப் போஷிப்பவனே! புகழனைத்தும் உனக்கே உரியது' என்றும், 'அர்ரஹ்மானிர் ரஹீம்' என்னும்போது 'நீயே கருணைக்கடல்; குற்றமுடையவர்களுக்கும் தகுதியற்றவர்க்கும் அருள் மாரி பொழியும் உன் பெருந் தன்மையில்லாவிட்டால் என் கதி என்னாகும்?' என்றும் நினைவு கூரவேண்டும். "இய்யாகநஃபுது: 'உன்னையே வணங்குகிறேன். உனக்கு இணையாக யாரையும்வணங்கமாட்டேன்' வ இய்யாக நஸ்தஈன்: உன்னிடமே உதவி தேடுகிறேன். எனக்குஉதவி செய்ய உன்னைத் தவிர வேறு யாருமில்லை. என் பிரார்த்தனையை ஏற்றுக்கொள்வாயாக ! இஹ்தினஸ்ஸிராதல் முஸ்தகீம். எனக்கு நேர்வழியைக் காட்டு. நீயே என்னை நேர்வழியில் நடத்திச் செல். ஏனெனில் நன்மை தீமை தெரியாத அறிவிலி நான். சக்தியற்றவன் நீதான் என்னை நேர் வழியில் செலுத்திக் காப்பாற்ற வேண்டும்" என்று உள்ளமுருகி இறைவனைத் தியானிக்க வேண்டும்.

மேற்கூறிய ஒரு சில உதாரணங்களைப் போன்று தொழுகையில் ஓதும் எல்லா வசனங்களுடனும் இதயமும் இணைந்து செல்லவேண்டும். ஆகலால் பொருளுணர்ந்தோத வேண்டும். எனவே தொழுகைக்காக சில திருமறை அத்தியாயங்களை அர்த்தத்துடன் கற்றுக்கொள்ளவேண்டும். இதயம் ஈடு படாமல் வாய்மட்டும் ஓதிக்கொண்டிருப்பதில் பயனில்லை.

தொழுகையில் மேற்கூறிய வழியைப் பின்பற்றினால் தான் உள்ள

மும் உடலும் சேர்ந்து இறைவனை வழிபடும். இவ்வாறு பூரணமாகத் தொழுதால்தான் தொழுகையின் முழுப்பயனையும் அடையலாம். நாயகமவர்கள் கூறியது போன்று தினமும் ஐம்முறை குளித்து வெளி யுறுப்புக்களைப் பரிசுத்தப்படுத்துவதைப் போன்று, ஐங்காலத் தொழுகையால் இதயத்தைக் கழுவிப் பாவங்களைப் போக்கிப் பரிசுத்தமடையலாம். இதயத்தில் இறைவனை என்றும் நிலை நிறுத்தலாம்.

—அ அப்துர் ரஹீம். (தொடரும்)

இலங்கை
4—5—56.

அன்பு மிக்க ஆசிரியரவர்களுக்கு! முஸ்லிம் முரசு வாசக நேயர்களில் நானுமொருவன். நான் ஒரு கத்தோலிக்க சமயத்தவனுயிருந்தாலும் முரசின் ஒலியைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை. எனதறிவுக் கெட்டியவரையில் 'முரசே வாழ்க!' என்னுந் தலைப்புடன் நான் இயற்றிய கவிதையை இத்துடன் அனுப்பியிருக்கிறேன்.

முரசின் பாலுள்ள பற்றுதல்தான் கவிதையாக வடிவடைந்தது.

முரசே வாழ்க!

எழுத்துலகில்— அறியாமை யிருளைப் போக்கும்
இரவியே! கட்டுரை, பண், கதைகள் மூலம்
அழுத்தமாய்ச் சரித்திரத்தை யதார்த்தமாக
ஆய்ந்து தமிழ்ப் பேசுவோர்க் களித்(து) அநேக
எழுத்தாளர் தலைமையுமுரு வாக்கியாக்கி
இஸ்லாமி யப்பண்பு, அறிவு அன்பை
வழுத்துகின்ற நற்குரலே! மனிதர் தம்மை
வாழ்வாங்கு வாழவைக்கும் முரசே வாழ்க!

★

பிறக்கின்றார், வாழ்கினறார்; ஒருநாள்...காயம்
பிணமாக மடிகினறார்; இடைக்காலத்தே
சிறக்கின்றோ ரொருசிலர்தான்; ஏனையோர் துர்ச்
செயல்புரிந்தே யிக-பரத்தை யிழக்கிறரென்(று)
அறக்குன்றும் ஆண்டவனும்; முஹமத் ஸல்லல்
லாஹு அலை கிவஸல்ல மவர்கள் தம்பால்
இறக்கு 'புறுக் கான்மறை'யின் நெறிவிளக்கும்
எழில் முரசே! தமிழகத்தில் நீடு வாழ்க!

—எஸ். எல். எஸ்.

இலுப்பைக்குளம். (இலங்கை)

புது வாழ்வு
எஸ்கேஜி

3

ஆசைக்கும் ஆவலுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிப் பேராசிரியர் கந்தசாமி விளக்கிக் கொண்டிருந்தார் :

"ஆசை மனிதனின் விரோதி. அதன் உடும்புப் பிடியில் எவரேனும் சிக்கிவிட்டால் பின்னர் மீளுவது மிகக் கடினம். செக்கில் கட்டியிருக்கும் காளைகள் எவ்விதம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருக்கின்றனவோ, அதே போன்று ஆசை வசப்பட்டவன் போலி இன்ப வரம்புக்குள் சுற்றி வருகிறான். எனவே மனச்சாட்சி மடிந்து விடுவதால் பழி, பாவம் என்பனவற்றை அறிந்திருந்தும், எதற்கும் அவன் அஞ்சுவதில்லை..........."

அப்போது திருநெல்வேலிக் கல்லூரியில் இன்டர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். மாதம் ஒருமுறை விடுமுறை சமயத்தில் கிராமத்துக்குச் சென்று திரும்புவது வழக்கம். கோடை விடுமுறை போன்ற சமயங்களில்கூட இரண்டொரு தினங்கள்தான் கிராமத்தில் தங்குவேன். மீதி நாட்களில் திருநெல்வேலியிலேயே தங்கி, கல்லூரி வாசகசாலையைப் பயன்படுத்திக் கொள்வேன்.

இவ்விதம் இரண்டு வருட காலம் தொடர்ச்சியாக சொந்த கிராமத்தில் இல்லாததால் அங்கு நடைபெற்ற சம்பவங்கள் எதுவும் எனக்குத் தெரியாது.

அந்த வருஷத்தில் பரீட்சை எழுதி முடிந்ததும் கிராமத்துக்கு வந்து கொஞ்ச நாட்களையாவது கழிக்கவேண்டுமென்று என் தந்தை வற்புறுத்திக் கடிதம் எழுதியிருந்தார். மேலும் மேற்படிப்புக்காக சென்னைக்காவது அல்லது மதுரைக்காவது போகவேண்டும் என்ற எண்ணமும் எனக்கு இருந்ததால் அவரது ஆவலுக்கு மறுப்பு எதுவும் சொல்லாமல் பரீட்சை முடிந்த மறுநாளே கிராமத்துக்கு வந்து விட்டேன். வந்த சில நாட்களுக்குப் பிறகுதான் என் தந்தையின் உண்மை உருவம் எனக்குத் தெரிய வந்தது. இரண்டு வருஷங்களுக்கு முன் நான் பார்த்த தந்தையாக இல்லை; வெகுவாக மாறியிருந்தார்—குணத்தில்.

அன்று காலையில் என் அறையில் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தபோது என் தந்தை வெளியே யாருடனோ கூச்சலிட்டுப் பேசிக் கொண்டிருந்தார். வரவர அவரது குரல் உச்சஸ்தாயியை எட்டிக் கொண்டிருந்தது ஆகவே நான் வெளியே வந்து என்னவென்று கவனித்தேன். பண்ணையாள் ஒருவன் வெகு அடக்கத்துடன் நின்று கொண்டிருந்தான். என் தந்தைக்குப் பக்கத்தில் என் தாய் மாமன் இப்ராஹீம் ராவுத்தர் உட்கார்ந்துகொண்டு அமைதியான குரலில் அவ்வப்போது சிலசில வார்த்தைகளைக் கூறிக்கொண்டிருந்தார். முதலில் ஒன்றுமே புரியாவிட்டாலும் பிறகு கொஞ்சங் கொஞ்சமாக நிலைமையை உணர்ந்து கொண்டேன்.

அந்தப் பண்ணையாள் வெகுகாலமாக எங்கள் நிலபுலன்களைக் கவனித்து வருகிறான். அவன் துரதிருஷ்டம் என் தந்தையிடம் கொஞ்சம் பணம் வாங்கியிருந்தான். திருப்பிக் கொடுக்க வழியில்லை. அவனது ஒரே சொத்தான வீட்டைப் பணத்துக்குப் பதிலாக எழுதித் தரும்படி என் தந்தை கேட்கிறார்.

கிராமாந்திரங்களில் பணக்காரர்களைச் சுற்றி 'ஆமாம்' போடுவதற்காக எப்போதுமே ஒரு கூட்டம் இருந்து கொண்டிருக்கும். "முதலாளி சொல்வது ரொம்ப சரியான வார்த்தை" என்று அடிக்கொரு தடவை சொல்லி தங்களுக்கு வேண்டிய எவ்வளவோ காரியங்களை இவர்கள் சாதகமாய் முடித்துக் கொள்வார்கள். இவர்கள் பேச்சைக் கேட்டுக் கேட்டு தாங்கள் செய்வதெல்லாம் சரி என்ற மனப்பான்மை எஜமானர்களுக்கு ஏற்பட்டு விடும். நியாய புத்தி மறைந்து விடும். மனிதத் தன்மை என்னும் பண்பு இருக்குமிடம் தெரியாமல் ஓடி விடும்.

இவ்விதம் என் தந்தையை மாற்றும் பொறுப்பை என் மாமன் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று அறிந்துகொண்டேன்.

"ஏம்(ப்)பா, முதலைத்தான் கொடுக்க முடிய வில்லை. வட்டியையாவது கொண்டு வந்து ஒழுங்கு முறையாகக் கட்டக் கூடாது?"

விளக்கின் சுடரை அதிகப் படுத்த ஒரு சிறிய தூண்டு கோல் போதாதா என்ன? மாமாவின் அமைதியான வார்த்தைகள் என் தந்தையின் கோபத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தன.

"வட்டியைத் தள்ளிக் கேட்கிறான். என்ன துணிச்சல்!" என்றார் என் தந்தை.

"வட்டி வாங்குவது ஹராம்" என்பதைப் பள்ளிவாசலில் நடைபெற்ற எத்தனையோ கூட்டங்களில் அவர் விளக்கியிருக்கிறார். "பிறர் பொருளுடன் சேர்ந்து, பிறர் பிரயாசையில் உங்கள் பொருளும் பெருகும் என நினைத்து வட்டிக்குக் கொடுக்காதீர்கள். அது இறைவனிடத்தில் வளர்வதில்லை; இறைவனின் அருளை அதிகப்படுத்தாது (30 : 39). என்ற குர்ஆன் திருவசனத்தை எடுத்துக்காட்டி அவர் பேசுவதைக் கவனித்தால் இனி இத்தவறான வழியில் செல்வதில்லை என்று ஒவ்வொருவரும் அச்சமயம் தீர்மானிப்பார்கள். என் சிறிய வயதில் இவற்றைப் பார்த்திருக்கிறேன். அவரைப் பிறர் புகழ்வதைக் கேட்டுப் பெருமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்டவர் இப்போது வட்டியே தமக்கு ஆதாயம் என்று பேசுகிறார்!

"காலம் மாறிப் போச்சு, இனிமே என்னை ஏமாற்ற முடியாது!" என்றார் என் தந்தை.

"ஆமாம். ஒழுங்காகப் பணத்தைக் கட்டிவிட்டு மறுஜோலியைப் பார்!" என்றார் மாமா.

இந்தச் சம்பவம் என் மனத்தை மிகவும் அரித்தது. என் தந்தை—உலகத்தை நல்ல வழியில் செலுத்தும் உதார புருஷன் என்று எவரை இதுவரைக் கருதியிருந்தேனோ அவர்—இவ்விதம் காலவெள்ளத்தில் அடிபட்டு உருமாறிப் போனதை நம்ப என் மனம் மறுத்தது!

"ஆசையின் வசப்பட்டவன் போலி இன்ப வரம்புக்குள் சுற்றிச் சுற்றி வருகிறான்"—பேராசிரியரின் ஆவேசமான வார்த்தைகள் என் காதுகளில் ரீங்காரம் செய்தன.

அதே சமயத்தில் மற்றொரு சம்பவம் நினைவுக்கு வந்தது.

11

நான் கிராமத்துக்கு வந்த தினத்தன்று மாலையில் அஸர் தொழுகைக்குப் பின் பள்ளிவாசலின் பின்பக்கம் நின்றுகொண்டு மலைவாயில் சூரியன் விழும் காட்சியை ரசித்துக் கொண்டிருந்தேன். அஸ்தமன கதிரவனின் கிரணங்களால் செந்நிறமாகியிருந்த வான வீதியில் பறவைக் கூட்டங்கள் அணியணியாகப் பறந்து சென்றுகொண்டிருந்தன. வீடு திரும்பும் உல்லாசத்துடன் பசுக்கூட்டங்கள் எழுப்பும் சதங்கை நாதம் இன்னிசைபோல் கேட்டுக் கொண்டிருந்தது. "உயிரினங்களைப் படைத்த இறைவன் அவை வாழ்வதற்கு வழிவகுத்துக் கொடுத்திருக்கும் அதிசயம்" என் எண்ணச் சுழலில் சுற்றிக் கொண்டிருந்தது.

"என்ன தம்பி! எப்ப வந்தீங்க?"

குரல் கேட்டுத் திரும்பினேன். கிராமத்தில் முன் ஒரு சமயத்தில் பிரபலஸ்தராக விளங்கிய மஸ்தான் ராவுத்தர் நின்று கொண்டிருந்தார்.

"இன்று காலையில்தான் வந்தேன், தாதா! நீங்கள் சௌக்கியமா?"

"சௌக்கியத்துக்கு என்ன கொறைச்சல் தம்பி! என்னமோ அல்லா இந்தக் கட்டையைக் கொண்டு போவதாகக் காணோம். 'வீடு போ, போ; காடு வா, வா' எங்கிற நேரத்திலே கஷ்டப்பட வச்சிருக்கான்" என்று அவர் சலிப்புடன் சொல்லி வரும்போது குரல் தளர்ந்தது. அவர் கண்களில் நீர் துளிர்த்தது.

"அழாதீங்க தாதா! உங்களுக்கென்ன கஷ்டம்?"

அவர் மௌனமாகி விட்டார். அவர் மௌனம் என் ஆவலை அதிகமாக்கிற்று.

நாற்பது வருஷகாலமாக அவர் வார்த்தைக்குக் கிராமத்தில் நல்ல மதிப்பு இருந்து வந்தது. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் அவரது வியாபாரத்தில் அவருக்கு ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டு விட்டதால் பணமெல்லாம்போய் 'வாழ்ந்து கெட்டவர்'கள் ஜாபிதாவில் அவர் பெயரும் சேர்ந்து விட்டது. சென்ற வருஷம் அவருக்கு அவசரமாக கொஞ்சப் பணம்—நூறு ரூபாய் தேவைப்பட்டபோது என் தந்தையிடம் கைமாற்று வாங்கியிருந்தார். ஆனால் குறிப்பிட்ட தவணையில் அவரால் செலுத்த முடியவில்லை. அச்சமயத்தில் என் தந்தை நடந்து கொண்ட முறை அவரது வாழ்க்கையை மிகவும் பாதித்து அவரை நடைப்பிணமாக்கி விட்டது!

இக்கதையைச் சொல்லிவரும்போது அவர் கண்ணீர் சொரிந்தார்.

"ஹூம்! எத்தனை பேருக்கு எவ்வளவு சந்தர்ப்பங்களில் உதவியிருக்கிறார்! அவருக்கு இந்தப் பணமா பெரிது?"

"அவர் என்ன செய்வார் தம்பி! அவரைச் சேர்ந்தவர்கள் அவ்விதம் ஆக்கி விடுகிறார்கள்"

பணத்துக்குத்தான் எவ்வளவு சக்தி இருக்கிறது! பண ஆசை ஒருவனுக்குப் பிடித்து விட்டால் அவன் எவ்விதம் மாறி விடுகிறான்! தந்தையின் போக்கு இப்படியே இருக்கக்கூடாது; மாற வேண்டும்! மாறித்தான் ஆகவேண்டும்! அவர் செய்வதை இப்போது தடுக்காவிட்டால் மனதாரத் தவறிழைத்ததாகவல்லவா ஆகிவிடும்?

"எப்படியும் வட்டியும் முதலுமாகக் கட்டுவதற்கு வழியைப் பார்! ஒரு வாரம் கொடுக்கிறேன்" என்று உத்தரவிட்டுப் பின்னர் "என்ன இப்ராஹீம், சரிதானே!" என்றார் தந்தை.

"ஆமாம் மச்சான். ஒரு வாரத்துலே கட்டவில்லையானால் நாம் வேறு வழியில் பணத்தை வசூல் பண்ணவேண்டியதுதான்" என்றார் 'மதி மந்திரி'.

குனிந்த தலை நிமிராமல் கண்ணீர் சிந்தியபடியே வணக்கம் செலுத்தி விட்டுப் பண்ணையாள் வெளியேறிக் கொண்டிருந்தான்.

"அத்தா, எனக்கொன்றும் பிடிக்கவில்லை!" என்று கூறியவண்ணம் தந்தையின் முன்போய் நின்றேன்.

"ஊருக்கு வந்து நான்கு நாட்கள்கூடச் சரியாக ஆகவில்லை! அதற்குள்ளாகவா பிடிக்கவில்லை?" என்றார் தந்தை.

"டவுனிலேயே இரண்டு வருஷமாக இருந்து பழகியதன் பலனு?" என்றுகூறி சிறுநகை புரிந்தார் மாமா.

"ஊர் பிடித்திருக்கிறது. ஆனால் உங்கள் போக்குத்தான் பிடிக்க வில்லை!" என் வார்த்தைகளில் தெளிவு இருந்தது எனக்கே ஆச்சரி யத்தைக் கொடுத்தது!

"என்ன! என்ன சொல்கிறாய்?" மிதியுண்ட நாகம்போல் சீறினார் தந்தை.

"நீங்கள் செய்வது எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை..."

இதற்கிடையே மாமா குறுக்கிட்டு, "என்ன ஷரீப், படித்த பிள்ளை யான நீயா அத்தாவை எதிர்த்துப் பேசுவது? அவர்கள் லாப நஷ்டம் தெரியாதவர்களா என்ன?" என்றார்.

"மாமா, உங்களால்தான் அத்தா இவ்வளவு மாறி விட்டார்கள். அவர்கள் தவறான வழியில் செல்லும்போது தடுத்து நிறுத்தாமல் 'ஆமாம்' போட்டு வருகிறீர்கள்—இன்றையத் தேதி வரை! இதனால், மார்க்கத்தை மறந்து, மார்க்கச் சட்டத்தை மறந்து..."

"ஆமாமாம், தொப்பியில்லாமல் கிராப் வைத்துக்கொண்டு நீ அலைவதற்கு நான் விட்டிருக்கிறேன் பார்! பார்த்தால் ஒரு இஸ்லா மானவனுகவா நீ திரிகிறாய்? பேச வந்துட்டான் என்னிடம் சட்டத்தைப் பற்றி..." என்றார் தந்தை.

"அத்தா, தாடியும் தொப்பியும் வைத்து தோற்றத்தில் முஸ்லிமாக இருந்து என்ன பிரயோசனம்? உங்க செய்கை வந்து இஸ்லாத்துக்கு நேர் முரணாகப் போகிறதே!"

"என்ன கண்டுவிட்டாய் முரணாகப் போனதை?"

"வட்டி வாங்குவது ஆகுமா? அடுத்தவன் சொத்தை அபகரித்துக் கொள்வது ஆகுமா? ஐந்து வேளை தொழுது தஸ்பீஹு மணியை உருட் டினால் மாத்திரம் போதுமா? செயலிலே சுத்தம் இருக்க வேண்டாமா?"

என் பேச்சின் வேகம் என் தந்தையைச் சற்று மடக்கிவிட்டது. ஆகவே அமைதியான குரலில் "எல்லாம் உனக்கும் உன் தங்கைக்கும் தானே! இப்போது இல்லாவிட்டால் வேறு எப்போது பணம் சம்பா தித்து உங்களுக்காகச் சேர்த்து வைக்க முடியும்?" என்றார்.

"அதற்காக யாரையும் வாட்டி வதைக்க வேண்டாம் அத்தா! ஆண்டவன் நியாயமான வழியில் கொடுப்பதே நமக்குப் போதும்!"

"தம்பி! இப்போ அப்படித்தான் சொல்லுவாய்... .." என்று ஆரம்பித்தார் மாமா.

"மாமா நிறுத்துங்கள்! அத்தா கெடுவதே உங்களால்தான்".

"ஆமாம், பெரிய மனுஷன். கண்டுவிட்டாய்! உங்கள் அம்மா இறந்தபிறகு உன்னையும் உன் தங்கையையும் வளர்க்க எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம் தெரியுமா?"

"எல்லாம் தெரியும்!"

"நீ பெரிய மனிதனாகி விட்டாய்! இனிமேல் என்ன என்று நினைக்கிறாய்!

"உங்களிடம் நான் பேசவரவில்லை! நீங்கள் என்று இந்த வீட்டை விட்டுப் போகிறீர்களோ அன்றுதான் அத்தாவைப் பிடித்திருக்கிற ஷைத்தான் விட்டான் என்று நினைப்பேன்!"

மறைந்துவிட்ட கோபம் தந்தைக்கு மீண்டும் வந்துவிட்டது.

"அடே! அவரைப் பற்றி அவமரியாதையாக எதுவும் பேசினால், நீ என் பிள்ளை இல்லை. இந்த நிமிஷமே வீட்டைவிட்டு ஓடிப்போய் விடு; ஆமாம்!"

"அத்தா, திரும்பவும் சொல்கிறேன்......"

"நீ சொல்வது எதையும் கேட்கத் தயாராக இல்லை! இஷ்டமிருந்தால் நான் சொலகிற பிரகாரம் கேட்டு இரு! இல்லையென்றால் ஓடு!"

பாசம்—ஒரு வற்றாத ஊற்று ஆசையெனும் மணற்காற்று வீசி அவ்வூற்றைத் தூர்த்து விட்டது!

அன்று நான் வீட்டைத் துறந்து வந்தவன்தான். பத்து வருஷங்களாகி விட்டன.

அப்பப்பா! இந்த பத்து வருஷ காலத்தில் நான் எவ்வளவு கஷ்டம்! எவ்வளவு வறுமை! நினைத்தாலே பயங்கரமாக இருக்கிறது!

நான் படும் கஷ்டங்களைக் கேள்வியுற்ற என் தந்தை ஊரிலிருந்து சென்னைக்கு வருகின்றவர்கள் மூலம் எவ்வளவோ 'புத்திமதி'கள் சொல்லியனுப்பினார்! பணம்கூடக் கொடுத்தனுப்பினார்! எதையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை! என் லட்சியத்தில் உறுதியுடனிருந்தேன்!

முன் இரவு ஏழரை மணிக்கு சென்னையை விட்டுப் புறப்பட்ட திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் பகல் 11 மணிக்கு திருநெல்வேலியை அடைந்தது. இந்தப் பதினாறு மணி நேரமும் எப்படியோ கழிந்து விட்டது—நேரம் போனதே தெரியவில்லை. ஆனால் இன்னும் இரண்டுமணி நேரத்தை ரயிலில் கழித்தாக வேண்டுமே என்ற அலுப்பு கிராமத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் பிறந்ததால் ரயில் வண்டி மீது ஆத்திரம் வந்தது.

4

கிராமத்துக்கு வந்து ஒரு வார காலமாகி விட்டது. பட்டினத்திலேயே பிறந்து வளர்ந்த நஸீமாவுக்கு கிராமவர்சம் பிடிக்கவில்லை. குழந்தை பானுவுக்கு எல்லாம் வேடிக்கையாகத்தோன்றின—அழுக்குப் பிடித்த மேனியும் பரட்டைத் தலையுமாக அரை நிர்வாணக் கோலத்தில் திரியும் கிராமத்துக் குழந்தைகளைக் கண்டு பரிதாபப்பட்டாள். அங்குமிங்கும் பறந்து இரைதேடும் விதவிதமான காட்டுப் பறவைகளும், பலவிதமான வர்ணங்களில் தோற்றமளிக்கும் வண்ணாத்திப் பூச்சிகளும் அவளது ஆச்சரியத்தைப் பன்மடங்காக்கின. தனக்குப் புதிதாகக் கிடைத்துவிட்ட ஸகீனா மாமியிடம்—என் தங்கையிடம் ஒட்டிக்கொண்டு விட்டாள்.

எனக்கு இந்த ஒருவார காலமாக ஒரே வேலை. தந்தை இறந்த துக்கம், விசாரிக்க வந்திருப்பவர்களுடன் பேசிக் கொண்டிருப்பது, அவர் விட்டுப்போன சொத்துக்களின் நிலைமைகளை ஆராய்வது—இப்படித் திரும்ப முடியாத நிலைமையில் இருந்தேன். சென்ற பத்து வருட காலத்தில் கிட்டத்தட்ட இரண்டு லட்ச ரூபாய் சொத்துக்களைச் சேர்த்திருந்தார்! இவை சம்பந்தமான தஸ்தாவேஜ்களை ஆராயும் போது, தாழ்ந்திருந்த கைகளை ஓங்கிய கை வளைத்திருப்பது தெளிவாகத் தெரிந்தது!

மனிதனுக்குத்தான் எவ்வளவு ஆசை!

ஆசைத்தணலில் அகப்படாமல் தப்பியவன் பூரண மனிதத் தன்மையை அடைகிறான். ஆனால் உலகில் இந்தப் பூரணத்துவத்தை அடைபவர்கள் எத்தனை பேர்?

"அனாதைகளைப் பாதுகாப்பவர்களும் நானும் இறுதித் தீர்ப்பு நாளன்று நெருங்கிய இரு கை விரல்களைப்போல சேர்ந்திருப்போம்" என்று திருநபியவர்கள் கூறியுள்ளார்கள். என் தந்தை இதற்கு விளக்கம் கொடுத்தால் கேட்பவர்களின் கண்களில் கண்ணீர் பெருகும்! ஆனால் தமது இறுதிக் கால வாழ்க்கையில் திருநபியவர்களின் பொன்மொழிகளையெல்லாம் மறந்துவிட்டாரா என்ன!

இதற்குப் பரிகாரம் தேடவேண்டும்; வஞ்சிக்கப்பட்டவர்கள் வாழ்வையடைவதற்கு வழி வகுத்துக் கொடுக்கவேண்டும். தந்தை செய்த பாவக்கறையைத் தனயன் களைந்தெறிந்தான் என்ற நல்ல பெயர் உண்டாகவேண்டும். அதற்கு என்ன செய்யலாம் என்ற சிந்தனையில் ஆழ்ந்தேன்.

சிந்தனைக்குத்தான் எவ்வளவு சக்தி இருக்கிறது! அதைத் தெரிந்து தானே பெரியோர்களெல்லாம் 'சிந்திக்கவேண்டும்! சிந்திக்க வேண்டும்' என்று திரும்பத் திரும்ப வற்புறுத்தினார்கள்! சிந்தனையின் பெருமை

பற்றித் தமிழ்ப் பெரியார் திரு வி. க. தான் தமது அந்திக் காலத்தில் எத்துணை அழகாகப் பாடியிருக்கிறார்!

வைகாசி மாதத்துப் பிற்பகுதி. கோடையின் வெம்மை நீங்கி சாரல் காலம் ஆரம்பமாகிவிட்டது. வீட்டின் முன் பகுதியில் போடப்பட்டிருந்த சிறிய காய்கறித் தோட்டம் துளிர்த்து தன் மலர்க் கரங்களால் காலத்தின் வேகத்தைக் கணக்கிட்டுக் கொண்டிருந்தது. அவ்வப்போது 'சிலு சிலு'வென்று மலர் சொரிந்தாற்போல் தூறும் சாரலைக் கண்டு குழந்தை ஹஸீனா கைகொட்டி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன தம்பி ஷரீப். நான் கேள்விப்பட்டது வாஸ்தவம்தானா?" என்று கேட்டவாறு வீட்டுக்குள் நுழைந்தார் மாமா.

"என்ன மாமா, வரும்போதே புதிர் போடுகிறீர்கள்!" என்று கேட்டுச் சிரித்தேன்.

மாமா இப்போது அறுபது வயதைத் தாண்டிவிட்டார்! எனினும் முறுக்கு விடாத தேகம். குரலிலும் கம்பீரம் குறையவில்லை.

"நம் அப்துல் கபூர் ராவுத்தர் அத்தாவிடம் வாங்கின பணத்தைத் திருப்பிக் கொடுக்கவில்லை. இப்போது வட்டியும் சேர்ந்து ஆயிரத்தி ஐநூறு ரூபாயாகிறது. நல்ல வேளை, அந்த மனுஷன் கபூர் சாவதற்கு இரண்டு மாசத்துக்கு முன்னாலேதான் வீட்டுப் பத்திரத்தையும் வயல் பத்திரத்தையும் அத்தாவிடம் கொண்டு வந்து கொடுத்து கொஞ்சம் பணமும் வாங்கிக்கொண்டான். இப்போது அவனுடைய மகன் கையில் பத்திரத்தைத் தூக்கிக் கொடுத்து விட்டாயாமே!"

"ஆமாம் மாமா! பாவம்! அவர் திடீரென்று இறந்து விட்டதால் அவருடைய மகனும் மனைவியும் அநாதைகளாக நிற்கிறார்கள். சாப்பாட்டுக்கு வழியில்லை. சிறுவன்—படிப்பை விட்டு சம்பாதிக்கவும் முடியாது. ஆகவே. அந்த அம்மாவை வரவழைத்து, பத்திரத்தைக் கொடுத்து பையன் படித்து முடித்து சம்பாதிக்கும்போது முதலைமட்டும் கொடுத்துவிட்டால் போதும் என்று சொல்லி யனுப்பினேன்."

"அடப் பாவி! இது என்னடா அநியாயம்!

"அநியாயமில்லை மாமா! நியாயம்தான்!"

மாமாவுக்கும் எனக்குமிடையே பேச்சு முற்றிவிட்டது! அவர் போட்ட கூச்சலில் வீட்டுக்குள் வேலை செய்து கொண்டிருந்த என் மனைவியும் தங்கையும் என்னவோ ஏதோவென்று ஓடிவந்தார்கள். வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருந்த குழந்தை ஹஸீனா எதுவும் புரியாத நிலையில் பயத்துடன் தன் தாயின் கால்களைச் சுற்றிப் பிடித்துக் கொண்டாள்.

இறுதியில் மாமா, "நீ எக்கேடுங் கெட்டுப்போ! உன்னுடைய பங்கில் நீ எப்படியும் தான தருமம் பண்ணி சொத்தை நாசமாக்கு—எனக்கு அக்கறையில்லை! ஆனால் என் மருமகளின் சொத்தில நீ கை வைக்கக்கூடாது! அதற்கு இனிமேல்தான் கல்யாணம், காட்சியெல்லாம் இருக்கிறது. ஆமாம் சொல்லிவிட்டேன்" என்றார்.

அச்சமயம் சற்றும் எதிர்பாராத விதமாக, பொங்கும் கண்ணீரை அடக்கிககொண்டு என் தங்கை முன்வந்தாள்!

"மாமா, என்னைப்பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். என்னைக் காப்பாற்றக் கடமைப்பட்டவர் என் அண்ணனை தவிர நீங்களில்லை."

"என்ன சொன்னாய்? உன் அண்ணனா உன்னைக் காப்பாற்றுவான்?"

"ஆமாம்!"

"பதினாறு வருஷ காலமாக உன்மேல் ஈ, கொசு கூட உட்காராமல் பாதுகாத்து உன்னை வளர்த்ததற்குச் சரியான பாடம் கற்பித்துவிட்டாய்! என்ன இருந்தாலும் ஒரு பீஸில் வெட்டின துண்டுதானே! போப் போ! நீயும் உன் அண்ணனும் எக்கேடு கெட்டாலென்ன எனக்கென்ன?" என்று சொல்லிக்கொண்டே திரும்பிக்கூடப் பார்க்காமல் போய்விட்டார் மாமா.

ஒரு பெரிய மழை பெய்து ஓய்ந்துவிட்டாற் போலிருந்தது!

அடுத்த வாரத்தில் மளமளவென்று காரியங்களை முடித்தேன். எங்கெங்கு அநீதி இழைக்கப்பட்டிருந்ததோ அவற்றிற்கெல்லாம் ஓரளவு நிவர்த்தியளித்தேன். யார் யார் கொடுமைப்படுத்தப் பட்டிருந்தனரோ அவர்களுக்கெல்லாம் பரிகாரமளித்து என் தந்தையை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டேன்.

வந்த காரியம் முடிந்தது. எங்கள் சொத்துக்களைப் பொறுப்பும் நேர்மையுமுள்ள ஒருவரிடத்தில் ஒப்புவித்து விட்டு என் தங்கையையும் அழைத்துக் கொண்டு புறப்படத் தயாரானேன்.

மறுநாள் சென்னைக்குப் புறப்படவேண்டும்; வேலைகளும் முடிந்து விட்டன. ஆகவே அன்று மாலை குழந்தை ஹலீனாவை அழைத்துக் கொண்டு மலையடிவாரத்துக்கு உலாவச் சென்றேன். ஊரை விட்டு சுமார் அரை மைல் தூரம் வந்து அக்காட்டுப் பகுதியில் சுற்றிலும் பாம்புப் புற்றுகளும் புதர்களும் நிரம்பிய பெரிய பாறையொன்றின் மீது அமர்ந்தேன். காட்டு மலர்களைப் பறித்துக்கொண்டும், நம்மால பதில் சொல்ல முடியாத கேள்விகளைக் கேட்டுக்கொண்டும் குழந்தை ஹலீனா ஓடியாடிக் கொண்டிருந்தாள். இவ்வித சூழ்நிலை தரும் இன்பம் இனி எப்போது கிட்டும் என்று சிந்தனையில ஆழ்ந்திருந்தேன்.

கவிஞன் தன் கற்பனைக்கு மெருகிட்டுக் காவியம் எழுதிப் புகழடைகிறான். சித்திரக்காரன் வர்ணங்களையும் தூரிகையையும் கொண்டு உலகத்தை அதிசயிக்கச் செய்கிறான். ஆனால இறைவன்?—

இயற்கை எழில் கொழிக்கும் வனப் பிரதேசத்துக்குச் சென்றால் அங்கு ஆண்டவன் செய்திருக்கும் அற்புதங்களைக் கண்டு களிக்கலாம். விதவிதமான புற்பூண்டுகள்! மரங்கள்! விலங்குகள்! பறவைகள்! இன்னும் எத்தனை எத்தனையோ!

திடீரென்று, "அத்தா! அத்தா! உன் பின்னாலே பாரு!" என்று கதறியவாறு குழந்தை என்னிடம் ஓடிவந்தது! பாம்பு ஏதேனுமா என்று நினைத்து, திரும்பிப் பார்த்தேன். "யா அல்லாஹ்!" என்று என்னை யறியாமலேயே கத்திவிட்டேன்! ஓங்கிய தடியுடன் மாமா நின்று கொண்டிருந்தார்!

ஆனந்தக் கண்ணீர்

உரத்தநாட்டுப் புகழேந்தி

ஏதோ ஒரு காரணத்திற்காகத் திரையை விலக்கித் தெருவை நோக்கிய மெஹ்ருன்னிஸாவின் கண்கள் திகைத்தன. தீயை மிதித்து விட்டவள்போன்று திடுக்கிட்டாள். விவரிக்க முடியாத நிலையில் அவள் உள்ளம் நடுங்கியது. பேயறைந்தவளைப் போல அப்படியே நின்றாள். நீக்கிய திரையை அவளுடைய கை தானாகவே நழுவ விட்டுவிட்டது. அவளால் நிற்கக்கூட முடியவில்லை. அருகிலே இருந்த சாய்வு நாற்காலியில் தொப்பென்று விழுந்தாள். அவளுடைய உடலும் உள்ளமும் செயலற்றுப் போயின. ஆனால் அவள் சிந்தனையோ சுழன்று கொண்டேயிருந்தது. அந்த சுழற்சியிலே...!

மெஹ்ருன்னிஸா சிறு பெண். துள்ளிக் குதிக்கும் பள்ளிப் பருவத்தில் அவள் செய்த துடுக்குத் தனத்திற்கு எல்லையே இல்லை! ஒரு நாள் அவள் செய்த குறும்புத் தனத்தைப் பொறுக்க முடியாத அவள் தாய். "உன்னை எவன் வந்து அடக்கப் போகிறானோ?" என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் "நானிருக்கேன் அலுவை அடக்க; நீங்க ஏன் கவலைப் படுறீங்க. மாமி?' என்று கூறிக் கொண்டே உள்ளே ஓடி வந்தான் • மஹ்பூப். அதைக் கேட்ட, மெஹருக்கு ஆத்திரம் ஒரு பக்கம்; வெட்கம் ஒரு பக்கம்; "போடா! பெரிய மனுஷன், அடக்க வந்துட்டான்!" என்று கூறிக்கொண்டே அவனுடைய கையில் அகப்படாமல் ஓடி விட்டாள். "ஏண்டி, மெஹர்! நாளைக்கு உன் புருஷன் அவன்தானடி! அவனைப் போய் 'அடாபுடா' என்கிறியே?" என்று அவள் அன்னை அதட்டுவதற்குள் மானைப்போல் ஓடிய மெஹரைத் தொடர்ந்து அவனும் ஓடிவிட்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம். அந்தச் சிறுமியும் சிறுவனும் சேர்ந்து விளையாடும் சிரிப்பொலி கேட்டது. ஆடிப்பாடியும் ஆர்ப்பாட்டம் செய்தும் கூடி விளையாடும் கோலாகலத்தைக் கண்ட மெஹரின் தாய் களிப்புக் கடலிலே மூழ்கினாள். "மணல் வீடு கட்டி மகிழ்ந்து விளையாடும் இவர்களை, ஆண்டவனே! மணவாழ்க்கையிலும் ஒன்று சேர்த்து வை!' என்று அந்த மாதாவின் மனம் 'துவா' செய்தது.

திடீரென்று மஹ்பூப் அழுது கொண்டே ஓடிவந்தான். "மெஹர் என் கண்ணில் மண்ணைக் கொட்டிடுச்சு, மாமி" என்று அழுது கொண்டே கூறினான். "நான் கட்டியிருந்த வீட்டைகலைச் சிடுச்சு மச்

ஏான்" என்று, மெஹரும் அழுதுகொண்டே முறையிட்டாள். தாயிடம், அவளுடைய மனம் துணுக்குற்றது. இருவரையும் சமாதானப்படுத்தி, "இனிமேல் இப்படியெல்லாம் நடந்துகொள்ளக் கூடாது" என்று புத்திமதி கூறிவிட்டுத் தன் வேலையை கவனிக்கச் சென்று விட்டாள் பாத்திமா.

★ ★ ★

மெஹருன்னிஸா மளிகைக் கடை முஹம்மது ஹுஸைனின் ஒரே புதல்வி. அவருடைய மனைவி பாத்திமா அந்த ஊரில் பெரிய பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள். அவளுடைய அண்ணன் காஸிமின் மகன்தான் மஹ்பூப். தமையனின் மகனுக்குத் தன் மகளைக் கொடுத்துச் சொத்தையும் சொந்தத்தையும் காப்பாற்றிக் கொள்வதிலே அவளுக்குத் தனி அக்கறை! அந்த அக்கறையின் விளைவால் துவக்கத்திலிருந்தே தன் கணவனிடத்தில் தூபமிட ஆரம்பித்தாள். முஹம்மது ஹுஸைனுக்கு, தன் மகளை மஹ்பூப் மணந்து கொள்வதில் ஆட்சேபமில்லை; இருந்தாலும், "எப்பொழுதோ நடக்க வேண்டிய காரியத்தைப்பற்றி இப்பொழுது முடிவு செய்வானேன்? அந்த நேரத்தில் உள்ள சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு நடந்து கொள்வது தானே விவேகம்" என்று வேதாந்தம் பேசினார்.

நாட்கள் ஓடிக்கொண்டேயிருந்தன. நாட்களையும் முந்திக் கொண்டு மெஹ்ருன்னிஸா வளர்ந்து விட்டாள். அவளுடைய வளர்ச்சியுடன் போட்டியிட்டுக் கொண்டே முஹம்மது ஹுஸைனின் செல்வமும் செல்வாக்கும் வளர்ந்து விட்டன. செல்வத்தின் சொந்தக்காரியான செருக்கு, அவருடைய மனவீட்டிலே குடியேறி விட்டாள். காலத்தின் மாறுதல்கள் இவை மட்டுமல்ல; காஸிம் ஏமாளியாக இருந்ததால் ஏழையாகி விட்டார். அவருடைய சொத்துக்கள் எல்லாம் கரைந்துவிட்டன; நிலபுலங்களையெல்லாம் விற்றுவிட்டார்; மனக்கவலையால் நோயில் படுத்தவர்தான்; ஒய்ந்து உறங்குவதற்காகக் கப்ருஸ்தானிலே 'தனி வீடு' கட்டுவதற்கு அவருடைய வீட்டை முஹம்மது ஹுஸைனிடம் அடகு வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. விதவைத் தாயும் விவரம் தெரியாத மகனும் விழியிலே நீரும், நெஞ்சிலே நெருப்புமாகத் தத்தளித்தனர்.

செல்வத்தால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வு முஹம்மது ஹுஸைனின் போக்கை மாற்றிவிட்டது; அவர் யாரையும் இலட்சியம் செய்வதில்லை; தன் அன்பு மனைவியைக் கூடகொடுமையாக நடத்தத் துவங்கினார். அதற்குக் காரணம், அவளுக்குத் தன் அண்ணன் மகனிடத்திலே இருந்த அளவற்ற அன்பும், அந்த அன்பின் காரணமாக மெஹரை அவனுக்கு மனைவியாக ஆக்கிவிடவேண்டும் என்ற ஆவலும்தான். மஹ்பூப் அடிக்கடி வீட்டிற்கு வருவான்; போவான்; அவனை வீட்டிற்கு வரவிடாமல் எப்படித் தடுப்பது என்று தெரியாமல் திண்டாடினார் ஹுஸைன்.

மெஹ்ருன்னிஸா பருவம் எய்தி விட்டாள்! இயற்கை எழில் அரும்பி இருந்த அவள் மேனி, மலரத் துவங்கிவிட்டது. செதுக்கி வைத்த செம்பொன் சிலைபோலிருந்த அந்தச் சுந்தரியை வீடு சிறை கொண்டுவிட்டது. இதுவரை தோன்றாத நாணம், பருவத்தின் வளர்ச்சியால் அந்தப் பாவையிடம் பிறந்து விட்டது. மஹ்பூப் வருகிறான் என்று தெரிந்தவுடன் அவனையறியாமலே ஓடி ஒளிந்து கொள்வாள். அவள் உள்ளமோ அவனைக் காணவேண்டும் என்று துடிக்கும். ஆனால் நாணமோ காணவிடாமல் தடுக்கும். அவளைக் காண்பதற்காகவே அவன் அங்கே வருவான்; தன் மாமியிடம் ஏதேதோ பேசுவான், மெஹ்ருன்னி

ஸாயேயோ அறையிலிருந்தபடியே அவன் பேச்சையெல்லாம் கேட்டு மகிழ்வாள். அறைக் கதவு சிறிது திறந்திருக்கும். அந்த இடை வெளியின் வழியே இருகூரிய வேல்கள் மஹபூபன் மார்பைக் குறிகொண்டு தாக்கும். அந்தத் தாக்குதலை அவனால் எப்படித் சாக்குப் பிடிக்க முடியும்? உடனே அவன் பார்வையும் அந்தப் பக்கம் திரும்பும். குளிர் சிந்தும் வட்ட நிலவு அந்த அறையில குடியேறி விட்டதோ என்று கூறத்தக்க அவ ளுடைய முகம் மின்னலைப்போன்ற புன்னகையை உதிர்க்கும். அவ ளைக் 'காணுது இருள் சூழ்ந்து விட்ட அவன் உள்ளத்திலே அந் தப் புன்னகையின் இன்ப ஒளி வீசும். அந்த ஒளியின் நம்பிக்கை யிலேதான் அவனுடைய உயிர் தாங்க முடியாத காதல் சுமையைத் தாங்கிக் கொண்டிருந்தது.

நாளுக்கு நாள் பாத்திமாவின் உடல் ஒடுங்கிக் கொண்டே வந் தது. தான் இறப்பதற்குள் மெஹர்—மஹபூப் கலியாணம் நிறைவேறிட வேண்டும் என்று துடியாய்த் துடித்தாள். தன் கணவ ரிடத்தில் அது சம்பந்தமாகப் பேசி ஒரு முடிவு காண்பது என்று தீர்மானித்தாள்.

சாப்பிட்டுவிட்டுக் கூடத்திலே சாய்வு நாற்காலியில் முஹம்மது ஹுஸைன் படுத்திருந்தார். "என்னங்க, நம்ம மெஹரின் கல் யாண விஷயம்...?" என்று ஆரம் பிப்பதற்குள் அவள் கண்களிலி ருந்து கண்ணீர் குபீரென்று வந்து விட்டது. அதை எப்படியோ சமாளித்துக்கொண்டு 'நீங்க பாட் டிற்கு சும்மா இருக்கிறீங்களே! அவளுக்கும் வயசாகி விட்டது— நான் 'மௌத்தா' போறதுக்கு முந்தி அவளைக் கல்யாணக் கோலத்தில் கண்டால்தான் என் ஆவி நிம்மதியாகப் பிரியும்" என்று தட்டுத் தடுமாறிக் கூறினாள். முஹம்மது ஹுஸைனுக்குஉடனே கோபம் வந்துவிட்டது. "நான் என்ன, சும்மாவா இருக்கேன்? நீ சாகப் போகிறாய் என்பதற்காக யார் கையிலாவது பிடித்துக் கொடுத்துவிட முடியுமா? நானும், நல்ல மாப்பிள்ளையாகத் தேடிக் கொண்டுதான் இருக்கேன்" என்று படபடப்பாகப் பேசினார். பாத்திமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. உலகமெல்லாம் இருண்டு. சர்வ ஜீவராசிகளும் அடங்கி. தன் ஆவியும் ஒடுங்கிவிட் டதாக நினைத்தாள். "என்ன சொல்றீங்க? மாப்பிள்ளை தேடு றீங்களா?" யாருக்கு மாப்பிள்ளை தேடுறீங்க! நம்ம மஹபூப் இருக் கும்போது?" என்று ஏக்கத்தோடு கேட்டாள். முஹம்மது ஹுஸைன் திடீரென்று வெறியனாக மாறிவிட் டார். இத்தனை நாள் அவருடைய இதயத்திலே கொந்தளித்துக் கொண்டிருந்த எண்ணக் குமுறல் கள் இன்று கோபாக்கினியாக வெடித்துவிட்டன. "சீ! என்ன சொன்னே? என் மகளை உன் அண்ணன் மகனுக்குக் கொடுப் பதா? என்ன துணிச்சல் உன க்கு? என்னிடத்தில் பெண் கொள்ள அவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? அன் றாடம் சோற்றுக்குத் திண்டாடும் அன்னக் காவடிக்கு என் பெண் ணைக் கொடுப்பதைவிட பாழுங் கிணற்றில் தள்ளி விடலாமே! நானும் இதுவரை ஏதோ பொறுத் துக் கொண்டிருந்தேன்; இனி மேல் என்னால உனதுஉளறல்களை யெல்லாம் பொறுத்துக் கொள்ள முடியாது. யாருக்குக் கல்யாணம் செய்து கொடுக்க வேண்டும் என் பது பற்றி எனக்குத் தெரியும்; அந்தச் சோம்பேறிப் பயல் இனி மேல் இந்த வீட்டில் அடியெடுத்து வைக்கக்கூடாது" என்று கோப மாகக் கூறிவிட்டு வெளியேறி விட்டார் முஹம்மது ஹுஸைன்.

அன்று இரவு தேம்பித்தேம்பி அழும் இரண்டு தீனக்குரல்கள் தெளிவாகக் கேட்டுக் கொண்டி ருந்தன. ஆம்! தாயும் சேயும் துடி துடித்த நெஞ்சுடன் தேம்பித்

தேம்பி அழுதனர். அன்று அழுது கொண்டே படுக்கையில் படுத்தவள்தான் யாத்திமா. மீண்டும் அவள் எழவே இல்லை; படுத்த படுக்கையாகி. ஆறாத நெஞ்சப் புண்ணால் அல்லல்பட்டு, கண்ணீர் சிந்திச் சிந்தி உடல் கரைந்து விட்டாள்; நிறைவேறாமல் நிராசையாகிவிட்ட அவள் நெஞ்சக் கனவுகள் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாகடித்து விட்டன.

தாய் இறந்துவிட்ட துக்கம் ஒரு பக்கம்; தான் காதலித்தவனைக் கல்யாணம் செய்ய முடியவில்லையே என்ற துயரம் ஒரு பக்கம். இதற்கிடையிலே கிடந்து துடித்துக் கொண்டிருந்தாள் மெஹ்ருன்னிஸா. முஹம்மது ஹுஸைனோ மாப்பிள்ளை தேடும் முயற்சியில மும்மரமாக ஈடுபடலானார். தன் வாழ்க்கையைமெருகிடுவாள் என்று நினைத்த மெஹர், தனக்கிலலே என்று தெரிந்துவிட்ட பிறகு; அந்த ஊரிலே தங்கியிருக்க மஹபூபுக்கு விருப்பமில்லை. தன் தகப்பனாருக்குத் தெரிந்த ஒருவரின் உதவியால் சிலோனுக்குச் செல்வது என்று தீர்மானித்து விட்டான். ஆனால் அந்த ஊரை விட்டுப் போகுமுன் தன் உயிரோவியத்தை ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்ற துடிப்பு இருந்தது. அவன் வீட்டிற்குள் போவதற்குத்தான் தடை விதித்து விட்டாரே முஹம்மது ஹுஸைன்! ஆகவே பித்துப் பிடித்தவனைப் போல அவள் வீடு இருக்கும் தெருவழியே போய்க் கொண்டிருந்தான்.

சன்னல் கதவுகள் திறந்திருந்தன; அங்கே மெஹ்ருன்னிஸா நின்று கொண்டிருந்தாள். எதற்காகவோ, கதவைத் திறந்தவள் எதிரே மஹபூப் நிற்பதைக் கண்டதும் கலங்கி விட்டாள். இருவர் கண்களும் அருவியாகி விட்டன. தெருவில் நிற்கும் உணர்வைக் கூட மறந்து விட்டான் மஹபூப்! "போய் வருகிறேன் மெஹர்! என் உயிருள்ளவரை உன்னை மறக்க மாட்டேன்" என்று கூறிக் கொண்டே திரும்பிப் பார்க்காமல் சென்று விட்டான்.

★ ★ ★

அன்று பராரியாகச் சிலோனுக்குச் சென்ற மஹபூப்தான் இன்று பணக்காரனாக ஊருக்குத் திரும்பியிருக்கிறான். ஆறு ஆண்டுகள் சிலோனில். அயராது உழைத்துச் சிறுகச் சிறுகச் சேமித்த பணத்தையெல்லாம் முதலாக வைத்துப் பெருந்தொழில் ஒன்று ஆரம்பித்து ஏராளமான பொருளைக் குவித்தான்; நாளா வட்டத்தில் அந்தப் பொருள்களையெல்லாம் தன் தாயின் பேருக்கு அனுப்பிக் கொண்டே வந்தான். தந்தையால் ஏற்பட்ட கடன்களை அடைத்து, அடகு வைத்திருந்த பூர்வீகச் சொத்துக்களையெல்லாம் மீட்டு, தேவையான நிலபுலங்களைவாங்கிக் கொள்வதற்கான ஏற்பாடுகளையெல்லாம் அவன் அங்கிருந்தபடியே செய்தான். முடிவில் இந்தியர்கள் இலங்கையில் தங்கமுடியாது என்ற நிலையுண்டானபோது சொத்துக்களையெல்லாம் பலவகையிலும் ஊரு

க்கு அனுப்பிவிட்டு இறுதியில் அவனும் வந்துவிட்டான். அவன் தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்ததைத்தான் மெஹர் கண்டு மனமொடிந்து பழைய நினைவுகளால் தாக்குண்டு துடித்துக் கொண்டிருந்தாள்!

மெஹ்ருன்னிஸாவைப் பெரிய இடத்திலே கல்யாணம் பண்ணிக் கொடுத்தார் முஹம்மத் ஹுஸைன். அந்த ஊரிலேயே யாரும் இதுவரை அந்த மாதிரி கல்யாணம் செய்ததில்லை என்ற புகழைத் தேடித்தரும் அளவுக்கு விமரிசையாக விவாகத்தை நடத்தினார்; விதவிதமான விருந்துகள்; வகை வகையான வான வேடிக்கைகள்; இசை அரங்குகள்; நடன நிகழ்ச்சிகள்! இன்னும் எத்தனையோ கோலாகலங்கள் அந்தக் கலியாணத்திலே நிகழ்ந்தன. ஆயினும் மெஹ்ருன்னிஸா உயிரற்ற கட்டையைப்போல் எல்லாச் சடங்குகளிலும் ஈடுபட்டாள்.

அழுதுகொண்டே புறப்பட்டவள் மீண்டும் இரண்டு ஆண்டுகளுக்குள் அழுது கொண்டே தன் தாய் வீட்டிலே நுழைந்தாள். முன்னர் அழுதுகொண்டு பிரிந்தபோது "அழாதே அம்மா! நான் அடிக்கடி வந்து உன்னைப் பார்க்க மாட்டேனா" என்று ஆறுதல் கூறிய தந்தை, பின்னர் அழுதுகொண்டே நுழைந்தபோது "ஏன் இன்னும் அழுது தொலைக்கிறாய்! நீ போன இரண்டு வருஷத்துக்குள்ளேதான் புருஷனைத் தூக்கித் தின்னுட்டியே! இன்னும் யாரைத் தூக்கித் திங்கணும்?" என்று வாழ்த்துரை கூறியபடி ... வற்றார் பணக்கார வீட்டுப் பிள்ளை. பணத்திமிரால் எத்தனை ... பாவச் செயல்களைச் செய்து, ... பல பாவைகளின் வாழ்வைப் ... றாக்கிவிட்டு, விதவிதமான ... ய்களுக்கு ஆளாகி, பல ஆயிரக் கணக்கான ரூபாயை நாசமாக்... தால் அருமையாகப்பெற்ற க்ஷயரோகத்தால் அல்லா(ஹ்)விடம் சேர்ந்துவிட்டான் என்றால், அதற்கு அப்பாவியான மெஹ்ருன்னிஸாவா பொறுப்பு? ஆம், சமுதாயமும் அவளைத்தான் பழித்தது. அவளுடைய 'தலைவிதி' அவனைக் கொன்றுவிட்டதாகக் குற்றம் சாட்டியது. "சின்னஞ் சிறுசு விதவையாகிவிட்டாள்" என்று யாரும் கண்ணீர் வடிக்கவில்லை—'புகுந்த இடத்தைப் பொசுக்கி விட்டா'.

ளே" என்றுதான் யாவரும் பழிச்சொல், கூறினர். இந்தச் சொல்லம்பு அவளுடைய இதயத்தைக் குடைந்து கொண்டே இருந்தது. விதவைகளுக்கு வாழ்வளித்ததால் பெருமை பெற்றுள்ள ஒரு சமுதாயத்தில். இன்று விதவைகளின் நிலை வேதனை தருவதாக இருக்கிறது. மணச் சந்தையிலே விதவைகளின் மதிப்பு பெரும் அளவு குறைந்திருக்கும் நிலையில், மெஹரைப்போன்ற "புருஷனைத் தின்றவர்களு"க்கு மதிப்பு எப்படி இருக்க முடியும்? யாரும் அவளைத் திருமணம் செய்து கொள்ளத் துணியவில்லை — அதுவும் முஹம்மது ஹுஸைன் ஏழையாகிவிட்ட பிறகு. அவரைத் தேடிவருவார் யாருமில்லை. ஏக்கமும் ஏமாற்றமும் தாக்கிடும் நிலையில் தந்தையும் மகளும் நாட்களை ஓட்டிக் கொண்டிருந்தனர்.

முஹம்மது ஹுஸைன் இரவு உணவு அருந்திவிட்டு ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியவாறு திண்ணையிலே வீற்றிருந்தார். மெஹ்ருன்னிஸா படுக்கையில் படுத்தவாறு தூக்கமின்றித் தத்தளித்துக்கொண்டிருந்தாள். அவர்கள் இருவருடைய உள்ளமும் எதை எதையோ எண்ணிப் புலம்பிக்கொண்டிருந்தன. அந்த நேரத்திலே ஒரு பெண்ணும் ஆணும் அவர்களின்விட்டை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். இந்த நேரத்தில் தன் வீட்டிற்கு யார் வருகிறார்கள் என்பது புரியாமல் முஹம்மது ஹுஸைன் மிரள மிரள விழித்தார். "என்ன மாமா, சௌக்கியமா?" என்று கேட்டுக்கொண்டே தன் தாய் பின் தொடர வீட்டிற்குள் நுழைந்தான் மஹபூப்! முஹம்மது ஹுஸைனுக்கு ஒரே வியப்பாக இருந்தது அவருக்குத் தன் விழிகளையே நம்ப முடியவில்லை; "வாங்க வாங்க!" என்று கூறிக்கொண்டே "மெஹர், உன் மாமி வந்திருக்காங்க. பாயை எடுத்துப் போட்டு உட்காரச் சொல்" என்று தன் மகளுக்கு உத்திரவிட்டார். அவருடைய கண்களிலே நீர் பொல பொல என்று உதிர்ந்தது. "மஹபூப்! என்னை மன்னித்து விடப்பா! உனக்கும் என் மகளுக்கும் பெரிய துரோகம் இழைத்துவிட்டேன். பணத்திமிரால் பண்பிழந்து நடந்தேன். என்னை மன்னித்து விடு" என்று கதறினார்.

"மாமா, நடந்ததை யெல்லாம் எண்ணி ஏன் வருந்துகிறீர்கள்? எல்லாம்அல்லாஹ்வின் எண்ணப்படிதானே நடக்கும்! நம்மால் ஆகக் கூடியது என்ன இருக்கிறது? நடந்ததையெல்லாம் மறந்து விடுங்கள் மாமா!" என்று மஹபூப் அவரைச் சமாதானப் படுத்தினான்; எனினும் அவன் கண்கள் தாரைத் தாரையாக நீரைச்சொரிந்தன. "மெஹ்ருன்னிஸாவின் வாழ்க்கை வளமாக இருந்திருக்குமானால், அதுவே எனக்குப் பெரிய மகிழ்ச்சியாக இருந்திருக்கும்; அவள் வாழ்க்கைதான் வாடிவிட்டதே மாமா! அதைக்கண்டு என்னால் பொறுக்க முடியவில்லை" என்று வேதனையுடன் கூறினான். "ஏழை என்ற காரணத்திற்காகத்தானே என்னை ஏளனம் செய்தீர்கள்? நீங்கள் விரும்பியபணத்தைப் போர் போராகக் குவித்து விட்டேன் மாமா! இப்பொழுதாவது எனக்கு உங்கள் மகளை மணம் செய்து கொடுக்க ஆட்சேபனையில்லையே" என்றும் கேட்டு விட்டான். முஹம்மது ஹுஸைனுக்கோ ஒன்றுமேபுரியவில்லை! தன்னை மஹபூப் கிண்டல் செய்வதாக நினைத்தார். தான் ஏழையாகிவிட்ட நிலையில் விதவையாகியிருந்த தன் மகளைத் தன்னால் ஒருகாலத்தில் வெறுத்து விரட்டப்பட்ட ஒருவன் மறுமணம் செயது கொள்வான் என்று அவர் கனவிலகூட நினைத்திருக்க முடியாதல்லவா?

"மஹபூப்! நான் மனம் நொந்து இருக்கிறேன். தயவுசெய்து என்னைச் சித்திரவதை செய்யாதப்பா"

என்று கெஞ்சுவதுபோலக் கூறினார்.

கதவருகே மெஹர் நின்று கொண்டு அவர்கள் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்தாள்! மஹ்பூப் அவளைக் கண்டதும் மனம் கலங்கி விட்டான்!

"இல்லை மாமா, உண்மையாகவே சொல்கிறேன். மெஹ்ருன்னிஸாவை நான் மணந்து கொள்கிறேன் என்றான் மஹ்பூப். அவன் குரலில் உறுதி தொனித்தது.

அதைக்கேட்ட மெஹரின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

"மெஹர்! ஏன் அழுகிறாய்? நடந்ததை மறந்து விடு" என்றாள் மஹ்பூபின் தாய்.

"நான் அழவில்லை மாமி! இது ஆனந்தக் கண்ணீர்!" என்று மெஹர் மறுமொழி கூறியபோது, அவள் அழகிய வதனத்திலே ஒரு மின்னொளியும் புன்னகையும் தோன்றி மறைந்தன!

டாக்டர் ஜான்ஸன் எழுதியது:

பதினெட்டாம் நூற்றாண்டில் உயிர் வாழ்ந்த பிரபல ஆங்கில அறிஞரும் எழுத்தாளருமான டாக்டர் சாமுவேல் ஜான்ஸன் தமது "ஓரியண்டல் ரெலிஜன்ஸ்" என்னும் ஆங்கில நூலில் இஸ்லாத்தின் திருமறையைப் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார். கரடுமுரடான ஆங்கில மொழிக்கும், மிக நீளமான சொற்றொடர்களுக்கும் உலகம் பிரசித்தி பெற்ற டாக்டர் ஜான்ஸனின் ஆங்கிலத்தை ஜனாப் ஈ. ஜி. முஹ்யித்தீன் அவர்கள் தம்மால் இயன்றவரை திறமையுடன் தமிழாக்கம் செய்துள்ளார்:

'திருக்குர்ஆன் ஒரு காவியமல்லவென்றால்—அஃது காவியமா, அல்லவாவென நிர்ணயிப்பது மிகக் கடினம்—அஃது கவிதையைக் காட்டினும் சிறந்தது. அஃதொரு சரித்திரத் தொகுப்பன்று; ஒருவருடைய வாழ்க்கை வரலாறுமன்று; மூசா நபி அவர்கள் தூர்ஸினா மலையில் வசனித்த விருத்தாந்தங்களடங்கிய ஞானபோதமுமன்று; உண்மையான, பொய்யான தீர்க்கதரிசிகள் யாவர் என்பதைப் பற்றித் தர்க்க ரீதியான முறையில் பிளேட்டோ எழுதிய வேதாந்த ஆராய்ச்சிப் பிரபந்தமுமன்று.

"இஃதொரு தீர்க்கதரிசியின் அறைகூவல்; தனக்குத் தானே நிகராய், எனினும், அதன் ஆழிய கருத்துக்கள் அகில உலகத்துக்கும் பொதுவானவையாய், விரும்பியோ, விரும்பாமலோ எக்காலத்தவரும் அதன் உபதேசங்களை ஏற்று நடந்தே தீரவேண்டியதாய் அமைந்திருக்கின்றது. இந்த அறைகூவல் அரண்மனைகளிலும், பாலைவனங்களிலும், பட்டினங்களிலும், ஏன், சாம்ராஜ்யங்களிலும் வித்தியாசமின்றி எதிரொலித்தது. முதலில், இந்த அறைகூவல் உண்மையான விசுவாசிகளை ஊக்குவித்து உலகத்தையே வெற்றி கொள்ள உதவியது. அதன் பின் அஃதொரு புனருத்தாரண வியக்கமாய்த் திரண்டு, கிரீஸிலும் ஆசியாவிலுமுள்ள ஆக்க ஞானங்களை உருவாக்கி, அந்தகாரத்தில் ஆழ்ந்திருந்த கிறிஸ்துவ ஐரோப்பாவில் ஊடுவிப் பாய்ந்தது."...........

மூலம்: ஓரியண்டல் ரெலிஜன்ஸ் தமிழாக்கம்: ஈ. ஜி. முஹ்யித்தீன்

இக்பால் கவிதையின்பம்

ஜே. எம். ஹுஸைன், பி. ஏ.,

கவிஞரின் நாட்டுப்பற்று குறிப்பிடத்தக்கது. தாம் ஒரு இந்தியன் என்பதை எண்ணி அவர் பெருமைப்பட்டார். மத வேறுபாடோ, இதர கருத்து வேறுபாடோ நாட்டு ஐக்கியத்துக்குத் தடைக் கல்லாக இருக்கக்கூடாது என்று அவர் கருதினார். அடிமை இந்தியாவின் இழிநிலை கருதி அவர் கண்ணீர் உகுத்தார். இந்தியாவை மேலும் மேலும் வீழ்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்ல பிறநாடுகளில செய்யப்படும் சூழ்ச்சிகளையும், சதிச்செயல்களையும் அவர் அறிந்தார். அவற்றையெல்லாம் உணர்ச்சியோடு வெளியிட்டிருக்கிறார்:

"சிந்தையற்றவனே! உன் திரு நாட்டைப்
பற்றி எண்ணிப் பார்த்தாயா?
உன்னை அழிக்க மேல் நாட்டிலே
சதி நடக்கிறதடா!
நடப்பதையும் நடக்கவிருப்பதையும் பார்!
வெறும் பழங்கதை பேசுவதில் என்ன இருக்கிறது?
இதை உணராவிட்டால இந்திய மக்களே!
நீங்கள் அழிந்து படுவீர்கள்!
உலக வரலாற்றிலே உங்களது அடிச்சுவடே
இல்லாது அழிந்து போகும்'.

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதிலோர் மகிமையில்லை' இதை உணர்ந்து செயலாற்றவேண்டும்; நிகழ் காலத்தை வருங் காலத்தோடு இணைத்துப் பார்த்து, சதா செயலாற்றவேண்டும் என்பதைக் கவிஞர் தெளிவாக அறிவுறுத்துகிறார்.

'ஜாவீது நாமா'விலே அடிமை இந்தியாவின் நிலையை உள்ளம் உருகக் கூடிய முறையில் அவர் வருணித்திருக்கிறார். அழகிய அந்த வனிதை — இந்தியா — விண்ணிலிருந்து இறங்கி வந்தாள். அவளது நெற்றியிலே செவ்வீச்சுடர் ஒளி விட்டது. அவள் கண்களிலே தெய்வீக அன்பு தேங்கி நின்றது. அவளது உடையிலே கவர்ச்சி இருந்தது. ஆனால் உள்ளத்திலோ சோகம் தான் தேங்கிக் கிடந்தது. அவள் கையிலே விலங்கு; கண்டத்திலிருந்து இதயம் பிளக்கும் சோக ஒலி. இதற்கெல்லாம் காரணம் ஒரு சில துரோகிகள். மீர்ஜாபர், சாதிக் போன்ற அந்தத் துரோகிகளைத் தான் எவ்வளவு கடுமையான முறையில் அவர் கண்டிக்கிறார்! இத்தகைய நிலையைக் கண்ட பிறகு வருத்தத்தோடு கவிஞர் பாடுகிறார்:

"நீ இந்தியாவைக் கண்டதில்லையா?
இதயம் படைத்த யாரும் போற்றும்
திருநாடல்லவா அது? அதன்
ஒவ்வொரு அணுவும் உலகின் மீது
ஒளி வீசினாலும்
அந்தோ!
அது புழுதியிலும் குருதியிலும்
கிடந்து தத்தளிக்கிறதே......'.

கவிஞரது உண்மையான நாட்டுப் பற்று இதயத்தைத் தொடும் இந்த அடிகளிலே தெளிவாகத் தெரிகிறது. "இந்தியாவே...இதயம் அணி செய்யும் இந்தியாவே!...கங்கையும், யமுனையும் பொங்கிப் பொலியும் புனித நாடே...! 'கதைகளெல்லாம் உன் கதையே வெகு துயரமானது' என்று அவர் பாடினார்.

பிற்போக்கையெல்லாம் மாற்றி உயர் நிலையடைய இந்தியர்கள் பகைமையையும் குரோதத்தையும் மறந்து ஒன்றுபட்டு வாழ வேண்டும்.

ஒற்றுமை......அது தான் ஒரே வழி என்பதை கவிஞர் வலியுறுத்துகிறார். இந்தியர்களெல்லாம் ஒன்றுபட்டு வாழ்ந்தால் பல துறைகளிலும் முன்னேற்றங் காணலாம் என்பதை அவர் அப்போதே கண்டறிந்தார். இனிவரும் நாட்களில பாரதம் எல்லாத் துறைகளிலும் பேரும் புகழும் பெற்று சிறப்புடன் திகழும் என்று அன்றே அவர் கனவு கண்டார். இந்தக் கனவை அவரது 'ஜாவீது நாமா'வில் நிறம்படக் காண்கிறோம்.

காலம் மாறும்: கருத்து மாறும். கொள்கைகள் மாறும். ஆனால் இந்தியர்களின் நல்வாழ்வுக்கு இக்பால் கண்ட வழியை மட்டும் மாற்ற முடியாது. எக்காலத்துக்கும் பொருத்தமான சிறந்த வழி அது; இந்தியாவின் வளமிக்க எதிர்கால நல்வாழ்வுக்குக் கவிஞர் கூறிய இந்த அறிவுரைகளை நாம் மறக்கவே முடியாது. எக்காலத்திலும் அது கலங்கரை விளக்கமாகத் திகழ வேண்டும்:

''வாருங்கள். பகைமை என்னும்
பாழுந்திரையை விலக்குவோம்,
பிரிந்தோர் பலரையும் இணைப்போம்.
வேற்றுமை விட்டுச் சென்ற சுவடுகளை
அழித்தொழிப்போம்.
இதயம் விரும்பும் இன்ப இடம்
இதுநாள் வரையில இருப்போர் அற்ற
புதிய இடம்
இங்கே அமைப்போம் கோயில் ஒன்று
புதிய ஆலயம் அதன் பெயரே;
அது அன்புக் கோயில்
நேசிக்கச் செய்யும் நிலையம்...''

இந்தியர்களின் தாழ்நிலையைக் கவிஞர் கண்டார். அதை இதயம் நெகிழக்கூடிய வண்ணம் வருணித்தார். மனித சமுதாயம் வீழ்ச்சிப் பாதைநோக்கி வேகமாகச் செல்லுவதைக் கண்டார்; மனிதன் நற்பண்புகளைக் கைவிட்டு நலிந்த வாழ்வு வாழ்வதைக் கண்டார். அதை உள்ளது உள்ளபடி வருணித்தார், ''இறைவா! உனது படைப்பிலே உயிர் இல்லை; வேறு சமுதாயத்தை சிருஷ்டிபேன்'' என்று பாடினார். முஸ்லிம்களின் பிற்போக்கு நிலையைக் கண்டார். இதை வருத்தத்துடன் வருணிக்கிறார். 'ஷிக்வா'வில் இன்றைய முஸ்லிம்களின் இழிநிலையை வருணிக்கும்போது அவரது நடை நமது உள்ளத்தைத் தொட்டு விடுகிறது. துன்பத்திலே வாடும் முஸ்லிம் இறைவனிடம் நலம் நாடி மன்றாடுகிறான்;

> திரும்பத் திரும்பப் பலமுறை படித்து மகிழத்தக்க இனிமையும்கருத்தும்உடைய இக்பாலின் கவிதைகளில் காணப்படும் பல்வகைச் சுவைகளையும் இனிய தமிழில் எளிய நடையில் எடுத்தெழுதுகிறார் இதன் ஆசிரியர். முஸ்லிம் முரசு வெளியீடாக வரவிருக்கும் இந்த அழகிய தமிழ் நூலில், கவிஞர் இக்பால் அருளிய கவிதையின்பத்தின் தேன் துளிகள் சிலவற்றை நேயர்கள் இக்கட்டுரையில்சுவைக்கலாம்.

''எங்கள் இறைவா! நாங்கள் ஏழைமையில
வாடுகிறோம். துன்பத்தில் உழலுகிறோம்
பிறரால் எள்ளி நகையாடப்படுகிறோம்.
உனக்காகவே வாழ்ந்து உனக்காகவே
உயிர்விடச் சித்தமாக யிருக்கும் எங்களுக்கு
நீ அளிக்கும் பரிசு இதுதானா...?
....
இந்த உலகம் இன்று மாற்றாரின் உலகமாக
மாறிவிட்டது எங்களைப் பொறுத்த வரையில்
ஒரு கனவு உலகம்—கற்பனை உலகம்—தான்
மிஞ்சியிருக்கிறது

ங்கள் மட்டும் இன்னும் உயிருட
ஏிருக்கிறோம்.
ஏ! எங்கள் இறைவா... எங்களிடம்
இரக்கம் கொள். புததுணர்ச்சி
ஊட்டு.

வீறு பெற்றுப் புது வாழ்வு வாழ
எங்களுக்கு உதவி செய்''

இத்தகையதொரு வேண்டுகோள் — வருணனை — தாழ்ந்து கிடக்கும் மக்கட் சமுதாயம் முன்னேறவேண்டும் என்ற சிறந்ததொரு பண்பின்—மக்கள் நல நாட்டம் என்ற பண்பின்—நல்லதொரு எடுத்துக் காட்டு.

மனிதர்களின் துன்பத்தைக் கண்டு மட்டும் கவிஞரது இதயம் வருந்தவில்லை. மணம் தந்து இளங் காற்றிலே நடனமிடும் மலர்க் கூட்டத்தின் துன்பத்தைக் கண்டும் அவர் வருந்துகிறார்; அவர் உள்ளம் வருந்துகிறது. காற்றிலே அசைந்தாடும் அற்ப மலரைக் காண்கிருர். அதன் துன்பத்தை அறிகிருர், கவிஞர் உமர் கய்யாமிடம் ரோஜா மலர் உரையாடியதைப் போல இக்பாலிடம் அந்த மலர்கள் பேசுகின்றன! காற்றிலே மலர் அசைந்தாடுகிறது. தன்னைக் கண்டுதான் அது அஞ்சுகிறதோ என்று கவிஞர் நினைக்கிருர்! அதன் அருகிலே சென்று மெதுவாக அதனுடன் பேசுகிருர்— ஆறுதலளிக்கிருர்:

''நடனமிடும் மலர்க்கூட்டமே!
நான் மலர் பறிப்பவனலல என்பதை
நீங்கள் எப்படி உணரும்படிச் செய்
வேன்?
என் கரம் அவ்வளவு கொடுமை
மையானவையல்ல
வானம்பாடியின் கண் கொண்டல்
லவோ
நான் உங்களைப் பார்க்கிறேன...''

மலரின் நண்பன் இளந்தென்றல், குறும்புக்காரனான காற்று, மலர்ப் பெண்ணை அடிக்கடி தீண்ட வருகிறன். அவள் அவனுக்கு ஆட்டம் காட்டுகிருள்; அங்குமிங்கும் நகர்ந்தோடுகிருள். இருவருக்குமிடையே இன்பப் போராட்டம். கவிஞர் இதைக் காண்கிருர். காற்று வேண்டுமென்றே மலர்களைத் துன்புறுத்துவதாக அவருக்குத் தோன்றுகிறது. மலர்களுக்கு ஆறுதல் சொல்லும் வகையில் அவர் பாடுகிருர்.

''ஒரு மலர் இதழையாவது தென்
றல் அசைத்தால்
அதற்கு ஏற்படும் அதிர்ச்சி என்
இதயத்திலே
எதிரொலிக்கிறது. அது கண்ணீ
ராக
வெளிப்படுகிறது''

இப்படியாக இவ்வுலகிலுள்ள எல்லாப் பொருள்களின் நலனிலும் கவிஞருக்கு அக்கறையுண்டு. அவைகளின் நலனே அவருக்கு மகிழ்ச்சி யளிக்கிறது.

உலகனைத்தும் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பது கவியுள்ளத்தின் நோக்கம். இந்த நோக்கம் வெற்றி பெறும் வழியில் ஏதேனும் இடையூறுகள் காணப்பட்டால் அவற்றை ஒழித்துக்கட்ட கவிஞன் முன் வருகிறன். இத்தகைய தீய சக்திகளை எதிர்ப்பதில் கவியுள்ளம் இரக்கமற்றது. கவியுள்ளத்தில் புயலும் மின்னலும் இடம் பெறும்; புரட்சிப் பூகம்பம் அங்கே புனமுறுவல் செய்யும்.

''கொலே வாளினை எடடா மிகு
கொடியோர் செயல அறவே...''
''புதியதோர் உலகு செய்வோம்''
''தனியொருவனுக்கு உணவில்லை
யெனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்''

என்றெல்லாம் கவிஞன் யுத்தப் பேரிகை கொட்டுவதற்கு இந்த மனநிலையே காரணம்.

சமுதாய அமைப்பிலே அதிருப்திகரமான சில பிற்போக்கு சக்திகள் இடம் பெற்றுவிட்டன. மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டப்படுகிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வு தலைவிரித்தாடுகிறது. இத்தகையவிரும்பாத நிலையை மாற்றியமைக்க வேண்டும். அப்படி முயலும்போது எண்ணத் தொலையா எதிர்ப்புக்கள் தோன்றலாம். எதிர்நோக்கி வரும் எல்லா

வித இடையூறுகளையும் ஒழித்துப் புரட்சிகரமான ஒரு நிலையை உண்டு பண்ணவேண்டும் என்று கவிஞன் நினைக்கிறான். இன்றைய உலகில் காணப்படும் அதிருப்திகரமான பொருளாதார பேதத்தைப் போக்கி உழைப்பவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி பெறச் செய்ய வேண்டாமா? உழைப்பவன் தனது உழைப்பின் பலனை அனுபவிக்க வேண்டாமா? அவசியம் வேண்டும்.

இதோ கவிஞர் இக்பால் "புரட்சி செய்" என்று பேரிகை கொட்டுகிறார்!

"எழுங்கள்......
உரிமை இழந்த ஏழைகளைத் தட்டி
எழுப்புங்கள்.
உணர்ச்சியற்று உறங்கும் மக்க
ளைத் தட்டி எழுப்புங்கள்.
பணக்கோட்டைகள் அதிர்ந்து
சாயட்டும்
அடிமையின் குருதி உயிர்பெற்று.
உணர்ச்சி பெற்று ஓடட்டும்.
எளிய ஊர்க்குருவி இராஜாளியை
எதிர்க்க பலமளியுங்கள்.
மக்களாட்சி மலரவேண்டிய அந்த
நாள்
நெருங்கி விட்டது.

உழவனது உழ
வுக்கு உதவாத
கழனி
எங்கிருந்தாலும்
அதிலே
ஒரு தானிய மணி
கூட மிஞ்சாதபடி
நெருப்பிலிட்டுக்
கொளுத்துங்கள்.
சலவைக் கற்க
ளால் செய்யப்
பட்ட
பிரார்த்தனை
ஸ்தலங்களை
நான் வெறுக்கி
றேன்.
மண்ணாலான
குடிசைகள்
எழட்டும்.
என்னை வணங்க

அவையே போதும்.
கீழ்நாட்டுக் கவிஞனுக்கு வெறியை
ஊட்டுங்கள்:
'அவன் நவீன நாகரிக மென்னும்
கண்ணாடித் தொழிற் சாலையை
நொறுக்கி எறிந்து விடுவான்..."

சமுதாயத்தில் காணப்படும் குறைபாடுகளைப் போக்க வேண்டும்; மக்கள் அனைவரும் நலமுடன் வாழவேண்டும்; வளமாக வாழவேண்டும் என்ற கவிஞரது எண்ணமெல்லாம், இங்கே நன்றாகத் தெரிகிறது. அவரது புரட்சியுள்ளம் இங்கே புன்முறுவல் பூத்து நிற்கிறது.

"உண்மைக் கவிஞன் ஒரு தீர்க்கதரிசி" என்று வால்ட் விட்மன் குறிப்பிட்டிருக்கிறார். பின்னால் நடக்கப் போவதை கவிஞன் முன்னாலேயே அறிந்து விடுகிறான். அவன் குறிப்பிடுவது நடந்து விடுகிறது. கவிஞன் கழிந்துபோன சம்பவத் தொகுதிகளிலிருந்து வருங்காலத் தன்மையை அறிகிறான். தான் அறிந்ததைப் பிறர் நன்றாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் எடுத்துக் கூறுகிறான்.

"நாளை நிகழ்வதை நேற்றைய நிகழ்ச்சியிலிருந்து நான் அறிகிறேன்" என்று இக்பால் பாடினார். இக்பால் முன்கூட்டியே கவிதைகளில் வெளிப்படுத்திய பல விஷயங்கள் பிறகு உண்மையாக நிகழ்ந்திருக்கின்றன. 1907ம் ஆண்டில் எழுதிய "மேற்கத்தியர்களுக்கு எச்சரிக்கை" என்ற கவிதையில் இக்பால் குறிப்பிட்டார்:

"மேற்கே வாழ்பவர்களே...!

இறைவன் படைத்த இந்த உலகை
'சந்தைக் கடை' என்றுரைத்தீர்.
....

'மெலலிய கொம்பில் கட்டப்படும்'
கூடு
விரைவில் அழிவதைப்போல
உங்கள்
நாகரிகம்
தன் வாளினாலேயே தற்கொலை
செய்து கொள்ளும்''

இந்தப் பாடல் வெளிவந்த நான்கைந்து ஆண்டுகளில் முதல் மகாயுத்தம் ஆரம்பமாகி விட்டது! மெல்லிய கொம்பில் கட்டப்பட்ட கூட்டைப்போல அந்த மேல்நாட்டு நாகரிகம் தன் வாளினாலேயே தற்கொலை செய்து கொண்டதை உலகம் கண்டது. இவ்விதம் கவிஞரது தூர நோக்குப் பலித்து விட்டது. இதுதான் உண்மைக் கவிஞனது பண்பு. கவிஞனது தீர்க்க திருஷ்டி பொய்த்துவிடக் கூடாது. வருங்கால முணரும் வன்மை கவியுள்ளத்தோடு தொடர்பு கொண்டது.

இதைப்பற்றி இக்பாலின் நண்பர் கிராமி என்பவர் எழுதியுள்ள ஒரு பாட்டு நினைவில் வைத்துக் கொள்ளத்தக்கது.

''பொருள்களின் தத்துவார்த்தம்
அறிந்தவர்களுக்கு
இக்பால் ஒரு தீர்க்கதரிசியின்
வேலையைச்
செய்ததாகப் புலப்படும்.
என்றாலும் அவரை
நபியென்று—தீர்க்க தரிசியென்று
—சொல்ல முடியாது''

முற்றிலும் உண்மை.

''நகைச் சுவை இல்லாவிட்டால நான் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன்'' என்று காந்தியடிகள் ஒரு தடவை குறிப்பிட்டிருக்கிறார். உணர்ச்சியற்ற வாழ்க்கைக்கு உயிரூட்டுவது நகைச்சுவை. வாழ்க்கைக்குச் சுருதி சேர்ப்பது நகைச்சுவை. உள்ளத்திலே பரவ முயலும் சோகத்தை விரட்டியடிப்பது நகைச்சுவை. அது வாழ்வுக்கு அச்சாணி. இக்பால் நகைச்சுவையாகப் பேசுவதில் மிகவும் கெட்டிக்காரர். அவரது கவிதைகளிலும் நகைச்சுவை மிளிர்கிறது.

ஒரு இளைஞன். அவனுக்கு வாழ்க்கை கசந்து விட்டது; தற்கொலை செய்துகொள்ள விரும்புகிறான்; தனது முடிவை மெதுவாகத் தனது மனைவியிடம் கூறுகிறான். அவள் தடுக்கிறாள். 'ஏன் தடுக்கிறாய்?' அவன் அவளைக் கேட்கிறான். அவள் சொல்லுகிறாள்:

''நீர் நாகரிகமடைந்தவராக
இருந்தால்
உமக்கு இத்தகைய துணிவு
வந்திராது.
வேண்டுமானால் கொஞ்சம் பணம்
கொடுத்து
ஒரு ஆப்கானியனை அழைத்து
வருகிறேன்.
அவன் அந்த வேலையை மிக
எளிதாக
முடித்து விடுவான்......''

நவீன நாகரிகத்துக்கு மிகவும் நாசூக்காக இங்கே சாட்டையடிகொடுத்து விட்டார் கவிஞர்.

ஜனநாயகம் என்றால் என்ன? இதை அவர் வேடிக்கையாகக் குறிப்பிடுகிறார். ''தலைகளின் எண்ணிக்கைதான் முக்கியமே தவிர உள்ளே இருக்கும் விஷயம் முக்கியமானதலல ஆயிரம் கழுதைகளின் தலையிலிருந்து ஒரு மனிதனின் மூளையைப் பெற முடியாதே'' என்று நகைச்சுவையுடன் குறிப்பிடுகிறார். சர்வ தேச சபை (League of Nation)யைப் பற்றி ஒரு பாட்டில் குறிப்பிட்டிருக்கிறார். அது ''பாடை திருடிகளின் சங்கம்'' (Society of Coffin Thieves) என்று குறிப்பிடுகிறார்!

கவிஞரிடம் ஒரு கொசு வந்து முறையிடுகிறது. 'இரவு முழுவதும் நான் ஓடியாடி உழைக்கிறேன். என்றாலும் ஒரு சொட்டு இரத்தங்கூட எனக்குக் கிடைப்பதில்லை. ஆனால் இந்த லேவாதேவிக்காரர்களோ உட்கார்ந்த இடத்தை

விட்டு நகராது கடன்காரர்களின் இரத்தம் முழுவதையும் உறிஞ்சி விடுகிறார்களே" என்று கொசு முறையிடுவதாக எழுதுகிறார். லேவா தேவிக்காரர்களுக்கு நல்ல சாட்டையடி இது. நாசுக்கான முறையில் கவிஞரின் நல்ல நகைச் சுவை இங்கே வெளிப்படுகிறது.

இன்னொரு பாட்டிலே கவிஞர் குறிப்பிடுகிறார் :

"இனி பெண்கள் ஏன் முகத் திரையிட்டுக் கொள்ளவேண்டும்? இப்போதுதான் ஆண்களெல்லாம் பெண்களாகி விட்டார்களே ..." என்கிறார். ஆண்கள் கோழைகளாக மாறி வருவதை நகைச் சுவையுடன் குறிப்பிட்டு விட்டார்!

நகைச்சுவை ததும்ப கவிஞர் வசைக் கவிதைகளும் எழுதியிருக்கிறார். கேலி செய்யும் கிண்டல் கவிதைகளும் சில எழுதியிருக்கிறார்.

இஸ்லாத்திலே புரோகிதர் கூடாது. இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே இடை மனிதன் தேவையில்லை. ஆனால் 'முல்லாக்கள்' என்ற சில தான்தோன்றிகள் இஸ்லாத்துக்குக் களங்கம் விளைவிக்கிறார்கள்; மக்களை நேர்மைக்குப் புறம்பான வழிகளில் இட்டுச் செல்லுகிறார்கள். இஸ்லாத்திலே அவர்களுக்கு இடமில்லை. முல்லாக்களிடம் இக்பாலுக்கு மிகவும் கோபம். அவர்களைப் பற்றிக் கிண்டலாக இந்த அடிகளிலே திட்டுகிறார் :

"முல்லாக்கள் சொர்க்கத்துக்குப்
போக வேண்டும்
என்று இறைவன் பணித்தான்.
நான் அங்கே இருந்தேன்.
அதைக் கேட்டதும என் நாவை
அடக்க முடியவில்லை.
'இறைவா!" என்னை மன்னித்துக்
கொள் !
முல்லாவை சொர்க்கத்துக்கு
அனுப்பாதே !

> "உடம்பின் எரிச்சலை அடக்கிக் காக்க வேண்டும். உடலை அடக்கி வைக்கப் பழகவேண்டும். தீய ஒழுக்கத்தை ஒழித்து, நல்ல ஒழுக்கத்தைப் பேணி வரவேண்டும்"—புத்தர்.

அவருக்குப் பெண்டு பிள்ளை
தேவையில்லை;
காடு கழனி தேவையில்லை.
அவருக்கு வேண்டியது சண்டை
யும் சச்சரவும்
பொய்யும் புளுகும்.
அறியாத மக்களை ஏமாற்றுவதே
அவர் வேலை.
சொர்க்கத்திலே கோயில் இல்லை,
மஸ்ஜிது இல்லை ;
பொய்யும் புளுகுமில்லை ;
ஏமாறும் மக்கள் இல்லை !
ஆகவே அவருக்கேற்ற இடம்
அதுவல்ல"
என்று பணிவுடன் மெதுவாகக்
கூறினேன்

முல்லாக்களை இக்பால் கிண்டலாகத் தாக்குகிறார். அவர்கள் பிறரது வாழ்க்கையைப் பாழாக்குகிறார்கள் என்பதை விளக்குகின்றார்.

இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார் :

" மத ஆர்வமுள்ள மக்களைப்
பார்த்து,
'நீங்கள் மதமற்றவர்கள்' என்று
கூறுவது இந்த முல்லாக்கள் வேலை
இறைவன பெயரால் கஷ்டம்
விளைவிப்பதே இவர்களது வேலை"

என்று கோபமாகக் கூறுகிறார் தீமை புரியும் மக்கள் மீது கண்டனக் கணைகளைத் தொடுக்கின்றார். ஆனால் அந்தக் கண்டனக் கணையில் முறை தவறிய கோபமில்லை; ஆத்திரமில்லை; பாரபட்சமில்லை; அதிலே கவிதை பிறந்து இருக்கிறது; இன்பமும் கவர்ச்சியும் இருக்கின்றன.

(அடுத்த இதழில் முடிவுறும்)

7-வது நூற்றாண்டு முதல் 12-ஆம் நூற்றாண்டு வரை கல்வியின் ஒவ்வொரு துறையிலும் முஸ்லிம் உலகம் உன்னத நிலையில் இருந்தது.

முஸ்லிம்களின் பொற்காலம்

நூர் அஹ்மது, எம். ஏ , பீ. எல்.,

முஸ்லிம் உலகிலே மின்சார வேகத்தில் கல்வி பரவியது. பள்ளிவாயல்களில்லா கிராமமோ, ஊரோ, நகரமோ இருந்ததில்லை. இப்பள்ளிவாயல்களைச் சேர்ந்தாற்போல் ஆரம்ப, உயர் நிலைப் பள்ளிக்கூடங்கள் எழுந்தன. சிறுவர் சிறுமிகள் அனைவரும் பணச் செலவின்றி கல்வியளிக்கப்பெற்றனரென்று பேராசிரியர்கள் பல்லாஸ்டிரஸனும், ரிபேராவும், கூறுகின்றனர். உயர்தரப் படிப்புக்காக மாணவர்கள் கல்லூரிகளுக்கோ, கலைக் கூடங்களுக்கோ அல்லது தனி ஆசிரியர்களிடமோ சென்றனர். அறிவுத் துறைக்கு ஆதரவளிப்பதும், கல்விச் சொற்பொழிவு நிகழ்த்துவதும், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் கட்டுவதும், ஆராய்ச்சிக் கூடங்கள், மருத்துவ விடுதிகள், நூல் நிலையங்கள் நிறுவுவதும் தங்கள் தலையாய கடமையென மன்னர்களும் மற்றுமுள்ள செல்வந்தர்களும் எண்ணினர். கலீபா அல்மாமூனுல் முதல் கல்லூரி பக்தாதில் நிர்மாணிக்கப் பெற்றது. இரண்டாவதாக ஏற்பட்ட நிஜாமிய்யா பல்கலைக் கழகம் கி. பி. 1065-ல் பக்தாத் பிரதம மந்திரியாக இருந்த நிஜாமுல்முல்க் என்பவரால் நிறுவப்பெற்றது. இப்பல்கலைக் கழகத்தின் நிர்வாகம், ஐரோப்பிய சர்வகலாசாலைகளுக்கு ஒரு முன்மாதிரியாக இருந்தது. முதன் முதலாக மருத்துவ நிலையமும் இணைக்கப்பெற்ற சர்வகலாசாலையாக இருந்தது முஸ்தன்ஸரிய்யா பல்கலைக் கழகமே. சிரியாவில் ரஷீதிய்யா, அமானிய்யா, தொர்கானிய்யா, காத்தூனிய்யா, ஷரீபிய்யா முதலியவைகளும், எகிப்தில் ரம்பிய்யா, நாஸிரிய்யா, ஸலாஹிய்யா முதலியனவும் அக்காலத்தில் புகழ் வாய்ந்த பல்கலைக் கழகங்களாய் விளங்கின.

பக்தாதில் மட்டும் நிஜாமிய்யாவைப் போன்று முப்பது கல்லூரிகள் இருந்தன. டமாஸ்கஸில் இருபது கல்லூரிகளும், அலெக்ஸாந்திரியாவில் முப்பதும், மௌஸில் நகரில் ஆறும் இருந்தன. கெய்ரோ, நிஷாப்பூர், சாமர்கந்து, இஸ்பஹான், மெர்வ், பல்க், அலெப்போ, கஸ்ரு, லாஹூர் முதலிய நகரங்களில் ஒவ்வொரு கல்லூரிகள் இருந்தன.

ஸ்பெயின் தேசத்தில் கார்தோவாவில் மட்டும் பல நூறு கல்லூரிகள் இருந்தன. அவைகளிற் சில, சமய நூலுடன் தத்துவம், இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம் முதலியவைகளையும் போதித்தன. இன்றைய பல்கலைக் கழகங்களின் அஸ்திவாரக்கல் ஸ்பெயினில்தான் நாட்டப்

பெற்றது. இவைகளில் முக்கியமானவை கார்தோவா, மலகா, கிரானடா முதலிய நகரங்களில் இருந்த பல்கலைக் கழகங்களாகும். இப்பல்கலைக் கழகங்களின் முகப்பில் “அறிஞர்களின் கல்விஞானம், மகான்களின் நீதி, மார்க்கப்பற்றுள்ளவர்களின் முன்னேற்றம், தைரியசாலிகளின் வீரம்—இவைகளால்தான் உலகம் வாழ்கிறது” என்று பொறிக்கப்பட்டிருந்தது. ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களிலிருந்து மாணவர்கள் கல்விக்காக இப்பல்கலைக் கழகங்களில் வந்து குழுமினர்.

இத்தகைய கல்வி நிலையங்களைத் தவிர தனிப்பட்ட ஆசிரியர்களும், அறிஞர்களும் தங்கள் வீடுகளிலும், பிரயாணிகளுக்காகவும், ஆசிரியர்களுக்காகவும் பள்ளிவாயல்களிலுள்ள பிரத்தியேக இடங்களிலும் மக்களுக்குக் கல்வி போதித்தனர். இப்பள்ளிகளுக்காக அளிக்கப்பட்ட ‘வக்பு’ சொத்துக்களால் மாணவர்களும், ஆசிரியர்களும் ஆதரிக்கப்பெற்றனர். அறிஞர்கள் கௌரவிக்கப்பெற்றனர். மதவிஷயம் மட்டுமன்றி, மற்ற அறிவியல் பிரசங்கங்களும் பள்ளிகளில் நிகழ்த்தப்பெற்றன. மாணவர்மட்டுமின்றி, ஆர்வமுள்ள ஏனையோரும் இச்சொற்பொழிவுகளைக் கேட்டுப் பயனடைந்தனர். பதினோராவது நூற்றாண்டிலே கெய்ரோ பள்ளிவாயலில் மட்டும் பலதிற பொருள்பற்றிய சொற்பொழிவுகளைக் கேட்பதற்காக தினந்தோறும் ஐயாயிரம் மக்கள் கூடுவர் என்று நஸீர் குஸ்ரு எழுதியுள்ளார். முஸ்லிம் உலகில் பல்வேறு இடங்களில் தோன்றிய வானாராய்ச்சிக் கூடங்கள் வானநூல்கற்பிக்க உதவின, வைத்தியசாலைகள் மருத்துவ நூல் கற்பிக்கப் பயன்பட்டன. செல்வந்தர்கள் தங்கள் வீடுகளிலேயே இலக்கிய மன்றங்களை அமைத்துக் கொண்டனர்.

அப்பாஸிய கலீபாக்களின் ஆட்சிக் காலத்திலே காகிதம் தயாரித்தல் முக்கியமான தொழிலாக இருந்தது. ஏராளமான

பிரஸிடெண்ட்

“வெஜிடபிள் ஹேர் ஆயில், ஸ்னோ, டால்கம் பவுடர் ஆகியவைகள் மிகச் சிறந்தவை என்பதை நான் உபயோகித்துக் கண்டு கொண்டேன்”—சாவித்திரி.

தயாரிப்பாளர்கள்:

ராதோட் டிரேடிங் கம்பெனி,

சௌகார் பேட்டை, சென்னை-1.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், மலாயா, இந்தோனேஷியா ஆகிய இடங்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.

புத்தகங்கள் எழுதப்பட்டும் விற்கப்பட்டும் வந்தன. முஸ்லிம் உலகமெங்கணும் பல்லாயிரக் கணக்கான நூல் நிலையங்கள் தோன்றின. இவை அக்காலத்தில் முஸ்லிமல்லாதாருக்கும் அறிவொளி நல்கின. அறியாமையின் அடித்தளத்தில் ஆழ்ந்திருந்த அன்றைய ஐரோப்பாவுக்கு ஸ்பெயின், ஸிஸிலி வழியாகக் காகிதத் தொழிலும், கல்வியும், நாகரிகமும் முஸ்லிம்களால் பரத்தப்பட்டன. பத்தாம் நூற்றாண்டில், மௌஸில் பட்டணத்தில் இருந்த நூல் நிலையமொன்றில் ஆராய்ச்சி செய்த மாணவர்களுக்குச் செலவின்றி காகிதம் அளிக்கப்பட்டது. அதே காலத்தில் பஸ்ராவில் நூல் நிலயத்தை நிறுவியவர், அங்கே வேலை செய்த அறிஞர்களுக்குத் தாராளமாய் உபகாரச் சம்பளம் வழங்கினார். கார்தோவாவில் இருந்த நூல் நிலயத்தில் சுமார் ஆறு இலட்சம் புத்தகங்கள் இருந்தன! பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்த பெரிய நூல நிலயத்தில் கூட 800 புத்தகங்களுக்கு மேல் இருந்ததில்லை என்று கத்தோலிக்கர்களின் கலைக்களஞ்சியம் கூறுகிறது.

கெய்ரோவின் பைத்துல் ஹிக்மா நூல் நிலயத்தில் இருபது இலட்சம் நூல்களும், திரிப்போலியில் முப்பது லட்சம் நூல்களும் இருந்தன. முதல் சிலுவைப் போரில் இந்நூல் நிலயம் கிறிஸ்துவர்களால் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது. இதில் திருகுர்ஆனின் 50000 பிரதிகள் இருந்தன. அல் ஹகீம் நூல் நிலயத்தில் நாற்பது அடுக்குகளாக புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு அடுக்கிலும் 18,000 புத்தகங்கள் இருந்தன. பாரசீக அரசரான அதுத் அல் தௌலாவால் ஷீராஸில் நிறுவப்பெற்ற கஸீனு அல் குதுப் என்னும் நூல நிலயத்தில 360 அறைகள் இருந்தன. அக்காலத்தில் அச்சு இயந்திரங்கள் இல்லை என்பதையும், புத்தகங்களெல்லாம் கையாலெழுதப்பட்டவைகளே என்ற உண்மையையும் நாம் நினைத்துப் பார்த்தால் இந்த நூல் நிலயத்தின் பெருமையும் சிறப்பும் நமக்கு நன்கு புலனாகும். பக்தாத், ரம்ஹுர்முஸ், பஸ்ரா, ரயீ, மெர்வ், பல்க், புகாரா, கஸ்னு, அலெப்போ, முதலிய நகரங்களில் இருந்த நூல் நிலயங்கள் புகழ் வாய்ந்தவை. பள்ளிவாயல்களிலும் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தன. இப்னு ஸீனு போன்ற பெரிய அறிஞர்களெல்லாம் நூல் நிலய அதிகாரியாகப் பணியாற்றினர். கல்வி, இலக்கியம், நாகரிகம் ஆகிய துறைகளில் கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை முஸ்லிம் உலகின் பொற்காலமாக விளங்கியது. நீதி வழங்கல், தத்துவம், சரித்திரம், சமூக நூல், வான நூல், பூகோளம், கணிதம், ரஸாயனம் இயற்கை நூல், பௌதிகம், மருத்துவம் போன்ற கல்வியின் ஒவ்வொரு துறையிலும் முஸ்லிம்கள் அப்போது சிறந்து விளங்கினர்.

—'இஸ்லாமிக் ரெவ்யூ"

நான் அறிந்த இஸ்லாம்

எஸ். சுந்தரமூர்த்தி

20. அறச் செயல்கள்

இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் இறைவணக்கத்துக்கு அடுத்தபடியாகக் கூறப்படுவது ஈதல். இறை வணக்கமும், ஈதலும் சேர்த்தே திருமறையிலும் நபி நாயக வாக்கியங்களிலும் வற்புறுத்தப்படுகின்றன. இரண்டில் ஒன்று இல்லாமல் மற்றையது பயனற்றதாகும். எல்லா சமயங்களும் மனிதன் தன்னிடமுள்ள தெய்வீகத் தன்மையை உணர்ந்து அதை வளர்க்க வேண்டும் என்றே ஓயாது கூறுகின்றன. மதத்தின் மிகச் சிறந்த பயனே அதுதான் என்று சொல்லவேண்டும். மனிதன் இறைவனை உணர, தொழுகை பெரிதும் உதவுகின்றது. மக்களினத்திற்குச் சேவை செய்வதன் அவசியத்தையும், வழிமுறைகளையும் வகுப்பதே எல்லா மதங்களின், சிறப்பாக இஸ்லாத்தின் கொள்கையாகும். மக்களினத்திற்குச் சிறந்த சேவை செய்து எல்லோருடைய வாழ்க்கையையும் இன்பமயமாக்குவதற்காகவே பலவித கடமைகளும் வற்புறுத்தப்படுகின்றன.

பல இடங்களிலும் இறை வணக்கமும் ஈதலும் சேர்த்தே கூறப்படுகின்றன. வழிபாடு முதலிலும் ஈதல் இரண்டாவதாகவும் வற்புறுத்தப்படுவதற்குச் சிறந்த காரணம் இல்லாமலில்லை. மற்றும் அடிப்படைக் கடமைகளை வற்புறுத்துமிடங்களிலெல்லாம் இறை நம்பிக்கை முதலிலும், வழிபாடு இரண்டாவதாகவும், நற்செயல்களைச் செய்தல் மூன்றாவதாகவும் கூறப்படுகின்றன. மனிதனுடைய ஆத்மீக வளர்ச்சியில் இறை நம்பிக்கையே முதற்படியாகும். அதிலிருந்தே மற்றவை யாவும் வளர்தல் வேண்டும். ஆனால் அடுத்தபடியான 'வணக்கத்தின் மூலமே இறை நம்பிக்கையை உறுதிப்படுத்தி இறைவனுடன் இரண்டறக் கலக்க இயலும். வணக்கமும் நற்செயல்கள் இல்வழி பயனற்றதாகும்.' நற்செயலகள் — ஈதல் — இன்றி வெறும் வழிபாடு பயனற்றது என்பது பின்வரும் திருமறை வாக்கியங்களாலும் வற்புறுத்தப்

ஏழைகளுக்கு அன்னமிடுதல், ஆதரவற்றவர்களைப் பாதுகாத்தல் ஆகிய பெரிய அறச் செயல்களுடன், பெற்றோர்களிடம் இனிமையாகப் பேசுதலும், பொதுவாக எல்லாரிடமும் இனிய சொற்களையே பேசுதலும் ஆகிய சிறு சிறு நற்செயல்களையும் ஒன்றாகச் சேர்த்தே திருகுர்ஆன் வலியுறுத்துகின்றது.

படுகின்றது. "ஈதல் முதலிய நற்செயல்களைச் செய்யாமல் "உண்மையாகவன்றி பிறர் காணவேண்டுமென்பதற்காகவே இறை வணக்கத்தை மட்டும் நடத்தி வருவோர் துன்பத்தையே அடைவார்கள் (107 : 4—7).

இறைவனால் நமக்களிக்கப்பட்டவைகளை நாம் மக்களினத்தின் பொருட்டுச் செலவழிக்க வேண்டும். செல்வத்தைப்பற்றி மட்டும் இங்கு கூறப்படுவதாக எண்ண வேண்டாம். நமக்களிக்கப்பட்டுள்ளஐம்புலன்களின் மூலமாகவும் மக்களினத்திற்குச் சேவை செய்ய முயற்சித்தல் வேண்டும். அடிமைகளை விடுவித்தலும், (90 : 13), ஏழைகளுக்கு அன்னமிடுதலும் (69: 34, 90 : 11—16). ஆதரவற்றவர்களைப் பாதுகாத்தலும் (17 : 34, 76: 8). ஆகிய பெரிய அறச் செயல்களுடன், பெற்றோர்களிடம் இனிமையான சொற்களைப் பேசுதலும், (17 : 23), பொதுவாக எல்லோரிடமும் இனிய சொற்களைப் பேசுதலும் (2: 83) ஆகிய சிறு செயல்களும் ஒன்றாகவே சேர்த்துத் திருமறையில் வலியுறுத்தப்படுகின்றன.

இன்னும், இது பற்றிய நாயக வாக்கியங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன. வழிப் போக்கர்களுக்கு இடையூறு விளைவிக்கக்கூடியதொன்றைப் பாதையிலிருந்து அகற்றுவதும் அறச் செயலாகக் கருதப்படுகின்றது (புகாரி: 46: 24) ஒருவன் தன் மனைவிக்கும் மக்களுக்கும் உணவளித்தலும் அறச் செயலே என்றும் நாயகம் அவர்கள் மொழிந்துள்ளார்கள். ஒருவன் நிலத்தை உழுது பயிரிடும்போது வயலிலுள்ள தானியங்களைப் பறவைகள் உண்கின்றன. பறவைகள் உண்பதற்குக் காரணமாக இருந்த அவன் செயலும், பயிரிடுதலும் அறச்செயலாகவே கருதப்படும் என்றும் கூறியுள்ளார்கள்! மேற்கூறியவைகளிலிருந்து மக்களினத்தின் சேவையே நமது குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அதுவே இஸ்லாமியக் கொள்கைகளில் மிகச் சிறந்தது, அடிப்படையானது என்பதை உணரலாம்.

நாம் செய்யும்நற்செயல்களின் பயன் அச்செயல்களைப்போல் பலநூறு மடங்காக இருக்கின்றன என்றும், (2: 261) கொடுக்கும்போது நல்லெண்ணத்துடனேயே கொடுக்க வேண்டும், அதாவது பெறுகின்றவர்களைப் பழித்தலும், துன்புறுத்துவதும் கூடாதுஎன்றும் (2: 262—64) நாமாக உழைத்துச் சேர்த்த பொருள்களில் நல்லவைகளையே நாம் கொடுக்க வேண்டும் (2 : 267) என்றும் வற்புறுத்தப்படுகின்றது. தீய வழியில் ஈட்டிய பொருளைக்கொண்டு பிறர்க்கு உதவி செய்தல் பயனற்றதேயாகும். மேலும் நாம் செய்யும் தருமங்களைப் பிறர் காணாதபடி மறைவாகச் செய்தல் மிகவும் உயர்ந்த செயலாகும் (2: 271)

நாம் கொடுப்பதன் மூலம் உலகத்தில் பொருள் வளர்ச்சியும், இன்பமும் அதிகமாகின்றன. மனித இனத்தின் துன்பத்தை ஒழித்து இன்பத்திற்கு வழிகாட்ட முயன்ற புத்தரும் "பிறருக்குத் தீமைகளைச் செய்

டாமலிருப்பதுடன், நம் அன்பை பகிர்ந்து மற்றவர்களுக்கு அளித்தல் வேண்டும். ஆசைகளை அறவே ஒழிக்க வேண்டும்'' என்றே வற்புறுத்தினர். ஈகையினால் ஆசைகளை ஒழித்தல் எளிதாகும். பற்றற்ற நிலையில் செயலாற்றுதல் வேண்டின் ஈகையைக் கைக் கொள்ளல் வேண்டும். பிறருக்கு அளிக்கும் போது உண்மை இன்பங் காண்கின்றவன் பிறருக்குத் தீமை செய்ய வேண்டுமென்று மனத்தாலும் எண்ணுவானே? எண்ண மாட்டான்.

ஈதல் சிறந்த பொருளாதாரக் கொள்கையும் ஆகும். முதலாளித்துவமும், கம்யூனிஸமும் ஒன்றுடனென்று மோதும் இன்றைய உலகில் ஈதல் மூலமே உலகைச் சீர்திருத்த இயலும். ஏனென்றால் கொடுக்கும்போது நாம் பிறரும் வாழவேண்டும். அவர்கள் வாழ்க்கை வளம்பெற வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் கொடுக்கின்றோம். போட்டிக்கு இதில் இடமில்லை. போராட்டத்திற்கும் இடமில்லை. கொடுத்தலில் உயர்வு தாழ்வைக் கருதுதல் கூடாது. அதாவது கொடுப்பவர் உயர்ந்தவர் என்றோ பெறுகின்றவர் தாழ்ந்தவர் என்றோ கருதுதல் தவறாகும். அதிக வசதியுள்ளவர்கள் குறைந்த வசதியுள்ளவர்களுக்கு உதவிபுரிந்து, அவர்களையும் உயர்வடையச் செய்தாகவே நினைக்க வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் மனிதன் எல்லாவிதமான தீமைகளிலிருந்தும், விலகி நன்மையையே மேற்கொள்கின்றான். அப்போது உலகம் இன்பமயமாகவே இருக்கும். இதன் பொருட்டே நம் நாட்டில் ஆசாரிய விநோபா பாவே அவர்களும் பூதானம், சம்பத்து தானம், முதலிய இயக்கங்களை ஆரம்பித்துள்ளார்கள். பொருள் உடையவர்கள் தாமாக அதில் ஒரு பகுதியை அளித்தலில் எவ்வளவோ உயர்ந்த கருத்துக்களும் கொள்கைகளும் அடங்கியிருக்கின்றன.

தன்னிடமுள்ள செல்வத்தில் ஒரு பகுதியைத் தானகவே அளிக்க முன்வரும், செல்வரின் மனத்திலும் ஒருமாறுதல் நிகழ்கின்றது. அதாவது வறியவர்களும் மக்களே. அவர்கள் வாழ வகை செய்தல் நம் கடனே. அதற்காகவே நாம் வழங்குகின்றோம். சட்டத்தினல் ஒருவரிடமுள்ள செல்வத்தைப் பறித்துக் கொள்ளலாம். ஆனல் அவருடைய மனத்தில் மேலே காட்டிய மாறுதலை உண்டாக்குதல் இயலாது. பூதானத்தின் தத்தையான பாவே அவர்கள் "உங்கள் அன்பைப் பகிர்ந்து கொடுங்கள்" என்றுதான் வேண்டுகின்றார். வறியவர்களுக்கு உதவுதல் செல்வர்களுடைய கடமை என்பதை பொருள் படைத்தவர்கள் உணர்ந்து விட்டால் பொருளாதாரப் புரட்சியை வெகு விரைவில் எளிதாகவே உண்டாக்கி விடலாம். இன்று ஒரு செல்வர் 100 ஏகர் நிலத்தைத் தானமாகக் கொடுக்கின்றார் என்று வைத்துக்கொண்டால் அது பல குடும்பங்களுக்கு ஏன், நூறு குடும்பங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். ஒரு தலைமுறைக்குப் பின் அந்த நூறு குடும்பங்களிலும் உள்ள மக்கள் இன்ப வாழ்க்கை வாழ்வார்கள். அப்போது அவர்கள் தங்கள்

சுல்தானியா படை மருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன்; மலேயா முதலிய தேசங்களில் நற்கியாதியுடன் உபயோகிக்கப்பட்டு, கோடிக் கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து, தங்க மெடல்களும், நற்சாக்ஷிப் பத்திரங்களும் பெற்றது. எல்லா வித படை, சொரி சிரங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுக் கடி, சேற்றுப்புண், எச் சிற்றழும்பு, எக்ஸிமா முதலிய தோல் வியாதிகளை உடனே குணப் படுத்தும்.



சிறிய சைஸ் பாட்டல் 1-க்கு விலை அணா 0—6—0.
பெரிய ,, ,, ,, ,, ,, 0-12—0.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :—

ஜெயரசம் டிப்போ,

அய்யம்பேட்டை. தெ. ரயில்வே.

மலேயா (பிணுங்கு ஏஜென்ட்)

ஆர். ஏ. அஹமதுஷா முஹம்மது சுல்தான் அன் கம்பெனி.,

11. பிணுங்கு ஸ்ட்ரீட், பிணுங்கு.

மலேயா (சிங்கப்பூர் ஏஜென்ட்)

ஏ. சையத் முஹம்மது கம்பெனி,

178, கிராஸ் ஸ்ட்ரீட், சிங்கபூர். டெலிபோன் நெ. 26918.

இலங்கை (கொழும்பு ஏஜென்ட்)

எம். சி. ஏ. ஹூதா அன் கம்பெனி,

20, டாம் ஸ்ட்ரீட் கொழும்பு

இலங்கை (நீர் கொழும்பில் கிடைக்குமிடம்)

பிரபல மருந்துக் கடை,

160, மெயின் வீதி, நீர் கொழும்பு.

பெற்றோர்கள் இருந்த நிலையையும், பூதானத்தால் தாங்கள் அடைந்த உயர் நிலையையும் னைத்துப் பார்த்தாலே போதும். அவர்களும் பிறர்க்கு உதவி செய்ய வேண்டியதன் அவசியத்தை உணருவர். இன்று செய்யும் பூதானத்தின் பயன் இன்றுடன் முடிந்து விடுவதில்லை. வழி வழியாக அது பெருகிக்கொண்டே செல்கின்றது. இதையே ாவே அவர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் வற்புறுத்திக் கூறுகின்றார். அதனால் ஈதலில் நாம் கொடுக்கும் பொருளின் மதிப்பைவிட மனமாறுதலே முக்கியமானது என்று தெரிந்து கொள்ளுதல் வேண்டும். "நம் பொருளில் மற்றவர்களுக்கும் பங்கு உண்டு" என்று உண்மையில் உறுதியாக ஒவ்வொருவரும் நினைத்தால் அதன் பின் உலகில் இன்பத்திற்கு இடையூறாக இருக்கக் கூடியதே ஒன்றுமில்லை.

இதையே நபி நாயகம் அவர்கள் மிகவும் வற்புறுத்தினார்கள். அதன் பொருட்டு நாமாக விரும்பி அளித்தல் (சதக்கா), கடமையாக மேற்கொண்டு அளிக்கும் ஏழை வரி (ஜகாத்) ஆகிய இரண்டையும் வற்புறுத்தினார்கள். இவ்விரண்டையும் நபிநாயகம் கூறியபடி நாம் கடைப்பிடித்தால் உலகில் வறுமை ஏது? போர் ஏது? பூசல் ஏது? மனிதனை மனிதன் அடிமையாக்க விரும்புவதேது? ஆனால் அந்நாள் வருமா? எப்போது மக்கள் எல்லோரும் ஈதலின் உண்மைத் தத்துவத்தை உணர்ந்து அதனைத் தாங்களாகவே செயலாற்ற முன்வரும்போது!

புருகா லாட்ஜ்

(முதுகுளத்தூர்)

81, அரண்மனைக்கார தெரு,

மதராஸ்—1.

அன்பர்களுக்கோர்

விண்ணப்பம்!

குறைந்த கட்டணத்தில் நிறைந்த வசதிகள். சிறந்த காற்றோட்டத்துடனும் நல்ல சூரிய வெளிச்சத்துடனும் கூடிய விசாலமான அறைகளைக்கொண்டு சுகாதார வசதியுடன் அமைந்துள்ளது எங்கள் விடுதி மின்சார உதவி கொண்டு 24 மணி நேரமும் தண்ணீர் வசதி அளிக்கிறோம். தாய் நாடு விட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் வெளி நாடுகளிலிருந்து தாய் நாடு திரும்பும் பிரயாணிகள் நலன்களைக் கவனிப்பதில் அதிக கவனம் செலுத்துகிறோம் சேவையே எங்கள் இலட்சியம். ஒருமுறை தங்கிப் பலன் காணுங்கள்!

மை. ச. அப்துல் காதர்,

உரிமையாளர்.

மாவீரர் உமர்

இஸ்லாத்தில் சேர்ந்த பின்

அன்புள்ள தம்பி !

இஸ்லாத்தின் புகழ் வாய்ந்த கலீபாக்கள் நால்வரில் இரண்டாவது கலீபாவான ஹஜ்ரத் உமர் அவர்கள் முதன் முதலில் இஸ்லாமிய சமயத்தைத் தழுவ நேர்ந்தது எப்படி என்ற சுவையான செய்தியைக் கடந்த ஏப்ரல் இதழில் படித்திருப்பாய். இளமையும் வீரமும் பொருந்தியவரான உமர் இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள் என்று அறிந்தவுடன் குறைஷிகளுக்கு மிகவும் அதைரியம் உண்டாகி விட்டது. உமர் இஸ்லாத்தில் சேர்ந்த நிகழ்ச்சியை இஸ்லாமிய சரித்திரத்திலேயே மிக முக்கியமான சம்பவம் என்று குறிப்பிடவேண்டும். ஏன் ? உமருக்கு முன் வரையில் இஸ்லாம் மனித பலமற்றதாகவே இருந்து வந்தது 45 ஆண்களும் 17 பெண்களுமே இஸ்லாத்தில் அப்போது சேர்ந்திருந்தனர். இவர்களாவது தைரிய சாலிகளாக இருந்தார்களா ? இவர்களிற் பெரும்பான்மையினர் தாங்கள் இஸ்லாத்தில் சேர்ந்துகொண்ட செய்தியை வெளிப்படையாக அறிவிக்கவும் அஞ்சி நடுங்கினர். அவ்வளவு தூரம் இவர்களுக்கு எதிரிகள் இன்னலும் இடையூறும் இழைத்து வந்தனர். எனவே, இந்த 62 முஸ்லிம்களும் நபிகள் நாயகமவர்களை இரகசியமாகவே சந்தித்துப் பேசினார்கள். பிறருக்குத் தெரியாதபடி தனி மனிதர்களின் வீடுகளிலேயே இறைவனைத் தொழுது வந்தனர்.

அந்தக் காலத்தில் மிகச் செல்வாக்குடன் விளங்கிவந்த அபூபக்ர் போன்ற மனிதர்கள் கூட திருகுர்ஆனை உரத்த குரலில் ஓதுவதற்கு அனுமதியளிக்கப்படவில்லை. வீட்டுக்குள் இருந்தபடி தாழ்ந்த குரலில்தான் திருமறையை ஓதி வந்தார்கள். அபூபக்ர் தமது இனிய குரலில் குர்ஆனை ஓதும்போது, அவர்களின் நாவிலிருந்து கிளம்பும் இறைவனின் கம்பீரமான இனிய சொற்கள் தெருவிற் செல்லும் மனிதர்களின் இதயங்களில் ஊடுருவிச் சென்று அவர்களின் உள்ளங்களை அப்படியே ஆட்கொண்டு விடுமாம்! இதனைக் குறைஷிகள் தங்களுக்குப் பெரிய அபாய அறிவிப்பு என்று கருதினர். முக்கியமாக, தங்கள் இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் அபூபக்ர் போன்றவர்களின் குரல்கேட்டு, இறைவனின் அருண்மொழிக்குச் செவி

சாய்ப்பதை அவர்கள் விரும்ப வில்லை. எனவே, அவர்கள் அபூ பக்ருக்கு உத்திரவிட்டு விட்டார் கள்: "திருமறையைத் தாழ்ந்த குரலில் அவர் ஓதவேண்டும். அல் லது மனித சஞ்சாரமில்லாத இடத்துக்குச் சென்று அவர் தமது இறைவனின் வேதத்தை முழங்க வேண்டும்" என்று அபூபக்ருக்கு அறிவித்து விட்ட னர். அபூபக்ர் அவர்களால் ஏனைய இளைஞர்களெல்லாம் கெட்டுப் போகின்றனர் என்று குறைஷிகள் குறை கூறினர். பணமும் செல்வாக்கும், பரம் பரைப் பெருமையும் படைத்தி ருந்த அபூபக்ர் அவர்களே குறை ஷிகளின் தடையுத்தரவுக்குப் பணிந்து நடக்க வேண்டியிருந்த தென்றால், மற்ற முஸ்லிம்களைப் பற்றி என்ன சொல்வது? ஆனால் உமர் யாருக்கும் பயப்படக் கூடியவர் அல்ல. அவருடைய அஞ்சா நெஞ்சமும் அரிய தைரி யமும் வேறு யாரிடமும் அக் காலத்தில் காணப்படவில்லை. குறைஷிகளின் திமிர் வாதத்தை அவரால் பொறுத்துக் கொண்டி ருக்க முடியவில்லை; புரட்சிக் கொடியை உயர்த்தி விட்டார். இஸ்லாம் ஒரு உண்மையான மதமாக இருக்குமாயின் அது ஏன் ஒளிந்தும் பதுங்கியும் உயிர் வாழவேண்டும்? இது இராணி யாக விளங்குவதற்கு அதனிடம் என்ன குறை இருக்கிறது? இத்த கைய கேள்விகள் உமரின் இத யத்தில் எழுந்தன. எனவே அந்த வீரர் இஸ்லாத்தில் சேர்ந்த உடன் செய்த முதற்காரியம் என்னவெனில் மறைவாக இயங் கிய இஸ்லாத்தை பகிரங்கமாக வெளியே கொண்டு வந்து விட் டார். "உமர் தன்னுடையகையில் வாளை ஏந்திக் கொண்டிருக்கும் வரையில் இறைவணக்கத்தைப் பகிரங்கமாக நடத்துவதினின்று நம்மைத் தடுத்து நிறுத்தும் தைரி யம் யாருக்கு இருக்கிறதென்று பார்க்கிறேன்!" என்று அறை கூவிக்கொண்டே வாளை உருவிய வண்ணம் உமர் தம்முடன் திரு நபியவர்களையும் அழைத்துக் கொண்டு கஃபாவை நோக்கி நடந்தார்.

இருவரும் கஃபாவை அடைந் தவுடன் அவர்கள் அங்கே கண்ட காட்சியையும், அதன் பின்னர் நிகழ்ந்தவைகளையும் பற்றி எழு துவதற்கு இங்கே இடமுமில்லை; நேரமுமில்லை. ஆதலால், தம்பி, (இன்ஷா அல்லாஹ்) அடுத்த இதழில் அவைகளைப் பற்றி அதிக மாக எழுதுகிறேன்.

—எஸ். ஏ. கமால்.

பிரபல திருமணம்

தஞ்சை ஜில்லா கொல்லா புரம் வழக்கறிஞர் (பாரிஸ்டர்-அட்-லா) ஜனப் அப்துல் ரஹீம் நூர் அவர்களின் இளைய சகோ தரர் நயினா முஹம்மது பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களுக்கும், அடியக்கமங்கலம் ஜனப் ஆர். கே. எம். முஹம்மது அபூபக்ர் அவர்களின் புதல்வி ரமீஜா பேகத்துக்கும் 3-6-56ல் மண மகளில்லத்தில் விமரிசையாக விவாகம் நடைபெற்றது.

மணமக்கள் வாழ்க!

யூனனி சாலாமிஸரி ஹல்வா

வீரியவிருத்திக்கும், பலவிருத்திக்கும் சிறந்தது!

பாதாம் பருப்பு, சாலாமிசரி முதலிய உயர்ந்த பொருட்களைக் கொண்டு யூனனி முறையில் தயாரிக்கப்பட்டது. மூளை, ஹிருதயம், நரம்பு முதலியவை சம்பந்தமான வியாதிகளையும், இரத்தக் கொதிப்பு, சோர்வு, பசியின்மை, அதிக உஷ்ணம், இந்திரிய ஸ்கலிதம், எலும்புருக்கி, ஆஸ்த்மா முதலிய வியாதிகளையும் அகற்றும். தாது புஷ்டிக்கு மிகச் சிறந்தது.

1 சேர் ரூ. 10—0—0. அரை சேர் ரூ. 5—0—0.

பூர்ண சந்திரோதயம் என்னும் தங்க செந்தூரம்

அசல் தங்கத்தினுல் அருமையான முறையில் தயாரிக்கப்பட்டது. மூளை உழைப்புள்ளவர்களுக்கும், வீரிய விருத்திக்கும் சிறந்தது. சுவாச காசம், எலும்புருக்கி முசலிய வியாதிகளை தீர்க்கும் சஞ்சீவி போன்றது. தங்க செந்தூரமும் யூனனி சாலாமிசரி ஹல்வாவும் சேர்த்துச் சாப்பிடலாம். நிச்சயமாக பலன் தரும். கேட்லாக்கிற்கு எழுதவும்.

40 நாள் மருந்து 40—0—0. 25 நாளைக்கு 26—0—0.
12 நாள் மருந்து 12—8—0.

வெளி நாட்டினர் முன் பணம் அனுப்ப வேண்டும்.

ஆயுர்வேத வைத்தியசாலை,

பேட்டை வடக்குத் தெரு, கும்பகோணம்.

சமீப காலத்தில் நமக்கு வந்துள்ள நூற்றுக் கணக்கான நற்சாட்சிகளுள் ஒன்று :

"கும்பகோணம் ஆயுர்வேத சித்த வைத்தியர் ஸ்ரீ கே. ராமநாதன் பிள்ளையை எனக்குத் தெரியும். அவரது மருந்துகளை நான் உபயோகிக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன, அவை மிகவும் சக்தியுள்ளவை என்று தெரிய வந்தது."

எம். எம். செய்யத் ஹஸன்,

பங்குதார், கே. பி. வி. ஷேக் முஹம்மது ராவுத்தர் அன் கோ,
சென்னை—1.

சென்னையில் கிடைக்குமிடம் :

1. தி காயத்ரி டிரேடர்ஸ்,
34, அப்பு முதலி தெரு, மைலாப்பூர் சென்னை

2. அப்பா அன் கோ, சென்னை—1.

இளம்பிறையும் இஸ்லாமிய உலகமும்

"அஷ்ரஃப்"

இஸ்லாம் உலகப் பொது மதம். பனி முதல் பாலை வரை, 'பெரு' முதல் சீனம் வரை உலக மக்களனைவருக்கும் ஏற்ற மதம் இஸ்லாம். ஏனெனில், இஸ்லாமியக் கொள்கைகள் அகில முழுதையும் அணைத்து நிற்கின்றன. பார் முழுதுக்கும் பாரபட்சமற்ற கோட்பாடுகளை வழங்கியிருப்பதால்தான் இஸ்லாம் உலகெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது. இதற்கு முஸ்லிம்கள், ரமலானில் நோற்கும் நோன்பு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அது எப்படி?

சூரிய கதியைக் கொண்டு காலத்தைக் கணக்கிடுகிறோம். சூரியனை ஒரு முறை சுற்றிவர பூமி எடுத்துக்கொள்ளும் கால அளவை ஒரு வருஷமென்றும், அதிற் பன்னிரண்டிலொரு பங்கை ஒரு மாதமென்றும் கூறுகிறோம். இதைச் 'சூரிய மாதம்' (Solar Month) என்பர். பூமியை ஒருமுறை சுற்ற சந்திரன் எடுத்துக்கொள்ளும் கால அளவிற்கு 'சந்திர மாதம்' (Lunar Month) என்று பெயர்.

சூரிய கதிக்கேற்ப பருவ நிலை

ஒரே ஆண்டவன், ஒரே வேதம், ஒரே திருநபி, ஒரே தொழுந் திசை—இப்படி எல்லா வகையிலும் ஒருமைத் தன்மைக்கும் ஒற்றுமைக்கும் ஒரு உதாரணமாய் விளங்கும் இஸ்லாமிய உலகில் நோன்பும் ஈதுப் பெரு நாட்களும் இரண்டு நாட்களில் கொண்டாடப் பெறுகின்றன! இந்த வருடம் அல்ஜீரியாவில் வெள்ளிக் கிழமையன்று நோன்புப் பெருநாள் கொண்டாடினர். நாம் சனிக்கிழமை கொண்டாடினோம்! உலக முழுதும் ஒரே நாளில் பெருநாள் கொண்டாடுவதே பொருத்தமாக இருக்குமெனறு இக்கட்டுரையாளர் கருதுகின்றார். இவர் கருத்துக்கு ஆதாரமாக கெய்ரோவிலுள்ள அல் அஜ்ஹர் பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் சிந்தித்துச் செயலாற்ற முன்வந்திருப்பது வரவேற்கத் தக்கதன்றோ?

வேறுபாடுகள் நிகழ்கின்றன.' எனவே எக்காலமும் குறிப்பிட்ட சூரிய மாதம் குறிப்பிட்ட பருவ காலமாகவே இருக்கும். எவ் வருஷமும் சித்திரையும், ஏப்ர லும் நமக்குக் கோடையாகத் தான் இருக்கும். ஏனெனில் தமிழ் ஆங்கில மாதங்கள் சூரிய னது போக்கைக் கொண்டு கணக்கிடப்படுகின்றன.

ஆனால் சந்திர மாதங்கள் இவ் வாறில்லை. சந்திர வருஷம் சூரிய வருஷத்தைவிட 11 நாட்கள் குறைந்தது. எனவே, இவ்வரு டம் சித்திரை முதல் தேதியில் ஆரம்பித்த ரமலான் நோன்பு, வரும் வருடத்தில் சித்திரைக் குப் பத்து நாட்கள் முன்பே ஆரம்பித்துவிடும். 33 வருடங்க ளுக்கு ஒரு முறைதான் ஒரு குறிப்பிட்ட சூரிய மாதமும் சந் திர மாதமும் இணைந்து வரும். உதாரணமாக ஒரு வருடத்தில் சித்திரை முதல் தேதியும், முஹர் ரம் முதல் தேதியும் சேர்ந்து வந்தால் மறுவருஷம் அவ்வாறு சேர்ந்து வராமல் 33 வருடங்கள் சென்ற பின்தான் மறுமுறை இரு மாதங்களும் சேர்ந்து ஆரம் பிக்கும்.

எனவே இவ்வருடம் கடுங் கோடையில்வந்த ரமலான்மாதம் 16 வருடங்கள் சென்றபின் குளிர்கால நடுவில் வரும். பத்து வருடங்களுக்கு முன் நோன்பு வைத்தவர்கள் பின்னிரவில் உண வுண்ண எழுந்து, குளிர் தாங்கா மல் வெந்நீர் வைத்து முகம் கழுவியவர்கள் சென்ற ரமலா னில் கடுங்கோடையில் நோன்பு வைத்ததை எண்ணிப் பார்க்க லாம்!

இஸ்லாத்தின் ஐம்பெருங் கட மைகளைச் சேர்ந்த நோன்பை யும் ஹஜ்ஜையும் தொன்று தொட்டு மக்கள் கடைப்பிடித்து வந்த சூரிய மாதங்களில் நிறை வேற்றும்படி இறைவன் பணிக்க வில்லை. ஏன்? இஸ்லாம் உலகப் பொது மதம். திருமறை உல கப் பொது வேதம். எந்நாட்ட வர்க்கும் பொதுவான சட்டங் களையே திருக்குர்ஆன் போதிக் கின்றது. பூமியின் வடபாதியில் கோடையாக இருக்கும்போது தென்பாதியில் குளிர் காலமாக இருக்கும். 'சித்திரையில் நோன்பு வை' என இறைவன் கூறியிருந்தால் பூமியின் வட பாதியிலுள்ள நாம் எக்காலமும் கோடை நோன்பு வைப்போம். தென்பாதியிலுள்ளோர் எப்போ தும் குளிர் காலத்திலேயே நோன்பு வைப்பர். ஏனெனில் சித்திரை அவர்களுக்குக் குளி ராக இருக்கும். குளிர்கால நோன்பைவிடக் கோடை நோன்பு கஷ்டமானது. இத னால் அகிலத்தினர் அனைவருக் கும் சமமான சட்டத்தை விதிக்க முடியாது.

ரமலானில் நோன்பு வைக்கும் படி இறைவன் பணித்திருப்ப தால் உலகோர் அனைவரும் சம மாக கோடை, குளிர் இரண்டி லும் நோன்பை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. பூமியின் வட கோடியிலும் தென் கோடி யிலுமுள்ள மக்களால் மக்காவின் கோடை உஷ்ணத்தைத் தாங்க முடியாது. பூமியின் வடபாதிக் குக் குளிர் காலமாயிருக்கும் போதுவருகின்ற ஹஜ்ஜு மாதத்

தில் அவர்கள் ஹஜ்ஜை செய்து கொள்வார்கள். இஸ்லாத்தின் இணையற்ற சமத்துவத்தைக் காட்ட இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்?

ஒரே மாதத்தில் நோன்பு நோற்கும்படி இறைவன் கட்டளையிட்டதற்கு மற்றொரு காரணமும் உண்டு. ஏகத்துவமே இஸ்லாத்தின் உயிர் ஒரே இறைவனுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து நடப்பவனே முஸ்லிமாவான். ஒரே இறைவன், ஒரே வேதம், ஒரே திசை, ஒரே குறிக்கோள் எனக் கொண்டதால்தான் முழு உலக முஸ்லிம்களும் ஒற்றுமையாய் ஒரே இனமாய் வாழ முடிந்தது; முஸ்லிம் சமுதாயம் உலக சக்தியாகப் பரிணமித்தது. எனவேதான் இஸ்லாத்தின் இரு பெரும் கடமைகளாகிய நோன்பையும் ஹஜ்ஜையும் நிறைவேற்ற குறிப்பிட்ட நாட்களைத் தேர்ந்தெடுத்தான் இறைவன்.

ஆனால் இன்றோ உலக முஸ்லிம்களனைவரும் ஒரே நாளில் ஈதுப் பெருநாட்களைக் கொண்டாடுவதில்லை. முதல் நோன்பை ஆரம்பிப்பதற்கும் உலக முழுதுக்கும் குறிப்பிட்ட ஒருநாள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. வெவ்வேறு நாட்களில் இக்கடமைகள் நிறைவேற்றப்படுகின்றன. ஒரே நாட்டிலும் கூட ஒரு ஊரில் ஒருநாளிலும் பிறிதொரு ஊரில் மற்றொரு நாளிலும் கொண்டாடப்படுகின்றன! ஒரே ஊரிலே கூட சில சமயங்களில் எல்லோரும் ஒரே நாளில நோன்பை ஆரம்பிப்பதில்லை. இந்தவேற்றுமை இன்றைய முஸ்லிம்களிடையே ஒரு மாபெரும் குறையாகும். இவ்வாறு நிகழ்வதன் காரணம் என்ன?

1300 ஆண்டுகட்கு முன்னே இஸ்லாம் ஒருசில நாடுகளில் பரவியிருந்த காலத்திலே ரமலான் பிறை கண்டதும் நோன்பை ஆரம்பிக்க வேண்டுமென நாயகம் நவின்றார்கள். பிரயாணத்துக்கும் செய்தி அனுப்பவும் வசதியற்ற அன்றைய உலகிலே ஒரு பகுதியிலுள்ளோர் அனைவரும் ஒற்றுமையாய் ஒரே நாளில் நோன்பு வைக்க இதைவிடச் சிறந்த வழி வேறில்லை. ஒற்றுமையே மேற்கண்ட நாயகவாக்கின் முக்கிய குறிக்கோளாகும்.

ஆனால் விஞ்ஞான வளர்ச்சி பெற்ற இன்றைய உலகிலே உலகமெங்கும் ஒரே நாளில் நோன்பு வைக்கவோ பெருநாள் கொண்டாடவோ வழியுண்டு. ஏனெனில் பிறை தோன்றியதை அறிய இக்காலத்தில் கண்களை மட்டும் பயன்படுத்த வேண்டியதில்லை. தன்னை ஆவலுடன் பார்ப்போரை மேகத்துள் மறைந்து ஏமாற்றும் ரமலான், பெருநாள் பிறைகள் விஞ்ஞானிகளின் வான நூல் கணிதத்துக்குத் தப்ப முடியாது! இக்கால வான நூல் வல்லுநர்கள் இன்றைய வான நிலையைமட்டும் அறியவில்லை. பல ஆயிரம் ஆண்டுகட்குப் பின் ஒரு குறிப்பிட்ட வினாடியில் அண்ட கோளங்கள் எந்நிலையில் எங்கெங்கு இருக்கும் என்பதை இப்பொழுதே இவர்களால் கணக்கிட்டுக் கூற முடியும்! பத்தாயிரம் வருடங்களுக்குப் பின் நிகழ இருக்கும் சூரிய கிரணத்தின் நேரத்தை இன்றையத் தினமே நிர்ணயித்து விடுவர்!

திருமணம்

திருப்பூந்துருத்தி ஜனாப் எம். கே. நூர் முஹம்மது ராவுத்தர் அவர்களின் மூத்த சகோதரர் ஜனாப் முஹம்மது ஷரீப் அவர்களின் புதல்வர் எம். அப்துல் ஜப்பாருக்கும், ராஜகிரி ஜனாப் ஓ. ஏ. நூர் முஹம்மது அவர்களின் புதல்வி தாவூத் அம்மாளுக்கும் 4-6-56-ல மணமகளில்லத்தில் சிறப்புடன் திருமணம் நடைபெற்றது.

வாழ்க, மணமக்கள்!

ஒரே இறைவனுக்கு அடிபணிந்து அண்டகோளங்கள் தத்தம் வட்டப் பாதைகளிலே ஒழுங்காய் நீந்திச் செல்கின்றன என்று இன்றைய விஞ்ஞானிகள் மட்டும் கூறவில்லை 1300 ஆண்டுகட்கு முன் இவ்வுண்மையை இறைவனே அறிவித்து விட்டான். (அல்குர்ஆன் 37:40) "சூரியன் சந்திரனைப் பிடிக்கவும் முடியாது. இரவு பகலை முந்திவிடவும் முடியாது" (86:30) இவ்வாறு இறைவன் விதித்த இயற்கைச் சட்டத்துக்கு முற்றிலும் கட்டுப்பட்டு ஒழுங்காய் இயங்குவதால் தான் விஞ்ஞானிகளால் கோளங்களின் போக்கைச் சரியாக கணிக்க முடிகிறது. எனவே நமக்குத்தேவையான பிறை உதிக்கும் நாளையும் கணக்கிட்டறிந்து திட்டவட்டமாக ஒரு நாளைக் குறித்துக் கொள்ளலாம்.

இப்புவுலகிற்கு ஒரே சந்திரன் இருந்தும் பூமி உருண்டையாக இருப்பதால் அது வெவ்வேறு காலத்தில் தோன்றுகிறது. கிழக்கு நாடுகளிற் தோன்றிய பின்னரே மேற்கு நாடுகளுக்குத் தெரியும் எனவே எவ்விதம் உலக முழுதுக்கும் ஒரு குறிப்பிட்ட பிறைத்தேதியைத் தேர்ந்தெடுப்பது என நினைக்கலாம். சூரிய கதியும் இதே விதம்தான் நிகழ்கிறது. அதைப் பின்பற்றிக் கணிக்கும் ஒரு குறிப்பிட்ட தேதி உலகெங்கும் ஒன்றாகவே இருக்கிறது. ஏனெனில் அவ்விதம் இருக்கும்படி ஏற்படுத்திவிட்டனர். பசிபிக் மகாக்கடலில் அகில உலக தேதிக்கோடு என்ற மீனை

"பிராண மித்ரா"

கெட்டுப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, துரித ஸ்கலிதம். ஸ்திரீகளை மனத்தில் நினைத்தவுடனே, தொட்டவுடனே இந்திரியம் வெளியாதல், நபுஞ்சகம், இந்திரிய ஒழுக்கு, சொப்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, தேகம் மெலிதல், நடுக்கம், வீரிய மின்மை முதலிய ராஜ உறுப்புக்கள் சம்பந்தமான சகலமும் நீங்கி. பீமன் பலம் பெற நிகரற்ற காயகல்பமாகும். 'பிராண மித்ரா சாப்பிடும் காலத்தில் 'மதன லேபம்' ஆண்குறி வளர்ச்சிக்குக் குறியின் மேல் தினமும் பூசிக்கொண்டு வரவும் பத்தியமில்லை. பூரண குணத்திற்கு 2 டின் "பிராண மித்ரா" அவசியம் சாப்பிடவும். 1 டின் விலை ரூ 6—0—0. (20 நாள் மருந்து)

இலங்கை அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, 1 ஜீவமித்ரா, 1 மதனலேபம் மூன்று மருந்துகளின் விலை ரூ 18-75 சதம். இலங்கை தபால் செலவு ரூ 2-50 சதம். இலங்கை சுங்கத் தீர்வை ரூ 4-57 சதம். மலாய் அன்பர்களுக்கு பூரண குணத்திற்கு 40 நாள் 2 டின் பிராண மித்ரா, ஒரு ஜீவ மித்ரா, ஒரு மதன லேபம் ஆகிய மூன்று மருந்துகளின் விலை ரூ 18-12-0. மலாய் நாட்டிற்கு தபால் செலவு ரூ 6-0-0.

முக்கிய கவனிப்பு ;-மலாய் நாட்டிலுள்ளவர்கள் மருந்தின் கிரயத்தையும் தபால் செலவையும் சேர்த்து ஏர்மெயில் மணியாடர் மூலம் அல்லது 37 ஷில்லிங் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி ரிஜிஸ்டர் தபாலில் அனுப்பவும். முன்பணம் இல்லாமல் மருந்துகளை அனுப்ப முடியாது.

மலாய் நாட்டிலுள்ளவர்கள் எமது பதிலைச் கோருபவர்கள் 1 ஷில்லிங் போஸ்டல் ஆர்டர் அனுப்பவும்.

டாக்டர் கே. கே. ராமன், (ரிஜிஸ்டர்டு).
கேரள வைத்தியசாலை (மு 6).
தபால் பெட்டி நெ. 473, வேப்பேரி சென்னை-7.

சிகக் கோட்டை ஏற்படுத்தி அதைக்கொண்டு தேதிகளைக் கணக்கிடுவது போன்று பிறைத் தேதியையும் கணக்கிடலாம். ஒரு நாட்டில் கடிகாரக் கால அளவில் ஒற்றுமை நிகழ்வதற்காக ஒரு குறிப்பிட்ட ஊரின் (இந்தியாவில் அலஹாபாத், அங்கிலாந்தில்கிரீன்விச்) ஸ்தல நேரத்தை (Local Time) நாடு முழுதுமுள்ள எல்லா இடங்களுக்கும் பொது நேரமாக (Standard Time) ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது போன்றே பெருநாட்கள், நோன்பு போன்ற இஸ்லாமியத் திருநாட்களுக்கெல்லாம் உலக முழுதுக்கும் ஒற்றுமையாக ஒரு குறிப்பிட்ட தேதியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக மக்காவில் பிறை தோன்றும் தேதியைக் கணக்கிட்டு அதையே உலகெங்கும் பின்பற்றலாம். இவ்வாறு பிறைத் தேதியைக் கணக்கிட்டு உலகுக்கறிவிக்க விஞ்ஞானிகள் சேர்ந்த ஸ்தாபனம் ஒன்று நிறுவப்படவேண்டும்.

இப்பிரச்னை இன்றைய முஸ்லிம் அறிஞர்களை மட்டும் சிந்திக்கச் செய்யவில்லை. கி. பி. 11ம் நூற்றுண்டின் முன்பாதியில் வாழ்ந்த விஞ்ஞானிகளுள் தலை சிறந்தவரான அல்பிருனி இக்கருத்தை அக்காலத்திலேயே தெரிவித்தார். விஞ்ஞான வரலாற்றிலே இவர் வாழ்ந்த காலம் 'அல்பிருனியின் காலம்' என அழைக்கப்படுகிறது. சிறந்த வான சாஸ்திரியாக விளங்கிய இவர் வான நூல் கணிதப்படி கணக்கிட்டுப் பெரு நாட்களின் பிறையைத் திட்டமாகக் குறிக்கலாம் என்றும். இது குர்ஆன், ஹதீஸ், ஷரீஅத் சட்டங்களுக்கு முரணானது அல்ல என்றும் கூறியிருக்கிறார்.

இதைப்பற்றி சிந்தித்தவர்களுள், உலகின் பழம் பெரும் பல்கலைக் கழகமாகிய கெய்ரோ அல் அஜ்ஹரின் தலைவர் ஷெய்க் அப்துர் ரஹ்மான் என்பவரும் ஒருவர் சிந்தித்ததோடு இவர் நின்றுவிடவில்லை; செயலாற்றவும் செய்தார். அல் அஜ்ஹரின் துணைத் தலைவர் ஷெய்க், அல் ஹாலைனி சுல்தான் என்பாரின் தலைமையின் கீழ் முஸ்லிம் விஞ்ஞானிகள் நீதிபதிகள் சிலரைக் கொண்ட குழுவொன்றை இவர் நிறுவியுள்ளார். அகில உலக முஸ்லிம்கள் அனைவருக்கும் ஏற்ற ஒரு காலண்டரைத் தயாரித்து, இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன்வந்துள்ள இந்த முஸ்லிம் அறிஞர்களின் முயற்சியை இஸ்லாமிய உலகம் வரவேற்கு மென்பதில் ஐயமில்லை.

முஸ்லிம் முரசு

சந்தா விபரம்

(ஈத், மீலாத் மலர்களுடன்)

உள் நாடு

இந்தியா, சிலோன்

	ரூ.	அ.
தனி இதழ்	0	6
ஒரு வருடம்	4	8
அரை வருடம்	2	8
2 வருடம்	8	8
வெளி நாடு		
தனி இதழ்	0	8
ஒரு வருடம்	6	0
அரை வருடம்	3	8
2 வருடம்	11	0

ஒருவருடத்திற்குக் குறையாத சந்தா செலுத்துகிறவர்களுக்கு மட்டுமே ஈத், மீலாத் மலர்கள் குறைந்த விலைக்கு அனுப்பப் படும்.

மானேஜர்,

முஸ்லிம் முரசு

தபால் பெட்டி நம்பர் 258

18, ராமசாமித் தெரு, மண்ணடி

சென்னை-1.

[ஒவ்வொரு நாளும் ஏராளமான அன்பர்கள் கேள்விக் கடிதங்கள் வரைகின்றனர். எல்லாருடைய கேள்விகளுக்கும் ஒரே இதழில் பதில் அளிப்பது எளிதல்ல. ஒரே கேள்வியை அநேக அன்பர்கள் கேட்கின்றனர். ஆகையால், பதில் அளிக்கப்படாத கேள்விகளை நாம் மதிக்கவில்லை என அன்பர்கள் தவருக நினைக்கவேண்டாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேம். புனை பெயருடன் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடையளிக்க வியலாது—ஆசிரியர்.]

எஸ். எம். பாஷா, மதுரை.

வட்டிக்குப் பணம் கொடுப்பது கூடாதென்பது போன்ற இஸ்லாமிய சட்டங்கள் இக்காலத்துக்குப் பொருந்தாதென்று சிலர் கூறுகின்றனர். இதற்கு என்ன சமாதானம் கூறுவீர்கள்?

30 வருட காலத்தில் இரண்டு உலகப் போர்கள் நிகழக் காரணமாயிருந்தது இன்றைய உலகப் பொருளாதார முறைதான் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இந்த நிலை அடியோடு மாறவேண்டும். மாருவிட்டால் உலகத்துக்குக் கதி மோட்சமில்லை. சென்ற மாதம் காஞ்சீபுரத்தில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் கலந்து கொண்ட தலைவர்களில் ஒருவரான பட்டவர்த்தன அவர்கள் வட்டிக்குப் பணம் கொடுக்கும் பழக்கத்தை ஒழித்தால்தான் சர்வோதய இலட்சியம் வெற்றி பெறும் என்று கூறியிருக்கின்ருர். பண்டித நேரு உட்பட விரும்புகின்ற சர்வோதய இலட்சியம் வெற்றி பெற வேண்டுமானல் இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கைதான் கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதில் சந்தேகமில்லை மக்களெல்லாரும் சகோதரர்கள் என்ற இலட்சிய சமுதாயத்தில் இஸ்லாமியப் பொருளாதாரக் கொள்கைகளே அடிப்படையாக அமையப் போகின்றன. இது நிகழுங்காலம் தொலைவில் இல்லை; அண்மையில்தான் இருக்கிறது.

ஏ. அமானுல்லாகான், பெங்களூர்.

இப்ராஹீம் நபி அந்தரங்கமாகவும், முஹம்மது நபி பகிரங்கமாகவும் விக்கிரகங்களை உடைத்தார்கள் என்று சொல்லப்படுகிறதே. அப்படியானல் நாமும் ஹிந்துக்களின் கோயில்களிலுள்ள விக்ரகங்களை உடைக்கலாமா?

இபராஹீம் (அலை) அவர்களைப் போல் இரகசியமாகவும், உடைக்கலாகாது. முஹம்மது நபியைப் போல் பகிரங்கமாகவும் உடைக்கக் கூடாது. மத விஷயத்தில் கட்டாயம் கூடாதென்று குர்ஆன் கூறுகின்றது மற்றவர்களின் பொய்யான கடவுள்களையும் தேவதைகளையும் பழித்துரைத்தல்கூட வேண்டாமென்று திருமறை நம்மைத் தடுத்து நிறுத்துகின்றது. கஅபாவிலுள்ள விக்ரகங்களை மக்கா வாசிகள் நம்பியும் வணங்கியும் வந்த வரையில் அந்த விக்ரகங்களில் ஒன்றைக்கூட நபிகள் நாயகம் தொடவில்லை! விக்ரகங்களை வணங்குவதால் பயனில்லை என்று பிரசாரம்தான் செய்தார்கள், விக்கிரக வணக்கத்தை விட்டொழிக்குமாறு கூறினர்கள் ஆனல் நபிகள் நாயகம் மக்காவை

வென்றவுடன். அங்கிரா மக்களெல்லாம இஸ்லாத்தைத தழுவிக் கொண்டதால், அவர்களுக்கு விக்ர கங்கள் தேவைப்படவில்லை. எனவே, கஅபாவிலிருந்த விக்கிர மனைத்தும் அங்கிருந்து அகற்றப்பட்டன. இதுதான் உண்மை.

வி. ஹுஸைனுர்,
பொள்ளாச்சி.

'யா அய்யுஹல்லதீன ஆமனூ' என்று திருமறையில் பல இடங்களில் வருகிறது. இதன் பொருளென்ன?

'ஓ! ஈமான் கொண்ட மக்களே!' என்று முஸ்லிம்களை இறைவன் அன்புடன் அழைக்கிறன்.

பி. என். ஏ. ரஹ்மான்,
சென்னை.

திருக்குர்ஆன் வசனங்களை இரட்டை எண்களால் (உதாரணம்: 3:185) குறிக்கின்றனர். இவ்வெண்கள் எதைக் காட்டுகின்றன?

முதல் எண் அத்தியாயத்தையும், இரண்டாவது எண் வாக்கியத்தையும் குறிக்கின்றன. மேற் கூறிய உதாரணத்தில் திருமறையின் 3 ம் அத்தியாயத்தில் 185 ம வாக்கியத்தில் குறிப்பிட்ட வசனம் வருகிறதென்று காட்டப்படுகிறது.

எஸ். எச். எஸ். அபுதாஹிர்,
இளையாங்குடி.

தொழுகையின் இருப்பில் 'அத்தஹிய்யாத்' ஓதும்போது வலது ஆள்காட்டி விரலை நீட்டுவதேன்?

அத்தஹிய்யாத்து' ஓதும்போது அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹு' என்னுமிடத்தில ஆள் காட்டி விரலை நீட்டவேண்டும். ஏனெனில் இதன் பொருள் ஒரே இறைவனைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை என்பது. உள்ளம் உடல் வாக்கு மூன்றும் தொழுகையில் ஈடுபடவேண்டும். எனவே இவ்விடத்தில் உளத்தால் உணர்ந்து, வாயால் உச்சரிக்கும்போது வணக்கத்துக்குரிய இறைவன் ஒருவனே என்பது விரலாலும் சுட்டிக் காட்டப்படுகிறது.

வி. ஏ. ராஜ் முஹம்மது,
பண்டாரவாடை.

மதச் சார்பற்ற இந்திய அரசாங்கம் புத்தர் விழாவைக் கொண்டாடுவதேன்?

மதச் சார்பற்ற சர்க்கார் என்றால், மத விரோத சர்க்கார் என்று அர்த்தமில்லை; 'எம்மதமும் சம்மதமே' என்ற நல்ல கொள்கையுடையதென்பதே பொருள். ஆனால் பாரத அரசாங்கம் புத்தரின் பரி நிர்வாண விழாவைக் கொண்டாடியதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. புத்தர் இந்தியாவில் பிறந்தார். ஆனால் அவரது மார்க்கமும் உபதேசங்களுமான 'தம்மபதம்' சீனு, ஜப்பான் முதலிய நாடுகளில் தான் கொண்டாடப்படுகிறது "கோடிக்கணக்கான வெளி நாட்டினர் பின்பற்றும் புத்தரை, அவரது தாயகம் ஏன் புறக்கணித்து விட்டது?" என்ற கேள்விக்கு சீனு ஜப்பான் முதலான வெளி நாடுகளுக்குச் செல்லும் நம் அரசாங்கத் தூதர்கள் சரியான பதில் கூற முடியவில்லை. ஆதலால் தான், வெளி நாடுகளில் வாழும் புத்த மதத்தினர் வியந்திடுமாறு பரி நிர்வாண தினத்தைப் பாரத நாடு படாடோபமாய்க் கொண்டாட வேண்டுமென்று பண்டித நேரு விரும்பினர் பாரதமும் பிரமாதமாய்க் கொண்டாடி விட்டது.

ஒய். முஹம்மது யாஸீன்,
சீர்காழி.

இறந்த ஆட்டைப் புசிக்கக்கூடாதென்றும் இறந்த மீனை மட்டும் உண்ணலாமென்றும் விதிக்கப்பட்டிருப்பதேன்?

பறவை மிருகங்கள் முதலிய பிராணிகளின் இரத்தம் சூடுள்ளதாயிருக்கும் ஒவ்வொரு பிராணியின் இரத்தமும் ஒரு குறிப்பிட்ட உஷ்ண நிலையிலிருக்கும். அப்பிராணி பாலை வெய்யிலில் இருந்தாலும் பனி மலையிலிருந்தாலும் அதன் உஷ்ண நிலை மாறுது ஏறக்குறைய பறவைகளுக்கு 110 பாரன்ஹீட் டிகிரியும், மிருகங்களுக்கு 100 டிகிரியும்

உஷ்ண நிலையாக இருக்கும் மனிதனின் சாதாரண உஷ்ண நிலை 98½ டிகிரியாகும் இவைகளில ஆடு. கோழி போன்ற சில பிராணிகளின் இறைச்சிதான் உண்பதற்கு ஏற்றது. ஆனால் அவைகளின் இரத்தம் சுகாதாரத்துக்கு ஏற்றதல்ல. இவைகளை உயிருடன் அறுத்தால் தான் எல்லா ரத்தமும் வெளியேறும். செத்த பிராணிகளின் ரத்தம் உடலுக்குள்ளேயே உறைந்து விடுவதால் அவை உண்பதற்கு ஏற்றதல்ல.

மேற்கூறிய பிராணிகளை உஷ்ண உடல் பிராணிகள் என்பர். இவைகளின் இரத்தம் அசுத்தமானது மீன். தவளை, நண்டு. பாம்பு. பல்லி போன்ற பிராணிகளின் இரத்தம் ஒரு குறிப்பிட்ட உஷ்ண நிலையில் இருப்பதில்லை அவை வாழும் இடத்தின் வெளி உஷ்ண நிலையே அவைகளின் உஷ்ண நிலையாக இருக்கும் இவைகளைக் குளிர்ந்த இரத்தப் பிராணிகள் என்பர். இவை முட்டை யிடுபவை

இவைகளின் உடலிலுள்ள சொற்ப ரத்தத்தால் இவை வாழும் நீர் நிலைகள் அசுத்த மடைவதில்லை. எனவே இறந்த பின் இவைகளை உண்பதால் தீங்கில்லை

அ. முஹம்மது இபுனுஹாஸ், பாலிங். மலாயா.

'மேற்கிலோ, கிழக்கிலோ, உங்கள் முகங்களைத் திருப்பி விடுவதால் மட்டும் நன்மை செய்தவர்களாக ஆகிவிட மாட்டீர்கள். தொழுகையுடன் ஜகாத்தும் கொடுத்து, ஏழைகளுக்கும். மற்றும் சகுதியுடையோர்க்கும் உதவி செய்து. வாக்குறுதியை நிறைவேற்றி, பொறுமையையும் கடைப்பிடிப்போரே உண்மையாளவர் என்று இறைவன். கூறுகிறான் (2:177) பிற நற்காரியங்களைச் செய்யாமல், தூய உள்ளத்துடன் தொழுகையை மட்டும் நிறைவேற்றுவதினால்பலன் உண்டா?

தூய உள்ளத்துடன் தொழுபவன் எவ்வித தீய காரியத்தையும் செய்யமாட்டான். தன்னாலியன்ற வரை தான தருமங்கள் செய்வான். எவனுடைய தொழுகை அவனைத் தீய காரியங்களை விடும் தடுக்கவில்லையோ, நன்மைகளைச் செய்யத் தூண்டவில்லையோ, அத்தொழுகையால் எவ்வித பயனுமில்லை என்று மேற்கூறிய திருக்குர்ஆன் வாக்கியம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இறைவனிடம் உள்ளம் ஈடுபடாமல் உடல்மட்டும் கிப்லாவை நோக்கித் தொழுவதாலும் 'பலனில்லை என்னும் உண்மையும் இத்திருவசனத்தால் அறிவிக்கப்படுகிறது.

எஸ். ஏ. வஹ்ஹாப், ராஜகிரி.

முஹம்மது நபி யவர்களுக்கு முன்பு உலகில் உதயமான ஒரு இலட்சத்து இருபத்தினாலாயிரம் நபிமார்களில் புத்தரும் ஒருவர் என்று நான் நம்புகிறேன். இதில் குற்றம் ஏதேனும் உண்டா?

உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் மக்களுக்கும் இறைவன் தனது திருத்தூதர்களை அனுப்பி யிருப்பதாக திருகுர்ஆனில் பல இடங்களில் சொல்லப்படுகின்றது 'இறைத்தூதர் வரப்பெறாத மக்களே கிடையாது' (35:24) என்று குர்ஆன் கூறுகிறது. 'ஒவ்வொரு நாடும் தனது தீர்க்கதரிசியைப் பெற்றிருக்கிறது (10:47) என்றும் இஸ்லாத்தின் திருமறை இயம்புகின்றது. 'அத் தீர்க்கதரிசிகளிற் சிலரைப் பற்றி உமக்குத் தெரிவித்துள்ளோம். மற்றும் பலரைப் பற்றி உமக்குத் தெரிவிக்கவில்லை' (4:164) என்று திரு நபியவர்களுக்கு இறைவன் கூறுகின்றான். முதலாவது டரயஸ் (துல்கர்னைன்) மன்னன் உட்பட 25 நபிமார்களைப் பற்றியே திரு குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. மற்றவர்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. எனவே ஏனைய நாடுகள் தங்களுக்கு வழிகாட்டிகளாகப் பின்பற்றும புத்தரைப் போன்ற மகான்களைத் தேசியத் தீர்க்கதரிசிகள் என்று முஸ்லிம்கள் நம்பலாம் என்பதற்குக் குர்ஆனில் ஆதாரமிருக்கிறது.

"கமால்"

புத்துலகமைப்பு

தமிழாக்கம் : அல்ஹாஜ் பா. தாவூத்ஷா, பீ. ஏ.,

"அஹிம்ஸா முறையை பின்பற்றி நம் நாட்டின் இராணுவச் செலவுகளைக் குறைக்க வேண்டும்" என்கிறார் ராஜாஜி. உலக அமைதிக்கு ராணுவமே உதவாதென்கிறார் விநோபாஜி. சென்ற இரு உலக மகா யுத்தங்களும் மனிதர்களை ராக்ஷஸர்களாக்கி, அவர்கள் வதியும் அவனியே கூட அரக்கர் வாழும் உலகமாக மாறிவிட்டதென்று அரற்றுகின்றனர் பல அறிஞர்கள். ஆனால் உண்மையான சாந்தியும், அமைதியும் நல்லொழுக்கமும், மனித நாகரிகமும் மிகச்சரியான முறையில் இப்புவியிடை நிலவ வேண்டுமென்றால், அவற்றை 'இஸ்லாம்' என்னும் சாந்திமதமே நிலைநிறுத்த முடியும் என்பதைச் சரித்திர பூர்வமாகவும், பிரத்தியக்ஷ பூர்வமாகவும் நன்கு விளக்கிவைக்கும் அபூர்வமான நூலே இப் "புத்துலகமைப்பு" காலஞ்சென்ற மௌலானா முஹம்மதலிஎம். ஏ . எல். எல். பீ. யின் "THE NEW WORLD ORDER" என்னும் உலகப் புகழ்வாய்ந்த அருமையான ஆங்கில நூலின் தமிழாக்கம் இது.

விலை ரூ. 2—0—0 தான். வி. பி. செலவு வேறு. ரிஜிஸ்டர். தபால் செலவுடன் 2-12-0 முன்பணம் அனுப்பலாம்.

卐

எம்பெருமான் பேசுகிறார்கள் !

நபிபெருமானின் நாற்பது பிரசங்கங்கள்

ஆர். பி. எம். கனீ, பி. ஏ பி, எல்., தயாரித்தது

உலகை உய்விக்க வந்த உத்தமர் எம்பெருமான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நிகழ்த்திய நாற்பது பிரசங்கங்கள் இந்நூலில் உள்ளன. அரபு சமுதாய வாழ்வில் மகத்தான மாறுதலை உண்டாக்கியதில் இந்தப் பிரசங்கங்களுக்கும் முக்கிய பங்கு உண்டு. இதிலுள்ள பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் முக்கியமானது—படிப்பவர்களை அறிவும் உணர்ச்சியும் பெறச் செய்வது. மிகவும் ஆதார பூர்வமான மூலங்களிலிருந்து திரட்டித் தொகுக்கப்பட்ட பிரசங்கங்கள் இவை.

விலை ரூபாய் 2—0—0 வி. பி, செலவு வேறு. ரிஜிஸ்டர் தபால் செலவுடன் 2-12-0 முன்பணம் அனுப்பலாம்.

அன்பு நூல் நிலையம்,

18, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை—1.



Edited & Published by S. A. Shukoor, 18, Ramasamy Street. Ma
Printed by M. M. Thanigaimalai. at the Senguntha Mithran
Madras-1.